janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 84 | 2021 நவம்பர் 14 - நவம்பர் 20 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 33




ஆளுவோருக்கு ஏற்றவாறு நீதித்துறையா?
சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக செயல்பட்ட சஞ்சீவ் பானர்ஜி எந்தவித உரிய காரணமும் >>> ப 15



தமிழருக்கு தாய் மதம் உண்டா?
இஸ்லாமியர்களும், கிறிஸ்துவர்களும் தங்கள் தாய் மதத்திற்கு திரும்ப வேண்டும்! கிறிஸ்துவம் ஐரோப்பாவிலிருந்து வந்தது >>> ப 08



பாதுகாப்பான வீடு... கனவு நனவாகுமா?
அண்மையில் தொடங்கிய வட கிழக்கு பருவமழை தீவிரமாகி, தொடர் கனமழையாக, வழக்கத்தை விட அதிகமாக கொட்டித் தீர்த்து >>> ப 05



# தோழர் நடேச. தமிழார்வன் படுகொலைக்கு கண்டனம்!

## மாநிலம் முழுவதும் ஆர்ப்பாட்டம்



**தோழர். நடேச. தமிழார்வன் படுகொலையை வன்மையாகக் கண்டிக்கிறோம். படுகொலை செய்த சமூக விரோதக் கும்பலை முழுமையாக கைது செய்ய வேண்டும். கொலைக் குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி விடாமல் தண்டிக்கப்பட வேண்டும்.**

திருவாரூர் மாவட்டத்தில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நீடாமங்கலம் ஒன்றியச் செயலாளர் நடேச. தமிழார்வன் நீடாமங்கலம் கடைத் தெருவில் சமூக விரோதக் கும்பலால் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.



மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகளிலும், விவசாயிகள் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் பயன்களை அவர்களுக்கு பெற்றுத் தருவதிலும் முனைப்புடன் செயல்பட்டு வந்த நடேச. தமிழார்வன், அனைத்துத் தரப்பு மக்களின் நன் மதிப்பை பெற்றுத் திகழ்ந்தவர். இவர் சமூக விரோத சக்திகளால் படுகொலை செய்யப்பட்ட கொடூரம் பொது மக்களிடம் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த மிருகத்தனமான, கொடுங் குற்றச் செயலைக் கண்டித்தும், குற்றவாளிகள் அனைவரும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிவிடாமல் கடுமையாக தண்டிக்கப்பட வலியுறுத்தியும், காவல் துறை நேர்மையான விசாரணையை உறுதிசெய்யக் கோரியும் தமிழ்நாடு முழுவதும் நவ. 11, 12 தேதிகளில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொண்டது. இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார். இதன் அடிப்படையில் தமிழகம் முழுவதும் நவ.11, 12 ஆகிய தேதிகளில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

**தஞ்சாவூர்:** தஞ்சை ரயிலடியில் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி தலைமையில் நடைபெற்றது. தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி.மகேந்திரன் கண்டன உரையாற்றினார். பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் பங்கேற்றனர்.

**திருவாரூர் மாவட்டம்:**

கோட்டூர் பேருந்து நிலையம் அருகே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச்செயலாளர் வை.சிவ புண்ணியம், திருத்துறைப் பூண்டி சட்டப்பேரவை உறுப்பினர் க.மாரி முத்து, கோட்டூர் ஒன்றிய பெருந் தலைவர் மணிமேகலை முருகேசன், ஒன்றிய செயலாளர்(பொ) எம்.செந்தில் நாதன், வி.தொ.ச. ஒன்றிய செயலாளர் ஜெ.ஜெயராமன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் மஞ்சுளா இலரா, மாதர்சங்க மாவட்ட தலைவர் ஆர்/ சுலக் சனா, ஆர்.உஷா, நல்ல சுகம் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர்.

**மன்னார்குடி:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் வை.செல்வராஜ், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் மாலா பாண்டியன், நகர செயலாளர் வி.கலைச்செல்வன், இளைஞர் மன்ற மாவட்ட செயலாளர் துரை. அருள்ராஜன் ஆகியோர் தலைமையில்

தொடர்ச்சி 03ம் பக்கம் >>

## எதிரும் புதிரும்

இனி வரும் நாள்களில் தேசத்தை புதிய உயரத்துக்கு கொண்டு சொல்ல வேண்டும்
- மோடி



மதக் கலவரத்தையும், சாதி கலவரத்தையும் சொல்றாரோ?

சூர்யாவின் பதில் ஆணவத்துடன் இருக்கிறது! - பா.ம.க பாலு



நான் சொன்னத சூர்யா சொன்னதா சொல்றியே அண்ணத்தே!




## படத்திறப்பு

தமிழ்நாடு விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்

தோழர் டாக்டர் **வே.துரைமாணிக்கம்**

படத்திறப்பு நிகழ்வு

4.12.2021 சனிக்கிழமை காலை 10 மணி
மாணிக்கம் மஹால், பாப்பாநாடு - தஞ்சை
பங்களிப்பீர்! பங்கேற்பீர்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு மாநிலக்குழு




# பாசறை நோக்கி படைகள் திரும்பட்டும்! – 9

## பேரன்புமிக்க தோழர்களே!

**நமது நாட்டின் எல்லையைப் பாதுகாக்க அணி வகுத்து நிற்கும் நமது இராணுவம் மிகுந்த சுகத்தோடு களம் காணவில்லை.**

கொட்டுகிற பணியில், மிகக் கடுமையான குளிரைத் தாங்கிக்கொண்டு, வெப்பம் ஆனாலும், கடுமையான மழையானாலும், குளிரானாலும் எவை குறித்தும் கவலை கொள்ளாது எனது தாய்நாடே எனக்கு முக்கியம் என்று நெஞ்சுறுதியோடு களம் காண்கிறார்கள்.

தாய், தந்தை, மனைவி, மக்கள், வீடு, நிலம், சொத்து என்று எதனைப் பற்றியும் கவலை கொள்ளாது தாய் நாட்டிற்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்ட மகத்தான தேசபக்தர்கள்.

சீனா படையெடுத்து வந்த போதும், பாகிஸ்தான் பலமுறை பகை கொண்ட போதும், பங்களாதேஷ் யுத்தம் வந்த போதும், நமது படை வீரர்கள் அதனை எதிர்கொண்டு வீர சாகசம் புரிந்து நமது நாட்டையும், நமது மக்களையும் பாதுகாத்திட்ட மகத்தான வீரர்கள் ஆவர்.

எந்நேரமும் தடித்த உடையுடன், கனத்த பூட்ஸ்களும் அணிந்து தோளில் துப்பாக்கியுடன் வலம் வரும் அர்ப்பணிப்பு மிக்க மிகச்சிறந்த தேசபக்தர்கள்.

எல்லையை காக்க எதிரிகளை களம் கண்டு வெற்றிவாகை சூடிய மகத்தான போர்வீரர்கள்.

எல்லையைக் காத்தோம், மண்ணைக் காத்தோம், தம் தாய்நாட்டின் மக்களைக் காத்தோம், எதிரிநாட்டின் படைகளை புறமுதுகிட்டு ஓடச் செய்தோம், வெற்றி, வெற்றி என்று வீர முழக்கமிட்டு, வெற்றி பெருமிதத்துடன் நமது ராணுவ வீரர்கள் பாசறையை நோக்கி திரும்பினர்.

பாசறை என்பது என்ன? இராணுவ முகாம் ஆகும்.

கூடாரம் அமைத்து, அத்தகைய கூடாரத்திற்கு படைகள் தற்போது திரும்பிவிட்டன.

எதற்காக திரும்புகின்றன? ஓய்வு எடுப்பதற்காகவா? உண்டு மகிழ்ந்து இன்புற்று இருக்கவா? மனைவி, மக்களோடு கொஞ்சி குலாவிடவா? இல்லை, இல்லவே இல்லை ஒரு போதும் அவைகளுக்காக அல்ல!

பின் எதற்காக பாசறைக்கு திரும்பினார்கள்?

ஆம் நடந்திட்ட போர், அம்மகத்தான போரில் கிடைத்திட்ட வெற்றி, தோல்விகள் கற்றுத்தந்த அனுபவம் என்ன? போர் என்றால் இருபக்கமும் இழப்பு ஏற்படத் தானே செய்யும்?

யாருக்கு இழப்பு அதிகம்? நமது படைக்கா? அல்லது எதிரிப்படைக்கா?

நமது வியூகத்தில் குறைபாடா? என்பது குறித்த ஆய்வு நடத்திட நாம் பயன்படுத்திட்ட ஆயுதங்கள் அனைத்தும் சரியாக இருக்கின்றனவா? பழுதுபட்டு உள்ளதா? அவ்வாறு எனில் உடன் அதனை பழுது நீக்கி பயன்பாட்டிற்கு மீண்டும் பயன்படுத்திட என்ன செய்ய வேண்டும்?

மேலும் எவ்வளவு ஆயுதங்கள் தேவை? அவை குறித்து பட்டியலிட்டு, உடனடியாக நமது மேலதிகாரிகளுக்கு தெரிவித்து, அவைகளை பெற்றிட நடவடிக்கை எடுத்திடல் வேண்டும்.

தேவையான அளவிற்கு உணவு மற்றும் மருத்துவ கருவிகள், மருந்து மாத்திரைகள் உள்ளனவா? இவை போன்ற எண்ணற்ற பிரச்சனைகள் குறித்து ஆராய்ந்து மீண்டும் களத்திற்கு சென்றிட, அனைத்து ஆயத்தங்களையும் மேற்கொள்ளவே இராணுவம் பாசறை நோக்கி வருகின்றது.

தங்களை சரி செய்து கொண்டு மீண்டும் களத்திற்கு சென்று, முன்னைக் காட்டிலும் வேகமாக துடிப்பாற்றல் மிக்க படையாக அணிவகுத்து எல்லையில் நிற்கின்றது.

ஒரு பட்டாலியன் எல்லைக்கு செல்ல, மறு பட்டாலியன் பாசறைக்கு திரும்புகின்றது; தன்னை தயார்படுத்திக் கொள்கின்றது.

ஒன்றா? இரண்டா? இல்லை, இல்லை. பல பட்டாலியன்கள். இவைகள் களம் காணவும், முகாமிற்கு திரும்பவும், மீண்டும் செல்லவும் என தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

நாட்டில் எங்கே இயற்கைச் சீற்றத்தால் மக்கள் பாதிக்கப்பட்டாலும், பேரிடர்களால் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாக்க, அழைத்திட்ட சில மணி நேரங்களில் மின்னல் வேகத்தில் நமது படை அங்கே சென்று, மக்களைப் பாதுகாத்து இடர்பாடுகளை ஆச்சரியப்படத்தக்க விதத்தில் சரி செய்து சாதனை படைத்து வருவதை நாம் கண்கூடாகக் கண்டு வருகின்றோம்.

> **நம் நாடு அன்னிய நாட்டுக்கு அடிபணியாது, சொந்தக்காலில் தலை நிமிர்ந்து நிற்க உருவாக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களை ஒன்றன்பின் ஒன்றாக தனியாருக்கு தாரைவார்த்து, அதானியும், அம்பானியும், டாட்டாவும் இன்னபிற பெரும் முதலாளிகளும் கொள்ளை லாபம் ஈட்டி மேலும், மேலும் லாபம் ஈட்டி உலக செல்வந்தர்களாக உருவாகிட சட்டபூர்வமாக வழிவகை கண்டுள்ளார்கள்.**

தோழர்களே இராணுவப் படை வீரர்களுக்கும், நமக்கும் வேறுபாடு உண்டா?

ஒருபோதும் இல்லை– இராணுவம் கண் துஞ்சாது கடமையாற்றி, நாட்டை பாதுகாத்து வருகின்றது, அவ்வாறு நாமும் களத்தில் நிற்கின்றோம்.

அன்னிய நாட்டு படைகள் படையெடுத்து, நமது நாட்டை அபகரிக்க முயல்வது போன்று, நம்மை ஆட்சி புரியும் ஆட்சியாளர்கள் நமது நாட்டு மக்களை சூறையாடி வருகின்றார்கள்.

நமது விவசாயிகளை, தொழிலாளர்களை, விவசாயத் தொழிலாளர்களை, பெண்களை, நமது எதிர்கால சிற்பிகளான மாணவர்களை, இளைஞர்களை, குழந்தைகளை இரக்கமற்ற முறையில் தொடர்ந்து வஞ்சித்து வருகின்றனர்.

மக்கள் பெரும் நம்பிக்கையுடன் வாக்களித்தார்கள்.

படித்து பட்டங்கள் பெற்று படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கும், நல்ல ஊதியம் கிடைக்கும், நம்மை வளர்த்து ஆளாக்கி வறுமையிலும், நம்மை படிக்க வைத்து அழகு பார்த்த பெற்றோருக்கு உதவிட முடியும், கொடிய வறுமையிலிருந்து தமது குடும்பத்தை கட்டிக்காக்க முடியும். திருமணம் செய்து மனைவியோடு, குடும்பத்தினருடன் மகிழ்ச்சி பொங்கிட தம்மையும், தமது குடும்பத்தையும் வறுமையின் காரணமாக, குடிசை வீடு காரணமாக, ஏளனம் செய்தோர், எள்ளி நகையாடியோர் வியக்கும் வண்ணம், அரசியலமைப்புச்சட்டம் கூறியிருப்பது போன்று, பிறர் மதிக்கத்தக்க வாழ்க்கையை வாழ்ந்து காட்டிட முடியும் என்ற நம்பிக்கையோடு, வேலை கிடைத்துவிடும் என்ற எதிர்பார்ப்புடன் வாழ்ந்த இளைஞர்களை காந்தம் போல் கவர்ந்திட, ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை என்றனர்.

நம் நாட்டு பெருமுதலாளிகள் கொள்ளை கொண்ட, கணக்கில் காட்டாத கருப்புப் பணத்தை வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ளார்கள். அத்தகைய கருப்புப் பணத்தை மீட்டு, ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும், ரூபாய் பதினைந்து அல்ல, பதினைந்தாயிரம் அல்ல, பதினைந்து லட்சம் ரூபாய் வங்கிக் கணக்கில் வரவு வைப்போம் என்று கூறினார்கள்.

விவசாயப் பெருங்குடி மக்களின் இன்னல்கள் போக்கிட, வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின், அறிக்கையை ஏற்று, உற்பத்தி செலவை கணக்கிட்டு அதனை விட ஐம்பது சதவீதம் கூடுதலாக, விவசாய உற்பத்தி விளை பொருட்களுக்கு விலை நிர்ணயித்து வழங்கப்படும் என்றார்கள்.

மீனவ பெருமக்களுக்கு அண்டை நாடுகளால் ஏற்படும் துன்ப துயரத்தில் இருந்து பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுதி அளித்தார்கள்.

நாட்டின் வளர்ச்சி என்ற ஒற்றை குறிக்கோளுடன் அரசு செயல்படுமென்று உறுதியளித்தார்கள்.

இவைபோன்று இன்னும் எண்ணற்ற உறுதிமொழிகளை, வாக்குறுதிகளை நா கூசாமல் நாடு முழுவதும் வாரி, வாரி வழங்கிட்ட மோடி மற்றும் அவரது சகாக்கள் கடந்த ஏழாண்டு காலத்தில் சாதித்தது என்ன?

வேலையின்மையை போக்கி வேலை கொடுப்பதற்கு, கொடுத்திட்ட வாக்குறுதிக்கு மாறாக, வேலையில் இருப்போர் வீட்டுக்கு அனுப்பப்படுகின்றனர்.

தொழிலாளி வர்க்கம் நூறாண்டுகால போராட்டத்தால், தியாகத்தால், சிந்திட்ட ரத்தத்தால், பெற்றிட்ட சட்டங்களும், உரிமைகளும் பறிக்கப்பட்டு, 44 சட்டங்கள், நான்காக சுருக்கப்பட்டு விட்டன.

பன்னெடுங்காலமாக மறுக்கப்பட்ட கல்வி தற்போதைய ஆட்சியாளர்களால் விற்பனை சரக்காக்கி மீண்டும் மறுக்கப்படுகின்றது.

மனுதர்ம கல்வி மீண்டும் வஞ்சமாய் திணிக்கப்படுகின்றது.

இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகின்ற வரையில் இந்தி திணிக்கப்பட மாட்டாது என்று நாட்டின் முதல் பிரதமர் நேரு அளித்திட்ட வாக்குறுதிக்கு எதிரான முறையில் இன்றைய மோடி அரசு செயல்படுகின்றது.

அனைத்து மொழிகளுக்கும் சம வாய்ப்பு அளிக்க மறுத்து, இந்தி, சமஸ்கிருதம் என இரு மொழிகளுக்கு மட்டுமே சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பதினைந்து லட்சம் ரூபாய் தருவதாக கூறியவர்கள், உயர் மதிப்பு நோட்டு செல்லாது என்று திடீரென்று அறிவித்து ஏழை, எளிய அப்பாவி மக்களின் உயிரையும், இரக்கமற்ற முறையில் பழி வாங்கினார்கள். உயர் பொறுப்பில் இருந்த அரசியல் செல்வாக்கு படைத்தவர்களும், அரசியல் செல்வாக்கு செலுத்திடக் கூடிய நபர்களும், பெரும் தொழிலதிபர்களும், தங்களது கருப்பு பணத்தை சட்டபூர்வமாக வெள்ளை பணமாக மாற்றிக் கொள்ளையடித்திட வழிவகை கண்டார்கள்.

வேளாண் மக்களுக்கு இரட்டிப்பாக பணம் வழங்குவோம் என்று வாக்குறுதி கொடுத்தவர்கள்–இன்று விவசாயப் பெருங்குடி மக்களை முற்றிலுமாக நிலத்தை விட்டு வெளியேற்றிட மூன்று சட்டங்களை நிறைவேற்றி முடித்துவிட்டார்கள்.

மின்சார திருத்தச் சட்டத்தின் மூலமாக தனியாரிடம் ஒப்படைக்க உறுதிபூண்டுள்ளார்கள்.

நம் நாடு அன்னிய நாட்டுக்கு அடிபணியாது, சொந்தக் காலில் தலை நிமிர்ந்து நிற்க உருவாக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களை ஒன்றன்பின் ஒன்றாக தனியாருக்கு தாரை வார்த்து, அதானியும், அம்பானியும், டாட்டாவும் இன்னபிற பெரும் முதலாளிகளும் கொள்ளை லாபம் ஈட்டி மேலும், மேலும் லாபம் ஈட்டி உலக செல்வந்தர்களாக உருவாகிட சட்டபூர்வமாக வழிவகை கண்டுள்ளார்கள்.

இவை போன்ற எண்ணற்ற நடவடிக்கைகளை, மக்களுக்கு விரோதமான முறையில் ஒன்றிய அரசு மேற்கொண்டு வருகின்றது.

இத்தகைய நடவடிக்கைகளை நாம் கண்டும், காணாமல் இருந்தோமா? எது நடந்தால் நமக்கென்ன என்று பொறுப்பற்ற முறையில் அமைதி காத்தோமா? இவர்களை எதிர்த்தால் நம் மீது வழக்கு போட்டு சிறையில் அடைப்பார்கள், பழி தீர்த்து விடுவார்கள் என்று அஞ்சி நடுங்கி ஓரஞ்சாரமாக ஒளிந்து கொண்டோமா?

நாட்டை இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? நமக்கு ஏன் வெட்டி வம்பு என்று பொறுப்பற்ற முறையில் ஒதுங்கிக் கொண்டோமா?

இல்லை! இல்லை! இல்லை! அஞ்சி நடுங்கும் தொடை நடுங்கிகள் அல்ல நாம்!

என்னதான் செய்தோம்,

அடுத்த வாரம் சந்திப்போம். வணக்கம்.

**தோழமைமிக்க**


**இரா.முத்தரசன்**

தத்துவார்த்தம் 5



# பொருள்

எஸ். தோதாத்ரி



**மார்க்சியப் பொருள்முதல்வாதத்தை நமது மொழியில் கூறினால் அது உலகாயத வாதம் ஆகும். எனவே பொருள் பற்றிக் காண வேண்டியுள்ளது. பொருள் பற்றி மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோர் பல இடங்களில் பேசியுள்ளனர்.**

இருப்பினும் லெனின் பொருள் பற்றிக் கூறியுள்ளது மிகவும் தெளிவான ஒன்றாகும். லெனினைப் பொறுத்த மட்டிலும், பொருள் என்பது ஒரு தத்துவக் கருத்தமைப்பு. தத்துவவாதிகள் பொருளையும் பொதுமைப் படுத்துவதற்காக உருவாக்கியக் கருத்தாக்கம் இது.

இதன்படி பொருள் என்பது புறவயமானது. அது நமக்கு வெளியே சுதந்திரமாக உள்ளது. நமது புலன்களின் மூலமாக அது பிரதிபலித்து நமது மனதில் ஒரு பிம்பத்தை ஏற்படுத்துகிறது.

இதன் மூலம் பொருள் பற்றிய ஒரு கருத்தமைப்பை நாம் உருவாக்குகிறோம். இது அறிதலின் பாற்படும். இதன் மூலம் புறவுலகைப் புரிந்து கொள்கிறோம். இதனை வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்:

**“சுவைஒளி ஊறுஓசை நாற்றமென் றைந்தின்**
**வகைதெரிவான் கட்டே உலகு”**

பொருளை புலன்கள் மூலம் உணர்பவன் மட்டுமே உலகைப் புரிந்துகொள்ள முடியும் என்று வள்ளுவர் கூறுகிறார். இந்த வரையறை விஞ்ஞான ரீதியானது.

பொருள் என்பது புறத்தே உள்ளது. அது மட்டுமல்ல, அது எல்லா இடங்களிலும் உள்ளது. அதன் இருப்பு என்பது பரந்துபட்டது. இறைவனைக் கூறும் பொழுது “பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூர ணாநந்தமே” என்று கூறுவர். இதனை நாம் பொருளுக்கு பொருத்தி “நீக்கமற நிறைந்திருக்கும் பொருளே” என்று கூறலாம்.

உலகாயதச் சித்தர் என்பவர் கூறுகிறார்.

**“பொருளே உலகத்தின் சாகா உயிர்கள் – அந்தப் பொருளின் இயக்கமே வையப் பயிர்கள்”**

இந்தப் பொருள் எப்பொழுது தோன்றியது? எப்போது மறையும் என்று யாராலும் கூற முடியாது. அது அதுவாகவேத்தான் இருக்கும். அதன் தாக்கம் காரணமாக பழுத்த ஆன்மிகவாதிகள் கூட அதன் இருப்பை ஏற்றுக் கொள்கின்றனர்.

சைவ சித்தாந்தத்தில் பதி, பசு, பாசம் என்பன பேசப்படுகின்றன. இதில் பாசம் என்பது பொருள் சம்பந்தமானது. ஆனால், அது கீழ் நிலையில்தான் வைக்கப்பட்டுள்ளது. இராமானுசர் சடப்பொருளை ஆன்மாவின் உடல் என்று கூறுகிறார். சங்கரர் ஒருவர்தான் பொருளை முற்றிலுமாக மறுத்தவர்.

இந்தியத் தத்துவத்தில் சாங்கியம், வைசேடிகம் ஆகியன பொருள் பற்றிப் பேசுகின்றன. பௌத்தமும், சைனமும் பொருளை மறுக்கவில்லை. ஆனால், இவர்கள் உலகாயதவாதிகளை போல் பொருள் மட்டும்தான் உண்டு என்ற நிலைப்பாட்டினை மேற்கொள்ளவில்லை.

பல ஆன்மிகக் கருத்துக்களை கலந்தே இவர்கள் பொருள் பற்றிக் கூறியுள்ளனர். உலகாயதவாதி மட்டும்தான் **“பொருளன்றி மற்றொன்றும் இல்லை”** என்று கூறுகிறான்.

**பொருளானது மாறுகிறது என்பது மார்க்சியம். மாறிக் கொண்டே இருந்தால் பொருள் நிலைத்து இருக்காதா என்ற கேள்வி எழலாம். பொருள் மாறவும் செய்கிறது; நிலைத்தும் இருக்கிறது.**

நாம் நாற்காலியில் அமர்ந்திருக்கிறோம் அது மாறுகிறது, அது பூமியின் மேல் இருக்கிறது, பூமியும் மாறுகிறது. இதில் நிலைத்து இருப்பது என்பது சார்பு தன்மை உள்ளது. நாற்காலி பூமியை சார்ந்து நிலைத்து உள்ளது. பூமி சூரியனை சார்ந்து நிலைத்து உள்ளது. இவ்வாறு மாறுதலும், நிலைத்து இருத்தலும் பொருளின் பண்புகளாகும்.

நிலைத்து இருத்தலை மட்டுமே கண்டால் அது இயக்க மறுப்பியல் ஆகிவிடும். மாறுதலை மட்டுமே கண்டால் அது சூன்யவாதம் ஆகும். புத்த மதத்தின் ஒரு பிரிவினர், மாறுதல் மட்டுமே உண்டு வேறு எதுவும் இல்லை என்று கூறினார்கள். இவர்கள் சூன்யவாதிகள் எனப்படுகின்றனர்.

இது சங்கரரது மாய வாதத்திற்கு அடிப்படையாக இருந்தது எனலாம். எனவே கருத்து முதல்வாதிகள் உட்பட பொருளை ஏற்றுக் கொள்ளாதவர்கள் இல்லை எனலாம். திருமூலர் கூட, **“உடம்பார் அழியின் உயிரார் அழிவர்”** என்று கூறுகிறார்.

பொருள் மாறுகிறது. அது பல வகையாக உள்ளது. பல வடிவங்களில் உள்ளது. கண்ணுக்குத் தெரியாத துகள்களில் இருந்து மிகப்பெரிய கிரகங்கள் வரை பொருள்தாம். இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. இவை உயிர்ப்பொருள் (சித்து), சடப் பொருள் என்று இரு பெரும் பிரிவாக உள்ளன. மனிதன் உள்ளிட்ட விலங்குகள், செடிகள் அனைத்தும் உயிர்ப் பொருள்.

மலைகள், மண் போன்றவை சடப்பொருள். ஆனால் சடப்பொருளில் இருந்துதான் உயிர்ப்பொருள் தோன்றுகின்றன. இது விஞ்ஞானம்.

பொருளின் மற்றொரு பண்பு “காலமும் இடமும்” ஆகும். பொருள்கள் இடத்தில் இருக்கின்றன. பொருள் மறையும் பொழுது இடமும் மறைகிறது. பொருள்கள் கால அளவு கொண்டவை. அவை மறையும் பொழுது காலமும் மறைகிறது.

இதனை கருத்துமுதல்வாதிகள் மறுப்பர்; காலம் அலாதியானது என்று கூறுவர். அதேபோல் இடம் எல்லையற்றது என்றும் கூறுவர். அதேபோல் பொருள் இல்லாத பால்வெளி என்றும் கூறுவர். இவை பொருள்முதல் வாதத்திற்கு நேர் எதிரானவை ஆகும்.

தொடர்புக்கு: **98947 83657**

>> 01ம் பக்கத் தொடர்ச்சி

பெரியார் சிலை முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஒன்றிய துணை பெருந்தலைவர் வனிதா அருள்ராஜன், என்.மகேந்திரன், எஸ்.பாப்பையன், ஆர்.பூபதி, ஜி.மீனாம் பிகை, எஸ்.பாலமுருகன், சிவ.ரஞ்சித், என்.தனிக்கோடி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**திருத்துறைப்பூண்டி:** திருத்துறைப் பூண்டியில் காமராஜர் சிலை அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் கே.உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., தலைமை தாங்கினார். கட்சியின் மாநில கட்டுப்பாட்டு குழுவின் தலை வர் எம்.வையாபுரி, ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் அ.பாஸ்கர், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பி.வி.சந்திரராமன், ஒன்றிய செயலாளர் கே.பாலு, நகரச் செயலாளர் எம்.முருகேசன், மாவட்டக் குழு, ஒன்றிய, நகரக்குழு தோழர்கள் கலந்து கொண்டு கண்டன உரை நிகழ்த்தினர்.

**திருவாரூர்:** திருவாரூர் பழைய பேருந்து நிலையம் அருகில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் பி.எஸ். மாசிலாமணி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திருவாரூர் ஒன்றிய செயலாளர் கே.புலிகேசி, நகர துணை செயலாளர் பி.சின்னதம்பி உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர்.

**கோவை மாவட்டம்:** கோவையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் வி.எஸ்.சுந்தரம் தலைமை தாங்கினார். மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், மாநில செயற்குழு உறுப்பினர் நா. பெரியசாமி, மாவட்ட துணை செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட பொருளாளர் யூ.கே. சுப்பிரமணியன், ஆர்.ஏ.கோவிந்தராஜன், சி. தங்கவேல், பி.மௌனசாமி, ஜே.ஜேம்ஸ், சு. பழனிசாமி, கே.ரவீந்திரன், ஏ. சுப்பிரமணியன், ஏ. அஸ்ரப் அலி, பி. முருகன், எம். நிர்மலா, ஜி.நாராயணசாமி, கே.புருஷோத்தமன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் மாவட்டம் சேத்தூரில் நகர செயலாளர் ராஜா தலைமை வகித்தார். மாநில நிர்வாக குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம், மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், இளைஞர் மன்ற மாவட்ட செயலாளர் கணேசமூர்த்தி, ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் லி.பகத்சிங் ஆகியோர் பேசினர்.

வத்திராயிருப்பில் வட்ட செயலாளர் கோவிந்தன் தலைமை வகித்தார். மாநில நிர்வாக குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மகாலிங்கம் உள்பட பலர் பேசினர்.

விருதுநகரில் பாண்டியன் தலைமை வகித்தார். மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர்கள் செந்தில்குமார், பாலமுருகன், மாவட்ட பொருளாளர் சமுத்திரம், இடைக்கமிட்டி செயலாளர்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இராஜபாளையத்தில் நகர செயலாளர் வி.இரவி தலைமை வகித்தார். துணை செயலாளர் விஜயன், முருகன் உள்பட பலர்




கலந்து கொண்டனர். சத்திரப்பட்டியில் ஒன்றிய செயலாளர் முத்து மாரி தலைமை வகித்தார். துணை செயலாளர் இராமச்சந்திரன், ஆறுமுகம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**தேனி மாவட்டம்:** சின்னமனூர் ஒன்றியக்குழு சார்பில் இரா. கதிரப்பன், தேனி நகரக்குழு சார்பில் எம்.எஸ்.பி.ராஜ்குமார், உத்தமபாளையம் ஒன்றியக்குழு சார்பில் வீ.பாண்டி, போடி நகர் ஒன்றியக்குழு சார்பில் எம்.முருகேசன், பெரியகுளம் தாலுகாகுழு சார்பில் இ.பி.காசிவிஸ்வநாதன், தேனி ஒன்றியக்குழு சார்பில் ஏ.கார்மேகம், ஆண்டிபட்டி ஒன்றியக்குழு சார்பில் பா.பிச்சைமணி, கடமலைமயிலை ஒன்றியக்குழு சார்பில் பி.கே.ஆர்.குணசேகரன், கம்பம் நகர், ஒன்றியக்குழு சார்பில் எம்.வி.கல்யாணசுந்தரம் ஆகியோர் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

ஒன்பது மையங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் கே.பெருமாள், மாநிலக்குழு உறுப்பினர்கள் எஸ்.திருமலைக்கொழுந்து, வே.பெத்தாட்சி ஆசாத், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் ப.செல்லன், என்.ரவிமுருகன், வே.பரமேஸ்வரன், இரா.தமிழ் பெருமாள், மாவட்டக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட தோழர்கள் திரளாக கலந்து கொண்டு படுகொலைக்கு எதிராக முழக்கமிட்டனர்.

**திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டக்குழு சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வட்டச் செயலாளர் இர.மோகன்குமார் தலைமை தாங்கினார்.

பி.ஆறுமுகம், ப.ராதாகிருஷ்ணன், அ.சண்முகம், அ.சிவா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட துணைச் செயலாளர் இரா.தங்கராஜ், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் அ.கி.அரசு ஆகியோர் கண்டன உரை யாற்றினர்.

**திருச்சி மாநகர் மாவட்டம்:** திருச்சி சிந்தாமணி அண்ணாசிலை அருகில் மாநகர் மாவட்ட செயலாளர் ஏ.கே.திராவிடமணி தலைமையில், கிழக்குப் பகுதி செயலாளர் அன்சர்தீன் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

முன்னாள் மாநில நிர்வா கக் குழு உறுப்பினர் செல்வராஜ், திருச்சி மாவட்ட ஏஐடியுசி பொதுச்செயலாளர் க.சுரேஷ், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கே.அண்ணாதுரை, எஸ்.சிவா உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்துகொண்டனர்.

**தஞ்சை மாவட்டம்:** அம்மாபேட்டை கடைத்தெருவில் சிபிஐ ஒன்றியச் செயலாளர் ஆர்.செந்தில்குமார் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வி.தொ.ச. மாவட்டத் தலைவர் ஆர்.எஸ்.பாலு, சிபிஐ ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.எம்.குருமூர்த்தி, ஒன்றிய பொருளாளர் பி.தாமரைச்செல்வி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினர்.

**கரூர் மாவட்டம்:** கரூர் பேருந்து நிலையம் ஆர்.எம்.எஸ். அலுவலகம் முன்பு மாவட்ட செயலாளர் எம்.ரத்தினம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட துணை செயலாளர்கள் கே.சண்முகம், எஸ்.மோகன்குமார், ஒன்றிய, நகர செயலாளர்கள் கே.எஸ்.நேதாஜி, பி.சக்திவேல், எஸ்.வி.தனபால், ஆர்.ராமசாமி, மாவட்ட நிர்வாக குழு கே.சுப்பிரமணி, மாவட்ட குழு ஆர்.ராஜேந்திரன், உடையவர் மோகன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 84 இதழ் 33

# மக்கள் பட்டினியும் கார்ப்பரேட் நன்கொடையும்

கடும் பட்டினி நிலையில் உள்ள மக்களை காப்பாற்றுவது குறித்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நடந்து வருகிறது. இந்தியத் தலைமை நீதிபதி என்.வி.ரமணா, நீதிபதிகள் ஏ.எஸ். போப்பண்ணா, ஹீரா ஹோலி ஆகியோர் அடங்கிய அமர்வு, நவம்பர் 16 ஆம் தேதி வழக்கை விசாரித்தது.

“பட்டினி போக்குவது பற்றி ஒருங்கிணைந்த கொள்கையை உரு வாக்குவதாக நீங்கள் வாக்களித்தீர்கள். ஆனால் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் அது பற்றி ஒரு வார்த்தை கூட இல்லை. அதிலும் ஒரு கீழ்நிலை அதிகாரி இந்த பத்திரத்தை தாக்கல் செய்திருக்கிறார். கர்வம் தலைக்கேறிய அரசு செயலாளர், உச்சநீதிமன்றத்துக்கு துளியும் மதிப்பளிக்கவில்லை. இந்தப் பத்திரத்தை நாங்கள் ஏன் வீசி எறியக் கூடாது” என்று கோபமாக நீதிமன்றம் கேட்டுள்ளது.

“நாட்டில் 6.63 லட்சம் கிராமங்களும் 2.5 லட்சம் பஞ்சாயத்துகளும் உள்ளன. இங்கு மூன்று அடுக்கு அரசு ஒன்றிய அரசு, மாநில அரசு, உள்ளாட்சி அரசு உள்ளது. ஒரே திட்டத்தை அமலாக்கினால் அது அரசியல் சாசனத்தின் விதிகளை மீறியதாகிவிடும்“ என்று அரசின் சார்பில், அட்டர்னி ஜெனரல் கே.கே.வேணுகோபால் உச்சநீதிமன் றத்தில் பதில் அளித்துள்ளார்.

வேறுபட்ட தன்மைகள் கொண்ட பல மாநிலங்களை உள்ளடக்கியது இந்தியா. சமைத்த உணவை ஏழைகளுக்கு வழங்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தை மாநிலங்களின் மேல் திணிக்க முடியாது என்று அடிஷனல் சொலிசிட்டர் ஜெனரல் மாத்வி திவான் வாதிட்டிருக்கிறார்.

ஒரே நாடு, ஒரே ரேஷன், ஒரே தேர்தல், ஒரே அரசு என்றெல்லாம் தினமும் முழங்கி, மாநிலங்களிடமிருந்து, வரி, கல்வி, விவசாயம், கூட்டுறவு உள்ளிட்ட பல உரிமைகளை மோடி அரசு பறித்துக் கொண்டே இருக்கிறது.

மக்களை காப்பாற்ற வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவு போட்டதும், இந்தியா வெவ்வேறு தன்மைகளை, வெவ்வேறு மொழிகள், பண்பாடுகளைக் கொண்ட நாடு என்று அரசுக்கு அபூர்வ ஞானம் திடீரெனப் பிறந்து விட்டது.

“மக்களின் பசியைப் போக்குவதற்கு அரசியல் சாசனமும் அல்லது எந்த ஒரு சட்டமும் எதிராக நிற்காது; தடுக்காது. மூன்று வாரங் களுக்குள் மாநிலங்களைக் கூட்டி உரிய திட்டம் வகுக்க வேண்டும்“ என உச்ச நீதிமன்றம் கூறிவிட்டது.

“பல்வேறு மாநிலங்கள், பொதுச் சமையலறை மூலம் மக்களுக்கு உணவு வழங்கி வருகின்றன. இனிமேல் வறுமைக்கோட்டுக்கு கீழே இருக்கிற, விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட மக்களுக்கு மட்டுமே உணவைத் தரவேண்டும் தரவேண்டும் என திட்டங்களை மாற்றி யமைக்கச் சொல்கிறோம்“ என்று நீதிமன்றத்தில் பதில் அளிக்கப்பட் டுள்ளது!

நன்மை செய்வதாகவே கூறி தீமைகள் புரிவதில் கை தேர்ந்தது அல்லவா மோடி அரசு! அதனால், தமிழக அரசு நடத்தும் அம்மா உண வகங்களில், இனிமேல் ஆதார் அட்டையும் வறுமைக்கோட்டுக்கு கீழ் வருமானம் உள்ளவர் என்ற சான்றிதழும் கொண்டு வந்தால்தான் உணவு தரவேண்டும் என்று கூட மோடி அரசு உத்தரவிட்டு விடலாம்!

முன்பு தேர்தலுக்கு 20 ஆயிரம் ரூபாய்க்கு மேல் நன்கொடை அளிப்பவர்கள் பெயரை அரசியல் கட்சிகள் வெளியிட வேண்டும் என்றும், ஒரு நிறுவனம் தனது வருவாயில் 10 சதத்திற்கு மேலாக தேர் தல் நன்கொடைகள் வழங்கக்கூடாது என்றும் விதி இருந்தது. தேர்தல் நன்கொடைகளை முறைப்படுத்தப் போவதாக மோடி அரசு, ‘தேர்தல் பத்திரம்‘ முறையைக் கொண்டுவந்தது. இதன்படி யார், எவ்வளவு நன் கொடை தந்தார் என்பது குறிப்பிட வேண்டிய அவசியமே இல்லை. என்ன அருமையான கட்டுப்பாடு!

2019– 20 ஆண்டுகளில் எங்கிருந்து வசூலிக்கப்பட்டது என்ற விவரம் இல்லாமல் தேசியக் கட்சிகள், பெற்றுள்ள வருவாய் ரூ. 3377.41 கோடிகளாகும். இதில் பிஜேபிக்கு மட்டுமே 78%க்கும் அதிகமாக, அதாவது ரூ.2642.63 கோடி வந்துள்ளது. அடுத்து காங் கிரஸ் 526 கோடி ரூபாய் (15.57%) வந்துள்ளது. இரண்டும் சேர்ந்து 94% ஆகும்.

தேர்தல் நன்கொடைக்கும், அதன் பின்பு தேர்வுபெறும் அரசு வகுக் கும் கொள்கைகளுக்கும் நெருங்கிய உறவு உள்ளது. இந்தியாவில் மக் கள் மீது போடப்படும் வரி அதிகரிக்கிறது. 32 ரூபாய் பெட்ரோலுக்கு 58 ரூபாய் வரி!

ஆனால் கார்ப்பரேட்டுகளுக்கு விதிக்கப்பட்ட வரி 30% இருந்து 22%ஆக குறைக்கப்பட்டு விட்டது.


பெரும் பணக்காரர்கள் அரசியல் அதிகாரத்தை கையில் எடுத்துக் கொள்கிறார்கள். இதைத் தடுக்க வேண்டுமானால் கார்ப்பரேட் தேர்தல் நன்கொடைகள் அனைத்தையும் தடை செய்ய வேண்டும். அப்போது தான் ஜனநாயகமும் காப்பாற்றப்படும், பட்டினி கிடக்க வேண்டிய அவல நிலையும் மக்களுக்கு வராது.

NEWAGE
Central Organ of the Communist Party of India
WEEKLY

தலையங்கம்
(நவ. 14 – நவ. 20)

## மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தின் மீது

# இப்போது தாக்குதல்




நாட்டின் முழு உற்பத்தித்துறையையும் பொருளாதார நெருக்கடி பாதித்தபோது பட்டினியில் தள்ளப்பட்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு நிவாரணமளிப்பதில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்ட திட்டம் முதன்மையான திட்டமாக விளங்கியது.

தேசியப் புள்ளிவிவரத் துறை தரவுகளின்படி தொற்றுக்கு முன்பே, நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களில் குறைந்தது 57 சதவீதத்தினர் கடனில் இருந்தனர். தொற்றின்போதோ ஆலைகளின் கதவடைப்புகளோடு அதிகரித்த வேலையின்மை, தொற்றின் இரண்டாவது அலை மற்றும் விலைவாசி ஏற்றத்தின் கடும் உயர்வால் இளைஞர்கள் மிக மோசமாக வேலைகளை இழந்தார்கள். 2016–17ல் 15 சதவீதத்திற்குச் சற்றுக் கூடுதலாக இருந்த வேலையின்மை, 2021ல் 32.03 சதவீதமாக அதிகரித்தது. வேலைதேடி துன்பப்படுபவர்களைக் கட்டாய உழைப்பில் தள்ளி கூலியையும் தாமதித்து மேலும் தொல்லைபட்டனர்.

பணி நேரம் நீட்டிக்கப்பட்ட நிர்பந்தம் மற்றும் குறைந்தபட்ச ஊதியத்தைவிட கூலியும் குறைவு. இதன் விளைவு உலகப் பட்டினிக் குறியீடு பட்டியலில் இடம்பெற்ற 116 நாடுகளில் இந்தியா 101வது இடத்தில் தள்ளப்பட்ட அவலம். இதன் உண்மையான பொருள், இந்திய மக்களின் உடல்நலன் சார்ந்த சர்வதேச அளவீடுகள் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு போன்ற பிற காரணிகளிலும் நிலைமை மோசமாகியுள்ளது என்பதே.

குழந்தைகள் பொதுவாக வயதிற்கேற்ற வளர்ச்சி பெறாமல் போவது மற்றும் வளர்ச்சி கட்டத்தில் நோய்கள் பாதிப்பின் விகிதமும் அதிகரித்துள்ளது. நிலைமை மோசமாக உள்ள 31 நாடுகளில் இந்தியாவும் உள்ளது. ஊட்டச்சத்து குறைபாடு, எடை குறைவு, ஐந்து வயதிற்கு கீழே உள்ள குழந்தைகளின் வயதிற்கேற்ற வளர்ச்சி யின்மை போன்றவை அதிகமாக உள்ளன. இதனால் 2015–16 ஆண்டிலிருந்தே ஏழைகளின் வாழ்க்கைத்தரம் தொடர்ச்சியாகச் சரிவடைந்ததால், பெருந்தொற்று பாதித்தபோது நம்நாடு அதற்கு எளிதாக பலியானது.

தற்போது கிராமப்புற வேலைவாய்ப்பு வழங்குவதிலும் இத்திட்டம் நிதிப் பற்றாக்குறையில் உள்ளது. நடப்பு நிதியாண்டில் பாதிதான் கடந்துள்ளது; துணை பட்ஜெட் ஒதுக்கீடு அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடர் தொடங்கிய பிறகுதான் நிதியை விடுவிக்கும். மகாத்மா காந்தி ஊரகத் திட்ட நிதியில் இருக்கும் நிகர இருப்புத் தொகை தற்போது எதிர்மறையில் ரூ8,686 கோடி பற்றாக்குறையில் உள்ளது; அவ்வாறெனில், அந்த உறுதி அளிப்புத் திட்டத்தில் பாடுபட்டு உழைத்த கிராமப்புறத் தொழிலாளர்களுக்குப் பட்டுவாடா செய்ய வேண்டிய ஊதியம், பட்டுவாடா செய்யப்படாமல் தாமதிக்கப்படுவது மட்டுமில்லாமல் பொருட்கள் வழங்கியதற்கான தொகையும் நிலுவையில் நிற்கிறது என்பதே அதன் பொருள். இந்த முட்டுக்கட்டை நிலைமையை மாநிலங்கள் தங்கள் சொந்த கஜானாவைத் திறந்தால் மட்டுமே தீர்க்க முடியும் என்பது ஒன்றிய அரசின் நிலைபாடு. இது பொறுப்புக்களைத் தட்டிக் கழித்து அடுத்தவர்களைக் கை காட்டுவதுதான்.

கடுமையான பொருளாதார நெருக்கடியின்போது, கோரிய நிதி குறித்து ஒன்றிய அரசு, இது “மாநிலங்கள் செயற்கையாக ஏற்படுத்தியது” என்றுகூட முத்திரை குத்தியது.

மக்கள் தொடர்ந்து சந்தையில் பொருட்களை வாங்கும் சக்தியுடன் இருப்பதை உறுதி செய்யவே மகாத்மா காந்தி வேலை உறுதியளிப்புத் திட்டம் பிறந்தது. சந்தையில் பொருட்களை வாங்குவதற்குத் தேவையான வருவாயைக் கிராமப்புறக் குடும்பங்கள் நெருக்கடி காலங்களில் பெறுவதற்காக, தொழில் திறன் தேவைப்படாத 100 பணி நாட்கள் வேலைகளை வழங்க அந்தத் திட்டம் சட்டப்படி உறுதியளித்தது. இருப்பினும் ஊரடங்கு நாட்களில் தேசிய ஊரகத் திட்டத்திற்கு உச்சபட்சமாக பட்ஜெட்டில் 1.11 லட்சம் கோடி அனுமதிக்கப்பட்டதாகப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. அது 11 கோடி பாட்டாளிகளுக்கு வேலை வழங்கி, வாழ்விற்கு ஜீவனை அளித்த செயல்.

ஆனால் 2021–22 காலத்திற்கான இத்திட்டத்திற்குச் சுமார் வெறும் 73,000 கோடி மட்டுமே பட்ஜெட் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேசிய அளவில் ஊரடங்கு முடிவுக்கு வரும்போது நிதி நெருக்கடி இருக்குமானால் அப்போது கூடுதல் துணை பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யலாம் என ஒன்றிய அரசு கூறுகிறது. அக்டோபர் 29ம் தேதியில் பட்டுவாடா செய்ய வேண்டிய பாக்கித் தொகை உட்பட மொத்த செலவு இத்திட்டத்தில் ஏற்கனவே ரூ79,810 கோடியை எட்டியுள்ளது அதாவது திட்டம் அபாய கட்டத்தை அடைந்துள்ளது என்பதற்கான எச்சரிக்கை. இத்திட்டத்தில் நிகர இருப்பு ஏற்கனவே எதிர்மறையாக பற்றாக்குறையில் செல்லும் 21 மாநிலங்களில் ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கத்தில் பற்றாக்குறை மிக மோசமாக உள்ளது அதாவது உழைத்து பணி முடித்தவர்களுக்கு ஊதியம் வழங்கப்படாது உள்ளது.

ஆனால் நடைமுறை எதார்த்தத்தில் 13 சதவீதமான குடும்பங்கள் இன்னும் வேலை வாய்ப்பிற்காகக் காத்திருக்கிறார்கள்; பணி தர வேண்டுகோள் விடுத்தும், அவர்களைத் தவிக்கவிட்டு அவர்கள் பெயர்களைப் பதியக்கூட இல்லை. இந்த விவரமும்கூட பகுதியளவே சரியானது. ஆனால் உண்மையில் நடப்பது என்னவென்றால், மாநிலங்கள் நிதி வருவதற்கு ஏற்பவே பணியிடங்களை ஏற்படுத்துகின்றன; ஆனால் ஒன்றிய அரசோ அதனது பட்ஜெட் ஒதுக்கீடுகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைஉறுதியளிப்பு சட்டத்தின்படியான இத்திட்டத்திற்கான மதிப்பீட்டு (எஸ்டிமேட்) தொகையை வெட்டி, 2020–2021ம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீடு அறிக்கைகளில் நிதி ஒதுக்கீடு 34 சதவீதத்திற்கும் மேல் குறைவாக அளித்துள்ளது.

கிராமப்புற மக்கள் மட்டுமல்ல, ஆர்எஸ்எஸ் பாஜக ஆட்சியில் அரசமைப்பு சட்டத்தின்படியான மகாத்மா காந்தி பெயரில் அமைந்த திட்டமும்கூட பட்டினியில் தவிக்க விடப்பட்டுள்ளது.

தமிழில்: **நீலகண்டன்**



அ.பாஸ்கர்

# பாதுகாப்பான வீடு... கனவு நனவாகுமா?

**அண்மையில் தொடங்கிய வட கிழக்கு பருவமழை தீவிரமாகி, தொடர் கனமழையாக, வழக்கத்தை விட அதிகமாக கொட்டித் தீர்த்து வருகிறது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களிலும், காவிரிப் பாசனப் பகுதிகளிலும் இயல்பான வாழ்க்கை நிலை பாதிக்கப் பட்டிருக்கிறது.**



பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதிலும், பேரிடர் பாதிப்புகளில் இருந்து மக்களை மீட்கும் பணிகளிலும், பாதிப்புகளை சீரமைத்து, ஒரு நிரந் தத் தீர்வுகாணும் முனைப் போடு மாண்புமிகு முதலமைச்சரும், அமைச்சர்களும், உயர் அதிகாரிகளுடன் களம் இறங்கி மக்களுக்கு நிவாரணம் வழங்கி அரவணைத்து ஆறுதல் கூறிவருவது மறுவாழ்வுக்கு நம்பிக்கையூட்டுகிறது.

காவிரி பாசனப்பகுதி மாவட்டங்களில் கடலூர், தஞ்சை, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் தொடர் மழையால் ஏற்பட்ட பாதிப்புகளை பார்வையிட்டு, ஆய்வு செய்வதற்கும், அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை பரிந்துரைக்கவும் மூத்த அமைச்சர் தலைமையில் குழு அமைத்திருப்பது சிறப்பானதாகும்.

சென்னையிலிருந்து கன்னியாகுமாரி வரை பாதிக்கப்பட்ட பகுதிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சாலைவழிப் பயணம் செய்து, நேரில் பார்வையிட்டது மக்களிடம் எதிர்ப்பார்பையும், நம்பிக்கையினையும் அதிகப்படுத்தியுள்ளது.

ஆண்டுதோறும் ஏற்படும் இயற்கை பேரிடர்களில் காவிரி டெல்டா பகுதி மக்களின் வாழ்க்கையை பாதிக்கின்ற போது, மாநில அரசு வெள்ளச் சேதத்தை பார்வையிடவும், மதிப்பிடவும் அமைச்சர்களையும், உயர் அதிகாரிகளையும் கொண்ட குழுவை அனுப்புவதும், குழு வயல்களின் வரப்பில் நின்று, நீரில் மூழ்கிய பயிர்களை பார்வையிடுவதும், விதைத்த பயிர் வேர்கள் அழுகிய நிலையில் இருப்பதை விவசாயிகள் அதிகாரிகளிடம் காட்டி, கண்ணீர் மல்கக் கோரிக்கை வைப்பதும் ஒரு அரசு முறை நடவடிக்கையாகியுள்ளது.

சாகுபடி இழப்பு, சாலைகள், பாலங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதாரம் என ஒன்றுவிடாமல் ஆய்வு செய்வதும், தனது பரிந்துரையை அரசுக்கு கொடுப்பதும் வழக்கமான ஒன்றுதான்.

இயற்கை பேரிடரை மாநில அரசு மட்டுமே எதிர்கொள்ள இயலாது என்பதை யாரும் மறுக்க இயலாது. அதுவும் ஜி.எஸ்.டி. உள்ளிட்ட வரிவிதிப்பு முறைகளில் மாநில அரசின் நிதி ஆதாரத்தை ஒன்றிய அரசு பறித்துக் கொண்ட நிலையில், பேரிடர் நிவாரண நிதிக்கு ஒன்றிய அரசிடம் முறையிடுவது தவிர்க்க முடியாது.

மாநில அமைச்சர்கள், அனுபவ முதிர்ச்சி பெற்ற இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் வழங்கும் அறிக்கையை அப்படியே ஏற்பதில்லை. குறைந்தபட்சம் அவர்களோடு விவாதித்து தெளிவு பெற்று, நிதியொதுக்க ஒன்றிய அரசு முன்வருவதில்லை. ஒன்றிய அரசின் அதிகாரத்தை வழிநடத்தும், ஆளுங்கட்சியின் கொள்கைகளை விமர்சிக்கும், எதிர்க்கும், எதிர்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் என்றால் பாராமுகத்துடன் நடந்து கொள்வதும், வஞ்சித்து வதைப்பதும் வாடிக்கையாகி விட்டது.

இதனை மூடி மறைக்க பல்வேறு துறை உயர் அதிகாரிகளைக் கொண்ட ''மத்திய குழு'' வந்து சென்றுள்ளது. நமது கவலைகள் தீரும் நிவாரணம் கிடைக்கும் என மக்கள் காத்திருப்பார்கள். ஒன்றிய அரசிடம் பேரிடர் நிவாரண நிதி கேட்ட அளவில் 10% கூட வழங்குவது இல்லை என்பதும் அனுபவ உண்மையாகும்.

வழக்கம் போல் இவ்வாண்டும் அமைந்துவிடக் கூடாது என விவசாயிகள் கவலையோடு காத்திருக்கிறார்கள். இதுபோன்ற இயற்கை பேரிடர் காலங்களில் விவசாய தொழிலாளர்களும், கிராமத் தொழிலாளர்களும் எப்படி இருக்கிறார்கள் என்பது பற்றி சிந்திக்காதது ஏன் என்ற கேள்வியும் எழுகிறது.

பருவமழைக் காலங்களில் தொடர்ந்து வேலையை இழந்துள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு, மீன்பிடித் தடைக் காலங்களில் மீனவர்களுக்கு வழங்குவது போல் ஓரிரு மாதங்கள் நிவாரணம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுகளாக வலியுறுத்தப்படுகிறது. இது ஏன் அரசின் கவனத்தைத் தொடவில்லை.?

ஆட்சியாளர்கள் எவரும் நம்மைப் பற்றி கண்டு கொள்வதோ, கவலை கொள்வதோ இல்லை என்ற ஏமாற்றம் சமுகத்தின் அடித்தட்டு மக்களான விவசாயத் தொழிலாளர்களிடம் நிலவி வருவதை அரசு உணர வேண்டும்.

**தொடர் கனமழை காரணமாக காவிரிப் பாசன மாவட்டங்களில் விளைந்து நின்ற குறுவை நெற்பயிர்கள் அறுவடை செய்ய முடியாமலும் , நடவு செய்து 15 நாட்கள் கூட ஆகாத தாளடி பயிர்களும், சம்பா பயிர்களும் மழைநீரில் மூழ்கியுள்ளன ஆயிரக்கணக்கான ஏக்கரில் நடவு செய்த பயிர்களை இழந்து, வயல்களை சீரமைக்கும் வேதனைக்கு ஆளாகி நிற்கும் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதுடன் விவசாயத் தொழிலாளர் வாழ்க்கை நெருக்கடிக்கும் உதவுவது அரசின் கடமையாகும்.**

விவசாய வேலைகளிலும், உடல் உழைப்புப் பணிகளில் வாழ்வாதாரம் பெற்றுள்ளவர்களும், சமூகத்தின் அடித்தட்டு மக்களான விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் கிராமத் தொழிலாளர்களும், வசிப்பிடம் கூட இல்லாமல் வதைபடுவதை இதயம் உள்ளோர் பரிவுடன் பார்க்க வேண்டும்.

ஆற்றுக் கரையோரம் குடிசை கட்டி, எந்த ஆவணத்திலும் பதிவாகாமல் வாழ்ந்து வரும் விளிம்பு நிலை மக்கள் இந்தப் பேரிடர் காலங்களில் என்ன பாடுபடுவார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

நீர் தேக்கப் பகுதிகளில், நீர் வழிப் பகுதிகளில் ஆக்கிரமிப்புக் கூடாது என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. இப்பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்ற நீதிமன்ற தீர்ப்பு சரிதான். ஆனால். பேரிடர் காலங்களில் குடிசை வீடுகள் நீரோட்டத்தின் திசைவழியை மாற்றுவதில்லை. அந்தப் பெருவெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுகின்றன என்பதையும் நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டும்.

நில வியாபாரக் கும்பலும், அதிகாரக் செல்வாக்கு பெற்றவர்களும் நீர் வழிப்பாதையை மறித்தும், ஒடுக்கியும் கட்டியுள்ள வலிமையான கட்டிடங்கள் பெருவெள்ளத்தை திசை மாற்றி, நகரத் தெருக்களை நீர்தேக்கங்களாக மாற்றி இருக்கின்றன. இதனை அணுகும் போது சட்டம் நெளிந்து, வளைத்து, கூனி, குறுகி கும்பிடு போடுகிறதே ஏன்?

உணவு உற்பத்தியின் உயிர்நாடியாக திகழும் விவசாயத் தொழிலாளர்களின் ஆயிரமாயிரம் குடும்பங்கள் ''வீடு'' என்பதை கனவாக மட்டுமே கண்டு வருகிறார்கள். பல நெருக்கடிகளை தாண்டி, குடிமனை பட்டா பெற்றவர்களுக்கு அரசு முழு மானியத்தில் வீடு கட்டித் தரும் திட்டங்கள் நீண்ட காலமாக அமலாக்கப்படுகின்றன.

கிராமப்புறத் தொகுப்பு வீடுகள் திட்டம், இந்திரா நினைவுக் குடியிருப்பு திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கலைஞர் கான்கிரீட் வீடுகள் திட்டம், முதலமைச்சர் பசுமை வீடுகள் திட்டம், ஒன்றிய மாநில அரசுகளின் பங்களிப்புத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. கஜாபுயல் பாதிப்புகளை ஆய்வு செய்த அப்போதைய முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிச்சாமி டெல்டா மாவட்டத்தில் ஒரு லட்சம் கான்கிரட் வீடுகள் கட்டித் தரப்படும் என ஆரவாரமாக அறிவித்தார். நடந்தது என்ன? உண்மை கசக்கும்.

நீண்ட பல ஆண்டுகளுக்கு முன்னர் அரசால் கட்டிக் கொடுக் கப்பட்ட வீடுகள் வயது மூப்பின் காரணமாக பலவீனப் பட்டுவிட்டன. இவைகள் தொடர்மழைக் காலங்களில் இடிந்தும், சரிந்தும், வசிக்க முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் தொகுப்பு வீடுகளில் வசித்து வருபவர்கள் வீடு எப்பொழுது விழும், இரவு தூங்கும் நாம் காலையில் உயிரோடு இருப்போமா? என்ற அச்சத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் தங்களின் பழுதடைந்த வீடுகளை இடித்து புதிய பாதுகாப்பான வீடுகள் கட்டித் தருமாறு வலியுறுத்தி வருகிறார்கள். இதன் மீது அரசு கவனம் செலுத்த வேண்டும். பழுதடைந்த வீடுகளை புதுப்பித்து, புது வீடுகள் கட்டித்தரும் புதிய திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

தற்போது இயற்கைப் பேரிடர் தாக்குதலில் பல வீடுகள் இடிந்து விழுந்து குடியிருப்போர்கள் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சையில் இருந்து வருகின்றனர். சில உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளன. பெய்து வரும் கன மழையால் தொகுப்பு வீடுகள் முழுவதும் தண்ணீர் சொட்டி குடியிருக்க முடியாமல், ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வீடுகளை இழந்து நிற்கும் அவல நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஒன்றிய மாநில அரசுகளின் திட்டங்கள் மூலம், முற்றிலும் இலவசமாக கட்டிக்கொடுக்கப்பட்டு, 20 ஆண்டுகளை கடந்த வீடுகளை நேரடி ஆய்வு செய்து, அதன் உறுதித்தன்மை கண்டறியப்பட வேண்டும். வசிக்க முடியாத நிலைக்கு பழுதடைந்துள்ள வீடுகளை முழுமையாக இடித்து விட்டு, அங்கு 400 சதுர அடி பரப்பளவில் தற்போதுள்ள திட்ட மதிப்பீட்டை திருத்தி குறைந்தபட்சம் ஐந்து லட்சம் ரூபாயில் புதிய வீடுகள் கட்டித்தர வேண்டும் என்ற கோரிக்கையை அரசு பரிசீலிக்க வேண்டியது அவசியமாகும்.

வெள்ளச் தேசத்தை பார்வையிட்டது போல் தொகுப்பு வீடுகளை ஆய்வு செய்ய ஒரு முயற்சி செய்ய வேண்டும். அப்படி ஆய்வு செய்தால் விடியல் ஆட்சியின் வெளிச்சக் கீற்றுகள் பரவும். ஏழை மக்கள் துயரங்கள் குறையும் பாதுகாப்பான வீடு என்ற கனவு நனவாகும்.

தொடர்புக்கு: **9488488339**

## பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இழப்பீடு வழங்குக!




பாபநாசம் அருகே அம்மாபேட்டை ஒன்றியத்தில் பல்லவராயன்பேட்டை, புத்தூர், உக்கடை, வடபாதி, அருமலை கோட்டை, கள்ளிமேடு, அன்னப்பன்பேட்டை, உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சம்பா, தாளடி நெற்பயிர்கள் முழுவதும் நீரில் மூழ்கி குளம் போல் காட்சி அளிக்கின்றது. இதனால் மிகப்பெரிய பாதிப்பை விவசாயிகள் சந்தித்துள்ளனர். இந்த இடங்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அம்மாபேட்டை ஒன்றிய செயலாளர் ஆர் .செந்தில்குமார் தலைமையில் மாவட்ட செயலாளர் மு.அ.பாரதி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தஞ்சை மாவட்ட பொறுப்பாளர் சாமு .தர்மராஜ், ஒன்றிய நிர்வாகிகள் எஸ்.திருநாவுக்கரசு, எஸ்.உத்திராபதி, எம் ராஜமாணிக்கம், டி ராஜேந்திரன் உள்ளிட்டோர் பார்வையிட்டனர்.

வடிகால் வாய்க்கால்கள் முழுவதும் தூர்ந்து போனதால் தண்ணீர் வடிவதில் சிரமம் உள்ள நிலையில் பயிர்கள் மூழ்கியுள்ளன. பயிர் இன்சூரன்ஸ் நவம்பர் 15 க்குள் விவசாயிகள் கட்டவேண்டும் என்ற நிபந்தனைகளை தளர்த்தி, நவம்பர் 30 வரை கட்டுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். பாதிப்பிற்காளான பகுதிகளை வருவாய்த் துறை, வேளாண் துறை ஆய்வுச் செய்து உரிய இழப்பீடு வழங்கவும் அவர்கள் கோரிக்கை வைத்தனர்.



நா. பெரியசாமி

# முரண்பாடுகள் தீரும் வரை தொடரும் துயரம்...

**கா**ட்ச்ரோலியில் 26 நக்சல்கள் கொல்லப்பட்டனர்.

இது பத்திரிகை செய்தியின் தலைப்பு..

இந்தச் செய்தியின் அருகில் அசாம் ரைஃபிள் அதிகாரியும், அவரது குடும்பத்தினரும் மணிப்பூரில் பதுங்கியிருந்து தாக்கப்பட்டதில் கொல்லப்பட்டனர்.

இந்த இரு செய்திகளும் எமது சிந்தனையில் ஏற்படுத்திய தாக்கம் வெகுநேரம் நீடித்தது.

கட்ச்ரோலி சம்பவத்தை விபரிக்கும். அந்த மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அன்கிட் கோயல் " கட்ச் ரோலி மாவட் டம், கோரச்சி அருகில் உள்ள மார்தின்தொலா (Mardintola) வனப் பகுதியில் ஏ சி 60 காவல் கமாண்டோ குழுவின் தேடுதல் வேட்டை (?) யின் போது, ஏற்பட்ட (போலி) மோதலில் 26 நக்ஸல்கள் கொல்லப்பட்டனர்" என்று கூறுகிறார்.

இந்தப் பெரும் மோதலில் (?) மூன்று காவல் அலுவலர்கள் காயமடைந்து, மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, உயிராபத்து இல்லை என்ற நிலையில் (!) சிகிச்சை பெற்று வருகிறார்கள். உயிரிழந்த 26 நக்சல்களின் உடல்களை காவல்துறையினர் கண்டறிந்து (!) கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் செய்தியை நாளிதழ் விவரிக்கும் போது 2018 மார்ச் மாதத்தில் சுக்மா(சத்தீஸ்கர்) மாவட்டத்தில் நடந்த குண்டு வெடிப்பில் மத்திய ரிசர்வ் போலீஸ் படையைச் சேர்ந்த 8 பேர் கொல்லப்பட்டனர்.

2019 மே மாதத்தில் கட்ச்ரோலி மாவட்டத்தில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த குண்டுகள் வெடித்ததில் 15 காவலர்களும், ஒரு ஓட்டுநரும் கொல்லப்பட்டனர்.

2020 மார்ச் மாதத்தில் சத்தீஸ்கர் மாநிலம் சுக்மா மாவட் டத்தில் நக்சல்களுடன் நடந்த மோதலில் பாதுகாப்புப் படை யினர் 17 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தப் பட்டியலை படிக்கும் போது தொடர் கொலை நடவடிக் கைகளில் ஈடுபட்டு வரும் நக்சல்கள் கொல்லப்பட்டது நியாயம் தானே. என்ற ஒப்புதல் பெறும் நோக்கம் கொண்டிருக்கிறது.

எந்தவொரு உயிரையும் பறிக்க. யாரொருவருக்கும் உரிமை யில்லை. அது நாகரிக வளர்ச்சியின் அடையாளமும் அல்ல என்பதே அனைவரின் உறுதியான கருத்து நிலை.

போலி மோதலில் (Encounter) கொல்லப்பட்ட அனைவரும் மனிதர்களே. அவர் நக்சல் என்ற பெயரில் வாழ்ந்தவர் ஆயி னும், அவர்களை வேட்டையாடும் பாதுகாப்புப் படைகளில் பணிபுரியும் காவலர்கள். அதிகாரிகள் யாராயினும் சரி. ஒரு தாயின் வயிற்றில் பிறந்த குழந்தைகள்தான்.

பிறந்த குழந்தைகள் வாழும் நிலையில், வளரும் சூழலில் அவரவர் மேற்கொள்ளும் பயண வழி மாறுபடுகிறது. முரண்படுகிறது. இந்த முரண்பாடும், மாறுபாடுகளும் சமூக அமைப்பில் மனிதாபிமானம் இல்லாத வர்க்க சார்பு இருக்கும் வரை நீடித்துக் கொண்டே இருக்கும்.

**இந்தியாவில் பிறந்த ஒரு குடிமகன் தனது 4 உறுப்பினர்கள் கொண்ட குடும்பம் வசிக்க 27 அடுக்கு மாடி வீடு கட்டுவதும், பிறந்த நாட்டில் நோய்த்தொற்று பரவல் அச்சுறுத்தினால் அயல்நாட்டில் (அமெரிக்கால்) மில்லியன் டாலர் கணக்கில் புதிய மாளிகை வாங்கி அதனை மேலும் புதுப்பித்து. பாதுகாப்பாக வாழ முடியும் என்பதும்...**

**வழிவழியாக வாழ்க்கையின் ஆதாரமாக இருந்து வரும் நிலத்தை, வனத்தை விட்டு, அரசின் ஆயுதப்படைகள் உதவியோடு பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட நிலையில், வாழும் உரிமைக்காக, போராட வேண்டிய நிராயுதபாணிகளின் நிர்பந்த நிலையும் ஒன்றாகிவிட முடியுமா?**

நமது நாட்டில் மக்களின் வாழ்க்கை நிலை வறுமைக் கோட்டை அடிப்படையாகக் கொண்டு கீழே, மேலே என வரை யறுக்கப்படுகிறது. இந்த வறுமைக் கோடு நிர்ணயிப்பதில் கற் றறிந்த பொருளாதார நிபுணர்களே ஒரு இணக்கமான முடிவு காண முடியவில்லை. ஏதாவது ' ஒன்றை அடிப்படையாகக் கொள்வது அவரவர் விருப்பம் சார்ந்து அமைகிறது. அது இருக்கட்டும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட் டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் செய்து முடித்த வேலைக்கான ஊதியத்தை பெறுவதற்கு போராட வேண்டிய அவல நிலை இருக்கும் போது, ஒருவர் நாளொன்றுக்கு 1000 கோடி ரூபாயுக்கும் மேலாக வருமானம் பெறுவதை பார்த்தால் ஆதங்கமும், ஆத்திரமும் ஏற்படுவது இயல்புதானே.

வீடு, ஊதியம் என்பது பெரும் எண்ணிக்கையினர் கோரிக் கையாக சமூகத்தில் முன்வரும் போது, மனிதர்கள் புறக் கணிக்கப்படுவது போல் சில பகுதிகள் புறக்கணிக்கப்படும் போது அது, அந்தப் பகுதி மக்களின் கூட்டு உரிமையாகிறது. இந்த உரிமைப் போராட்டத்திற்கான அமைப்புகள் உருவா கின்றன. சில அமைப்புகள் புறநிலை வளர்ச்சி பற்றி எந்த மதிப்பீடும் இல்லாமல் அக உணர்வு கொந்தளிப்பில் இருந்து வழிதவறிப் பயணிக்கின்றன. இவைகள் ஜனநாயக இயக் கத்துக்கு நெருக்கடியும், ஆளும் வர்க்கத்துக்கு வாய்ப்புகளையும் ஏற்படுத்தி வருகின்றன.

1950 ஜனவரி 26 நமக்கு நாமே நம்மால் ஏற்றுக் கொள்ளப்பட் டிருக்கும் அரசியலமைப்புச் சட்டம் சமூக உறவுகளுக்கும். தனிநபர் உரிமைகளுக்கும், நீடித்த அமைதிக்கும் உறுதிய ளிக்கிறது. வாக்களித்து நாடாளுமன்றத்தையும், சட்டமன்றங் களையும் அமைத்துக் கொள்ளும் அரசியல் உரிமை குடி மக்களுக்கு சமமாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது இதன் அடிப் படையில் சமூகத் தளத்திலும், பொருளாதார வாழ்விலும் நிலவியும், வளர்ந்தும் வரும் நெருக்கடிகளுக்கு தீர்வு காணும் கடமைப் பொறுப்பு ஆட்சிப் பொறுப்பேற்பவர்களிடம் ஒப்ப டைக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் தினசரி ரூ 1000 ம் கோடிக்கும் மேல் வருமானம் பெறுவதற்கும், பல மாடிகள் கொண்ட வீடுகள் வேண்டும் என்று கேட்பதாக குதர்க்கம் செய்யக் கூடாது. ஒவ்வொரு மனிதரும் சுயமரியாதையோடும், கண்ணியத்தோடும் வாழும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். இதற்கான முறையில் பொழுது விடிந்து பொழுது போனால் தவறாது வேலை வழங்க வேண்டும். செய்யும் வேலைக்கு நியாயமான ஊதியம் வழங்க வேண்டும். கல்வியும். மருத் துவமும் இலவசமாகக் கிடைக்க வேண்டும். உழுவடை நிலம் பறிபோகமல் பாதுகாக்கப்பட வேண்டும். விவசாயிகள் விரோத சட்டங்கள் திரும்பப் பெற வேண்டும். அவரவர். நம்பிக்கைக்கு தக்கபடி வழிபடும் உரிமையும், பகுத்தறிவுப் பரப்புரை செய்யும் உரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும். இன்னும் இது போன்ற கோரிக்கைகளை திறந்த மனதோடு அணுகி தீர்வு காணும் மதச்சார்பற்ற ஜனநாயக அரசு அமைய வேண்டும்.

அதுவரையிலும் மரணித்தவர்களுக்கு நாம் ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பது,

ஒரு சம்பிரதாயமாகவே தொடரும்...

தொடர்புக்கு: **9443118544**

# திருத்துறைப்பூண்டியில் கனமழை: பாதித்த பகுதிகளை பார்வையிட்டார் இரா.முத்தரசன்



திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஒன்றியத்துக்கு உட்பட்ட ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்பயிர்கள் தற்போது பெய்த கன மழையினால் பாதிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, ஆறுகள், வாய்க்கால்கள் உடைப்பு ஏற்பட்டு வெள்ளச் சேதம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் பிச்சன் கோட்டகம், தென்பாதி, மேலமருதூர் உள்ளிட்ட பகுதிகளில் சேதமடைந்த பயிர்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் இரா.முத்தரசன் பார்வையிட்டார்.

அப்போது அவர் கூறுகையில், தற்போது பெய்த கன மழை யினால் சம்பா, தாளடி பயிர்கள் முழுவதும் சேதமடைந்துள்ளன. சேதமடைந்த பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 30 ஆயிரம் வழங்க வேண்டும். அதேபோல் மீன்பிடி தடை காலங்களில் கடலுக்கு செல்லாத மீனவர்களுக்கு வழங்கப்படுகிற உதவித்தொகை போல் விவசாய தொழிலாளர்கள் அனைவருக்கும் இதுபோன்ற மழை காலங்களில் வேலைக்கு செல்லாத நிலை உள்ளது. அதனால், குடும்பம் ஒன்றிற்கு ரூபாய் 10,000 வழங்கிட வேண்டும்.

10ஆண்டுகள் முடிந்த தொகுப்பு வீடுகள் அனைத்தும் முழுமையாக சேதமடைந்துள்ளன. இதனால் சேதமடைந்த தொகுப்பு வீடுகள் அனைத்திற்கும் புதிய கான்கிரீட் வீடுகள் கட்டித்தர வேண்டும். சென்ற ஆட்சிக்காலத்தில் பல கோடி ரூபாய் செலவில் வளவனாறு சுத்தம் செய்தல் மற்றும் கட்டுதல் அதில் சாலை அமைத்தல் உள்ளிட்ட பணிக்காக ஒதுக்கப்பட்டது. ஆனால் மேற்கண்ட பணிகள் சரிவர செய்யப்படாததால் கரைகள் உடைந்து வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளது. உடனடியாக அரசு தலையிட்டு அந்த வளவனாற்று கரையை பலப்படுத்தி சாலை அமைத்து தர வேண்டும் என கூறினார். விவசாய தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் நா.பெரியசாமி, கட்சியின் மாவட்ட செயலாளர் வை.சிவபுண்ணியம், சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் உலகநாதன், ஒன்றிய பெருந்தலைவர் அ.பாஸ்கர், கட்சியின் ஒன்றிய செயலாளர் கே.பாலு, வி.தொ.ச. ஒன்றிய செயலாளர் ம.மகாலிங்கம், இளைஞர் பெருமன்ற ஒன்றிய செயலாளர் ஜி.சரவணன், ஊராட்சி தலைவர் திருமதி.சுசிலா மகாலிங்கம், ஒன்றியக் குழு உறுப்பினர் மு.மாரியம்மாள் ஆகியோர் உடனிருந்தனர்.

# சங்கே முழங்கு!

## நீடாமங்கலம் ஒன்றியச் செயலாளர் நடேச. தமிழார்வன் படுகொலை

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவாரூர் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினரும், நீடாமங்கலம் ஒன்றியச் செயலாளருமான தோழர் நடேச. தமிழார்வன் நீடாமங்கலம் கடைத் தெருவில், பேரூராட்சி அலுவலகம் அருகில் நவ. 10 அன்று பிற்பகலில் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டார் என்ற நெஞ்சைப்பதற வைத்த செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

தோழர் நடேச. தமிழார்வன் கட்சியின் ஒன்றிய செயலாளர் என்ற முறையில் அனைத்துப் பகுதி மக்களுடனும் நெருங்கிப் பழகும் பண்பு கொண்டவர். மக்கள் நன்மதிப்பைப் பெற்றவர். அவர் விவசாயிகளின் பயிர் காப்பீடு தொடர்பான கோரிக்கைக்காக தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு சென்று கொண்டிருந்த நேரத்தில், மக்கள் நடமாட்டம் உள்ள கடைத்தெருவில், வஞ்சகமாக வழிமறித்து ஆர்.ராஜ்குமார், எம்.ரஜனி, அறையூர் பா.சேனாதிபதி, ஆ.எழில் அரசன், க.தேவா, கு.பகலவன் மற்றும் இருவர் என எட்டுப் பேர் கொண்ட கும்பல் கொடிய படுகொலையை செய்துள்ளது. இச்சம்பவத்தை தடுக்க முனைந்த எஸ்.வீரபாண்டியன் கை வெட்டப்பட்டுள்ளது. சமூக விரோதக் கும்பலின். மிருகத்தனச் செயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர் கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களுக்கான நிவாரணப் பணிகளில் கட்சி அமைப்புகளும், உறுப்பினர்களும் ஈடுபட்டிருந்த நேரத்தில் நடந்துள்ள இந்தப் படுகொலை சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகள் சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டு, கடைத்தெருவில் படுகொலை செய்யும் துணிவு எங்கிருந்து பெற்றனர்? யார், யார் எல்லாம் இந்தப் படுகொலைக்கு காரணமானவர்கள் என்பதை கண்டறிந்து அனைவரையும் விரைந்து கைது செய்வதுடன் குற்றவாளிகள் அனைவரும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்துவிடாமல் கடுமையான தண்டனை பெற்றுத் தருவதை தமிழ்நாடு அரசும், காவல்துறையும் உறுதி செய்ய வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு கேட்டுக் கொள்கிறது.

சமூக விரோதிகளின் வஞ்சகப் படுகொலையில் உயிரிழந்த தோழர் நடேச. தமிழார்வன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, செங்கொடி தாழ்த்தி அஞ்சலி செலுத்துகிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் கூறியுள்ளார்.


## திருவாரூரில் ஜனசக்தி - தாமரை வாசகர் வட்டம் துவக்கம்

நவம்பர் 7 சோசலிஸ் புரட்சி நாள் மட்டுமல்ல அந்த நாளில்தான் 7.11.1937 ஜனசக்தி இதழை தோழர் ஜீவா துவக்கினார். எனவே இவை இரண்டையும் சிறப்பிக்கும் பொருட்டும் இளைஞர்கள் அறிவுப்பாசரை வட்டத்தில் கொண்டுவரவேண்டும் என்ற நோக்கத்திலும் ஜனசக்தி தாமரை வாசகர் வட்டம் என்ற அமைப்பு திருவாரூர் ஒன்றிய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் ஜனசக்தி வாசகர்களுடன் சந்திப்போம் சிந்திப்போம் என்ற குரலோடு கூட்டம் நடைபெற்றது.

வாசகர் வட்டத்தின் அமைப்பாளரும் நகர கட்சி செயற்குழு உறுப்பினருமான வீ. தர்மதாஸ் நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்றார். மாவட்டக்குழு உறுப்பினர் இ.செல்லமணி லெனின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்தார். நகர செயற்குழு உறுப்பினர் ஈசாக்துரை ஜீவாவின் படத்திற்கு மலர்மாலை அணிவித்தார்.

நகரதுனைசெயலாளர் எஸ். செல்வம் அனைவரையும் வரவேற்றிப்பேசினார். இசைசித்தன் ஜீவாவின் பாடலைபாடி அனைவரையும் நெகிழவைத்தார். இயற்கை விவசாய பாதுகாப்பு மாநில துனைசெயலாளர் ஜி.வரதராஜன், பாட்டாளி பாசறையின் செயலர் சத்தியநாராயணன், மருத்துவர் சங்கத்தின் மாவட்ட செயலர் முருகானந்தம்,செல்வரங்கன், ஒன்றியச்செயலர் கே. புலிகேசி உள்ளிட்டோர் உரையாற்றினர்.

கூட்டத்தின் முடிவில் ஜனசக்தி வாசகர்கள் மாதம் ஒருமுறை கூடி ஜனசக்தி கட்டுரைகள் மீது விவாதம் நடத்துவது, ஜனசக்தி ஆண்டு சந்தா சேர்ப்பது, படைப்பாளிகளை உருவாக்குவது போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டன.



அ.குமரேசன்

## தோழர் நடேச.தமிழார்வன் படுகொலை நமக்கு உணர்த்துவது என்ன?

**ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த கீழத் தஞ்சையில் (இன்றைக்கு திருவாரூர், நாகை, மயிலாடுதுறை மாவட்டங்கள்) பெரிய பண்ணைகள் மற்றும் கோயில் மடாதிபதிகளிடம் விவசாய நிலங்கள் இருந்ததால், அந்த நிலங்களில் வேலை செய்கின்ற பட்டியல் சாதியினரை, மேற்கூறிய பண்ணையில் வேலை செய்கின்ற வேறு பிரிவு வேலையாட்கள் இவர்களை அடிமைகளாக நடத்தினார்கள். கூலி, உணவு, உடை, ஓய்வு, கல்வி இவைகள் அவர்களுக்கு மறுக்கப்பட்டன.**

இந்த சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வினை மாற்றுவதற்கு கம்யூனிஸ்ட் கட்சி கொடுத்த விலை என்பது, ஏராளமான விலைமதிப்பற்ற எமது தோழர்களின் உயிர்கள். இந்த மாற்றத்திற்கு வித்திட்ட பி.சீனிவாசராவ் முதல் களப்பால் குப்பு வரையிலான எண்ணற்ற தலைவர்கள் இரவு, பகல் பாராமல் உழைத்திருக்கின்றார்கள். அன்றைய பண்ணை சுரண்டலிலிருந்து இந்த பகுதி மக்களை மீட்டெடுத்து, மனிதன் மனிதனாக வாழ வழிகோலியது கம்யூனிஸ்ட் பேரியக்கம் மட்டுமே.வேறு யாரும் இந்த தியாகத்தில் பங்கு கொள்ள முடியாது. இதன் தாக்கம் கீழத் தஞ்சை மாவட்டம் முழுவதும் செங்கொடி இயக்கம் அன்றைக்கு வலுவாக கட்டியமைக்கப்பட்டது.

வரலாற்று முக்கியத்துவம் பெற்ற நில மீட்சி போராட்டம் நடத்திய பிறகு தான் நிலம் இல்லாதவர்களுக்கும், குத்தகை சாகுபடி தாரர்களுக்கும் நிலம் கிடைத்தது என்பது வரலாறு. ஆகையால், போராட்டங்களும், சிறைவாசமும் கம்யூனிஸ்ட்களுக்கு என்றும் புதிதல்ல. எங்கெல்லாம் மனித சமூகத்திற்கு கொடுமை இழைக்கப்படுகிறோ அதனை கண்டு பொங்கி எழுபவனே உண்மையான கம்யூனிஸ்ட். அந்த வகையில் உண்மையான கம்யூனிட்டாக வாழ்ந்து, நவீன முதலாளித்துவ சுரண்டலை எதிர்த்து, தன் கடைசி மூச்சு வரை நீடாமங்கலம் பகுதி மக்களுக்காக வாழ்ந்து தன் உயிரை இழந்த மாவீரன் நடேச.தமிழார்வன் ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் என்பதில் நாம் பெருமை கொள்வோம்.

25.05.1969 ஆம் ஆண்டு பிறந்து 52 வயதே நிறைவு பெற்ற நடேச.தமிழார்வன், பள்ளி பருவத்திலேயே மாணவர் மன்றத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பல்வேறு இயக்கங்களில் பங்கேற்றார். பின்னாளில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் நீடாமங்கலம் பகுதியின் ஒன்றிய செயலாளராக பணியாற்றினார். தன்னுடைய இளம் வயதிலேயே தவறுகளை நேருக்கு நேராக சுட்டிக் காட்டும் வல்லமை படைத்தவர். சமூக விரோத செயல்களை எந்த காலக் கட்டத்திலும் அவர் அங்கீகரித்ததில்லை. சமரசமற்ற போராளி. மாணவர்களை, இளைஞர்களை தன்னுடைய எழுச்சிமிக்க மார்க்சிய சித்தாந்த பேச்சால் தட்டி எழுப்பியதால் அந்த பகுதி இளைஞர்கள் அவரை "மாவீரன்" என்றே அழைக்கின்றனர். கட்சியின் முடிவுகளை நிறைவேற்றுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். அதனால் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நீடாமங்கலம் ஒன்றிய செயலாளராக 2011ம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார். பொறுப்பேற்ற நாள் முதல் கட்சியின் அமைப்புகளை வலுவாக கட்டியமைப்பதில் கவனம் செலுத்தினார். அதில் வெற்றியும் கண்டார்.

கட்சியின் முடிவுகளை நிறைவேற்றும் தலைவர்களின் பட்டியலில் முன் வரிசையில் நின்றார். கட்சி நடத்தும் போராட்டங்கள் அனைத்தும் நீடாமங்கலம் பகுதியில் வீரியம் மிக்க போராட்டங்களாக மாறின. அவ்வாறு நடைபெற்ற போராட்டங்களில் மிக முக்கியமானது 48 மணி நேர சாலை மற்றும் ரயில் மறியல் போராட்டம். பல ஆயிரம் மக்களை திரட்டி அரசின் கவனத்தை திசை திருப்பினார். இதில் சிறப்பு என்னவென்றால் இளைஞர்களை அதிகளவில் பங்கேற்க வைத்தது. அது மட்டுமல்ல ரயில்வே மேம்பாலம், மணல் கொள்ளைக்கு எதிராக, கனிமவளங்கள் சுரண்டலுக்கு எதிராக, கஞ்சா, அபின் போன்ற போதை பொருட்கள் விற்பனையை எதிர்த்து நடத்திய போராட்டங்கள் என ஏராளம் கூறலாம்.

கனிமவள சுரண்டலுக்கு எதிரான இவரது போராட்டங்கள் காவல் துறையையும், சுரண்டல்காரர்களையும் எரிச்சலடைய வைத்துள்ளது. அதே போல், போதை பொருட்கள் விற்பதை தடுப்பதற்கு இவர் எடுத்த முயற்சிகளால் காவல்துறைக்கும் இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது. பூவனூர் ராஜ்குமார் என்பவன் தமிழார்வனை பெரிய தடைக்கல்லாகவே கருதியுள்ளான். தமிழார்வன் என்ற ஒற்றை ஆளுமை இவர்களுக்கெல்லாம் சிம்ம சொப்பனமாக இருந்த காரணத்தால் கொள்ளையர்கள் ஒன்றிணைகிறார்கள். கூலிப்படை ராஜ்குமார் தலைமையில் 6 பேர் கொண்ட நபர்கள் ஏவிவிடப்படுகிறார்கள், பட்டப்பகலில் 10.11.21 ஆம் நாள் மாலை 4 மணியளவில் மனிதர்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியில் நடுரோட்டில் வைத்து மிக துணிச்சலாக தமிழார்வனை கழுத்தில் வெட்டுகிறான் கொலையாளி ராஜ்குமார். நம்முடைய பாசத்திற்குரிய தோழனின் உயிர் இந்த மண்ணை விட்டு, நம்மை விட்டு சம்பவ இடத்திலேயே பிரிகிறது.

சம்பவம் நடந்து 2 மணி நேரம் வரை காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்பதால் நம்முடைய சந்தேகமெல்லாம் காவல்துறை பக்கம் திரும்புகிறது. திருவாரூர் மாவட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பல ஆளுமை மிக்க தலைவர்களை சமூக விரோதிகளிடம் பறிகொடுத்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜி.முருகையன், கோட்டூர் ஒன்றிய செயலாளர் பி.ராஜேந்திரன் பி.காம்., மற்றும் கள்ளச் சாராய வியாபாரத்திற்கு எதிராக செயல்பட்ட திருவாரூர் தாலுகா, மாங்குடி ஊராட்சி மன்ற தலைவர் ஜெயக்குமார் என்ற இளைஞர், தற்பொழுது நீடாமங்கலம் ஒன்றிய செயலாளர் நடேச.தமிழார்வன்.

**இவர்களெல்லாம் இந்த சமூகத்தில் நடைபெறும் சுரண்டலுக்கு எதிராக சமரசமற்ற போராட்டத்தால் தங்களது உயிரை பறிகொடுத்தவர்கள். தங்களது குடும்பத்தை பற்றி கவலை கொள்ளாமல் தான் ஏற்றுக்கொண்ட கொள்கையில் உறுதியாக நின்று போராடியதால் இவர்களுக்கு கிடைத்த வெகுமதி கொலைகாரர்களின் ஆயுதங்களுக்கு இறையானது மட்டுமே. ஆனால், சமூகத்தில் சுரண்டல்காரனாக வாழ்பவர்கள் தைரியமாக நடமாடுகின்றார்கள்.**

இந்த ஏற்ற தாழ்வுக்கு யார் காரணம்? அரசு சற்று சிந்திக்க வேண்டும். கூலிப்படையினை பயன்படுத்தி எங்களுக்கு உயிர் பயத்தை காட்டினால் நாங்கள் பயந்து ஓடி விட மாட்டோம். நாங்கள் கொண்ட கொள்கையிலிருந்து ஒரு நாளும் விலகி சென்று விட மாட்டோம். ஒரு நடேச.தமிழார்வன் மட்டுமல்ல, ஓராயிரம் தமிழார்வன் வருவார்கள். இதே கொள்கையை உயர்த்தி பிடிப்பார்கள். காலம் நிச்சயமாக கனியும் எங்களுடைய கொள்கையான "சுரண்டலற்ற சமுதாயமும் உருவாகும், ஏற்றதாழ்வு இல்லாமல் எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க செய்வோம்". இவையெல்லாம் நடைபெற வேண்டுமென்றால் நமக்கு நாமே அரணாக மாற வேண்டும். நமக்கு தேவையான பாதுகாப்பு வளையத்தை நாமே போட்டுக் கொள்ள வேண்டும். இது காலம் நமக்கு கொடுத்திருக்கின்ற எச்சரிக்கை மணி. இனி நாம் எந்த ஒரு தலைவரையும் சமூக விரோதிகளிடம் இழக்க தயாரில்லை. முன்னெச்சரிக்கையோடு பாதுகாப்பாக சேவை புரிவோம்.

தொடர்புக்கு: 97894 35069



இளசை கணேசன்

# தமிழருக்கு தா...

இஸ்லாமியர்களும், கிறிஸ்துவர்களும் தங்கள் தாய் மதத்திற்கு திரும்ப வேண்டும்!

கிறிஸ்துவம் ஐரோப்பாவிலிருந்து வந்தது! இஸ்லாம் அரேபியாவிலிருந்து வந்தது!

என்றவாறு நாக்கு தடித்து பேசப்படு கின்றன. தர்க்கம் செய்யும் நோக்கத்தில் அல்ல, தரவுகள் இல்லாமல் தமிழர்களைப் பிளவுபடுத்தும் முயற்சி இது.

தடுமாற்றம் இருக்கிறது. கிறிஸ்துவம் ஐரோப்பாவில் தோன்றியது அல்ல. அது தோன்றிய இடம் மத்திய ஆசியா.

அது தோன்றிய போது, உலகம் கண்டங்களாகப் பிரிக்கப்படவில்லை. உலக வரைபடம் எப்போதும் ஒரே மாதிரி இருக்காது.

* தமிழர்களுக்கு தாய் மதம் உண்டா?

* எது தாய் மதம்?

என்று கேள்விகள் எழுந்த பின்பு ...

'நான் பேசியது தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. இந்து மதத்தில் சேரச் சொல்லவில்லை. சைவம் மாலியம் (வைணவம்) மதங்களில்தான் சேரவேண்டும் என்றுதான் சொன்னேன்''

என்று அந்தர் பல்டி அடிக்கப்பட்டுள்ளது.

என்ன சொல்ல வருகிறார்?

இதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டுமா? புதிய தலைமுறைக்கு வரலாற்று உண்மைகள் தெரிய வேண்டும் என்பதே நமது நோக்கம்.

சைவமும் வைணவமும் தமிழர்களின் தாய் மதங்களாம்!

கிறிஸ்தவமும் இஸ்லாமும் அந்நிய நாட்டிலிருந்து வந்த வந்தேறிகள்!

இங்கே சொல்லால் சொல்ல வருவது எது?

சமணம், பௌத்த மதங்களை வந்தேறி மதங்கள்!

ஏற்கனவே அண்டை மாநிலத்திலிருந்து குடியேறி தலைமுறை தாண்டி வாழ்ந்து வருபவர்களை 'வந்தேறிகள்'...

என்று வாய் கூசாமல் சொல்லி வருகிறார்.

தரவுகள் இல்லாமல் தற்குறி போன்று தடுமாறக் கூடாது.

* சைவமும் – வைணவமும் தமிழர்களுக்கு தாய் மதம் இல்லை! இல்லவே இல்லை!

* தமிழர்களுக்கென்ற தனித்த 'மதம்' எதுவும் இல்லை.

*எந்த மதத்தையும் தனக்காக உருவாக்க வில்லை!

தமிழர்களின் பொருளாதார, சமூக, அரசியல், பண்பாட்டு வாழ்வை அறிவியல்பூர்வமாக ஆராய்ந்து அறிய வேண்டும்.

அப்போது தான் தமிழர்களின் வாழ்வியல் வரலாற்றின் இயங்கு சக்தி எது? என்பதை கண்டறிய முடியும்.

இதை விட்டுவிட்டு ''பூனை'' கண்ணை மூடிக்கொண்டு சூரியனை ''தேடுவது போன்று'' தமிழர் வரலாறு தெரியாமல் உரத்துப் பேசுவது அரசியல் ஆதாயம் தேடுவது என்பது தான்.

தமிழர் வாழ்வியல் வரலாற்றின் இயங்கு சக்தி எது?

தமிழர்களுக்கு தொன்மையான பொருள் முதல்வாதக் கண்ணோட்டம் இருந்திருக்கிறது.

**“முதல் எனப்படுவது நிலம் பொழுது.**
**இரண்டின் மொழிப இயல்புணர்ந்தோ ரே”**

(தொல்காப்பியம்) நிலத்தையும் பொழுதையும் முதல் பொருட்கள் என்று தமிழன் அறிந்திருக்கிறான் என்பதை இப்பாடல் விளக்குகிறது

தமிழரின் வாழ்வியல் என்பது நானிலம் – ஐந்திணை கோட்பாடு என்பதாகும்.

இவை நிலம் சார்ந்து இருப்பதால் 'புவியியல் பொருளாதார வாழ்வு' என்றும் இயற்கை சார்ந்து இருப்பதால் 'இயற்கை பொருளாதார வாழ்வு' என்றும் கூறலாம்.

பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் நிலம் எனும் பூமி இயங்குகிறது. என்ற 'இயங் கியல்' தமிழன் அறிந்திருக்கிறான்.

**“மண் திணிந்த நிலமும்**
**நிலம் ஏந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும்**
**வளித் தலை இய. தீயும்**
**தீ மு ரணிய நீரும் என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கை போல”....**

(புறநானூறு)

பஞ்சபூதங்கள் ஒன்றை ஒன்று ஈர்த்தும், முரண்பட்டும், சேர்ந்தும் இயங்குகின்றன என்பதை இப்பாடல் விளக்குகிறது.

அச்சம்(பயம்), ஆச்சரியம் (வியப்பு), அறியாமை (அறிவியல் வளராத நிலை) காரணமாக ஏதோ ஒரு அபார சக்தி என்பது நம்பப்பட்டது.

என்றாலும் சங்கத்தமிழன் இயற்கையோடு இயைந்து வழிபட்டிருக்கிறான்.

**“மாயோன் மேய காடு உரை உலகமும்**
**சேயோன் மேய வைகறை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெரு மணல் உலகமும்“**

(தொல்காப்பியம்)

குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் ஆகிய நானிலங்களுக்கும் நிலம் அடிபடையில்...

மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்பதோடு கொற்றவை என்பதையும் சேர்த்து தமிழன் வழிபட்டுள்ளான் என்பதை பாடல் விளக்குகிறது..

தமிழன் பசி, பிணி, பகை இல்லாத அற வாழ்க்கை வாழ்ந்தான். ஊண், உடை உறைவிடம் என்ற தேவையை நோக்கி முன்னேறினான்.

**“அறநெறி புணர்ந்தே திறனறி செங்கோல்”**

(பொருநராற்றுப்படை)

பெரும் படைகள் சிறப்பாக இருந்தாலும் அற நெறியில் திகழ்வதே வேந்தனின் சிறப்பு என்று இப்பாடல் விளக்குகிறது.

சமூகத்தை 'அகம்' - 'புறம்' என்றும் தமிழர்கள் பகுத்தார்கள்.

கணவன் மனைவி கூடி வாழும் வாழ்க்கை ''அகவாழ்வு' என்றும் இவர்கள் சமூகத்தோடு கூடி வாழும் வாழ்க்கை 'புறவாழ்வு' என்றும் கொண்டனர்.

'அறம் பொருள் இன்பம்' என்ற மூன்று கோட்பாடுகள் வகுத்த மரபு தமிழ் மரபு.

பின்பு இத்துடன் 'வீடு' என்பதையும் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

தமிழர்களின் சிந்தனைக்குஎல்லைஇல்லை. உலகளாவிய பார்வை இருந்திருக்கிறது.

**... ஆதி பகவன் முதற்றே உலகு**
(திருக்குறள்)
**... உலகம் உவப்ப** (திருமுருகாற்றுப்படை)
**... உலகத்தீரே உலகத்தீரே** (கபிலர்)
**... அம்கண் உலகளித்தனர்**
(இளங்கோவடிகள்)
**... உலகெலாம் உணர்ந்து** (சேக்கிழார்)
**... மலர்தனை உலகின் மல்இருள் அகல**
(நன்னூல்)
**... உலகம் யாவவையும்** (கம்பர்)
**... மலர்தனை உலகத்து** (நாற்கவி ராகநம்பி)

.... இதுபோன்று 200 இடங்களில் உலகம் என்ற சொல் பழந்தமிழில் வருகிறது. இவ்வாறு இருந்த தமிழனின் உலகப் பார்வை இன்று எங்கே போனது?

தமிழனின் மரபு முக்கியமாக சமத்துவப் பண்பு மரபாக விளங்கியிருக்கிறது.

**“யாதும் ஊரே யாவரும் கேளிர்”**
(கணியன் பூங்குன்றனார்)
**“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்”**
(திருக்குறள்)
**“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்”**
(திருக்குறள் )
**“எல்லாரும் எல்லா பெருஞ் செல்வமும் எய்தலாலே இல்லாரும் இல்லை உடையாரும் இல்லை”** (கம்பர் )
**“சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்“**
(பாம்பாட்டிசித்தர்)
**“மனிதரே உலகின் தலைவன்”**
(உலகாயத சித்தர்)
**“ஒன்றே குலம் ஒருவனே தேவன்”**
(திருமூலர்)
**“அனைவருக்குமான ஆன்ம விடுதலை”**
(ராமானுஜர் )
**“சாதி இரண்டொழிய வேறில்லை”**
(ஔவையார்)
**“சாதி குலம் என்றும் சமய மதம் என்றும் நீதி இயல் ஆச்சிரம நீட்டை ஓதுகின்ற பேயாட்டம் எல்லாம்“.**
(ராமலிங்க அடிகளார்)

இவை போன்று இன்னும் ஏராளமானவை தான், தமிழர்களின் பண்பு மட்டுமல்ல சமத்துவப் பண்பு ஆகும்.

இதுதான் தமிழர் வாழ்வியல் வரலாற்றின் இயங்கு சக்தி!

இதுதான் தடுக்கப்பட்டு உடைக்கப்பட்டு கிடக்கிறது.



தமிழரின் வேளாண்மை வளர்ச்சியில் உற்பத்தி மற்றும் உற்பத்திக் கருவிகளை தன தாக்கி வலிமை பெற்றுமன்னர்கள் உருவாகினர்.

உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்ப 'உழைப்புச் சுரண்டல்' தீவிரமானது.

தமிழ்ச் சமூகம் உழைப்பைச் சுரண்டும்

---

## சங்கிகளின் புரட்டு அரசி...
# அன்று சாத்வி- ...



பேராசிரியர் மு.நாகநாதன்


**இந்தியா விடுதலை பெற்ற 75 ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என பிரதமர் மோடியும் ஒன்றிய அரசும் முற்படுகிற நேரத்தில் சங்கிகளின் கவர்ச்சித் தாரகை கங்கனா 2014 ஆம் ஆண்டிற்குப் பிறகு தான் இந்தியா விடுதலை பெற்றது என்கிறார்.**


அரசமைப்புச் சட்டம் 1950 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்ததன் விளைவாகக் குடியரசு நாடாக இந்தியா அறிவிக்கப்பட்டது.

முதல் குடியரசுத் தலைவராக பாபு ராஜேந்திர பிரசாத் பொறுப்பேற்றார். இதன் பின்னர் குடியரசுத் தலைவரால் வகைவகையான விருதுகள் வழங்கப்படுகின்றன. இங்கேயும் சனாதனம்தான் முன்னிலைப்படுத்தப்படுகிறது. ரத்னா விருதுகள் பட்டியலை ஒரு முறை பாருங்கள். 95 விழுக்காடு பிரம்மா தலையில் பிறந்தவர்களுக்குத் தான் இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

அண்ணல் அம்பேத்கருக்குச் சமூக நீதி காவலர் வி.பி.சிங் பிரதமராக இருந்த போதுதான் 1990 ஆம் ஆண்டில் பாரத ரத்னா விருது அறிவிக்கப்பட்டது. காங்கிரஸ் ஆட்சிக்கும் பாஜக ஆட்சிக்கும் இதில் வேறுபாடுகள் பெருமளவில் கிடையாது. ஒன்றிய அரசை ஆட்டி வைப்பவர்கள் சனாதன சத் குருக்கள்தானே. இன்றைய தேசியம் என்பதே இந்தத் திருட்டுக் கும்பலின் திருவிளையாடல் தானே; பாஜக ஆட்சிக் காலத்தில் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்ற ராம்நாத் கோவிந்த் கையால் சென்ற வாரம் பத்ம விருதைப் பெற்ற சூட்டோடு சூடாகக் கவர்ச்சி நடிகை கங்கனா,

இந்திய விடுதலை போரை, அப்போரில் களம் கண்ட உயிர் நீத்த, அளப்பரிய அர்ப்பணிப்பை அளித்த எண்ணற்றத் தியாகிகளைக் கேவலப்படுத்தும் செயலைச் செய்துள்ளார்.





எல்லா மதங்களும் மனிதனைக் கட்டுப்படுத்துவதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளன. மனிதனுக்கு வெளியே புறநிலை பற்றிய வினோதமான பிரதிபலிப்பே மதத்தின் அடிப்படை. இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியாக கடவுள் சக்தி மதத்தோடு உருவகப்படுத்தப்படுகின்றன.

**– ஏங்கல்ஸ்**

# ய் மதம் உண்டா?



ஆதரவைப் பெற முடியும் என்பதால் சமயங் களுக்கிடையே கடும் போட்டி நிலவியது.

இந்தப்போட்டியில் சமண – பௌத்த சமயங் களுக்கு இணையாக வைதீக சமயம் போட்டியிட முடியவில்லை பின்னடைவைச் சந்தித்தது.

சமணமும் – பவுத்தமும் தமிழர்களின் பொருளாதார, சமூக, அரசியல், பண்பாட்டு வாழ்வோடு ஓரளவு இணைந்து செயல்பட்டன.

தமிழ் இலக்கிய, இலக்கணங்களில் தாக் கத்தை ஏற்படுத்தின.

குறிப்பாகச் சமணமும் – பவுத்தமும் உழைக் கும் மக்கள் பக்கம் நின்று அவர்களின் நலன் களை பிரதிபலித்தன என்று கூறலாம்.

வைதீகம் ஆளும், அதிகார வர்க்க நலன் களை பிரதிபலித்தது. இதிலிருந்துதான் தமிழ் பண்பாட்டு மரபு தடுக்கப்பட்டு, முடக்கப்பட்டது.

**☼ பார்ப்பனியம், வைதீகம், சமஸ்கிருத ஆதிக்கம், வர்ணப் பாகுபாடு, சாதிய ஏற்றத் தாழ்வு, தீண்டாமை போன்ற பார்ப்பனிய கொள்கைகள்...**

**☼ மன்னர்களின் உழைப்புச் சுரண்டல், சொத்து குவித்தல், ஆட்சியில் நிலைத்தல், மக்கள் மீதான அடக்குமுறைகள், மன்னர்களின் போர்கள் போன்ற உடைமை வர்க்கத்தின் ஆதிக்க நலன் சார்ந்த கொள்கைகள்..**

**இவற்றிற்கு எதிராக சமண - பௌத்த மதங்கள் கடுமையாகப் போராடின.**

பல்லவர், களப்பிரர்கள் ஆட்சியில் சமண, பௌத்த சமயங்கள் செழித்து வளர்ந்தன.

வேதம், யாகம், சமஸ்கிருதம், மந்திரம், சடங்குகள், ஊழ்வினை, சோதிடம், நல்ல நாள் குறித்தல் போன்றவை மூலம் வைதீகம் மன்னர்களின் ஆதரவைப் பெற்றது.

பதிற்றுப்பற்று பதிகங்களில் அரசர்கள் ஆற்ற வேண்டிய வேள்விகள் பற்றிய குறிப் புகள் உள்ளது.

பிற்காலப் பல்லவர்கள், பிற்காலப் பாண்டி யர்கள், பிற்காலச் சோழர்கள், விஜயநகர மன் னர்கள் ஆட்சிகளில்...

வைதீகம் மன்னர்களின் ஆதரவை முழுமை யாகப் பெற்று மன்னர்களின் மடியில் அமர்ந்து கொண்டு ஆதிக்கம் செலுத்தியது.

சமண, பௌத்த சமயங்கள் மீது தாக்கு தலைத் தொடுத்தது.

பிராமணர்கள் இடையே ஏற்பட்ட பூசல்கள் காரணமாக இரு பிரிவாக பிரிந்தனர்.

தமிழ்நாட்டில் இருந்த சிவ வழிபாட்டில் ஒரு பிரிவினரும் திருமால் வழிபாட்டில் மற்றொரு பிரிவினரும் புகுந்தனர்.

அப்போது சிவ வழிபாடும், திருமால் வழி பாடும் சமயமாக உருவாகவில்லை.

சைவத்தில் 63 நாயன்மார்கள் முக்கியத் துவம் பெற்றவர்கள்.

அதில் பேரரசர்கள் 6, குறுநில மன்னர்கள் 5, பிராமணர்கள் 16, மரபற்றவர் 7, வணிகர் 6, வேளாளர் 13, இடைநிலை மற்றும் தாழ்ந்த சாதியினர் 10 பேர்.

இதுதான் சமூக சேர்க்கை. இதிலிருந்து சைவ நாயன்மார்களில் பிராமணர்கள் ஆதிக் கம் தெரிகிறதா?

இதேபோன்று வைணவத்தில் 12 ஆழ் வார்கள் முக்கியத்துவம் பெற்றவர்கள்.

இவர்களில் சாதி பார்க்க கூடாதாம்!

ஆழ்வார்கள் இறைவனை நேரில் பார்த் தவர்கள் எனவே அவர்களின் குலம், சாதி பற்றி பேசவோ ஆராயவோ கூடாது என்று அவர்களின் பக்திப் பனுவல்களில் கூறப்பட் டுள்ளது.

இதையும் மீறி மதுரகவியாழ்வார் பிராமணர் என்றும் தொண்டரடிப் பொடியாழ்வார் தாழ்ந்த சாதி என்றும் தெரிய வருகிறது.

வைணவ ஆச்சாரியார்களில் ஸ்ரீ வேதாந்த தேசிகர் ஒப்புயர்வானவர். இவர் "யாரும் வரு ணாசிரமத்தை மீறக்கூடாது பிறப்பு முதல் இறப்பு வரை சாதி அப்படியே இருக்கும்" என்று வலியுறுத்தினார்.

ஆழ்வார்களுக்குள்ளேயே தீண்டாமை இருந்தது.

வைணவ சமயத்தின் பிராமணர்கள் ஆதிக் கம் தெரிய வருகிறதா?

பிராமண ஆதிக்கத்தின் கீழ் சமண – பௌத்த சமயங்களின் எதிர்ப்பைக் கூர்மை யாக்க சிவன் – திருமால் வழிபாடுகள் சைவ சமயம், வைணவ சமயம் என்று மாற்றப்பட்டன.

இதில் வைதீக பார்ப்பனர்கள் முக்கியப் பங்காற்றினர்.

அரசர்கள் ஆதரவு, பக்தி இயக்கம், துறவு எதிர்ப்பு, பிற சமயக் கூறுகளைச் சுவீகரித்தல், அழித்தொழித்தல் போன்ற பல நடவடிக்கைகள் மூலம் சமண, பௌத்த சமயங்கள் வீழ்த்தப்பட்டன.

சைவம் (சிவன்), வைணவம் (திருமால்), காணபத்தியம (கணபதி), சௌரம் (சூரியன்), கௌமாரம் (முருகன்), சாக்தம் (சக்தி) ஆகிய ஆறு சமயங்களோடு...

வைதீகத்தையும், குல தெய்வ வழிபாடு களையும் மற்றும் சமண – பௌத்த கூறுகளையும் ஒருங்கிணைத்து உருவானதுதான் 'இந்து மதம்.'

இதன் முரண்பாடுகளை தனித்து ஒருங் கிணைப்பதில் முக்கியப் பங்காற்றியவர் சங்கரர்.

இப்படி சூழ்ச்சி வலை, வஞ்சகம், ஏமாற்று, போன்றவற்றின் மூலம்தான் இந்து மதம் உரு வானது.

மேலே குறிப்பட்ட ஆறு சமயங்களும் இந்து மதத்தின் பிரிவுகள் அல்ல. முன்னோடிகளும் அல்ல.. உபநதியும்! அல்ல கிளை நதியும் அல்ல! செயற்கையாகக் கால்வாய் வெட்டப்பட்டுச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

எனவே..

அறியும் சிவனும் ஒன்னு அறியாதவன் வாயில் மண்ணு என்று பரப்பப்பட்டது.

**சைவ சமயம், வைணவ சமயம் என்பவை தமிழர் மதங்கள் அல்ல.**

**தமிழர்களின் தாய் மதமும் அல்ல.**

**தமிழர்களால் உருவாக்கப்பட்ட மதமும் அல்ல.**

**தமிழர் மரபைப் பின்பற்றும் சமயங்களும் அல்ல.**

**தற்போது ஒவ்வொரு கட்டமாக தோண்டி எடுக்கப்படும் கீழடி அகழ்வாய்வுகள் தமிழர்களுக்கு மதம் இல்லை என்பதை மெய்ப்பிக்கிறது.**

**சைவம், வைணவம், வைதீகம் இந்த மூன்றும் பிராமணர்களால் உருவாக்கப்பட்டு ஆதிக்கம் செலுத்தப்பட்டவைதான்.**

**மூன்றுக்கும் ஒரே விதமான அடிப்படைகள் தான்.**

சதுர் வர்ண அடிப்படையில் வைசியர், சூத் திரர் மீது பிராமணர், சத்திரியர் எதிர்ப்பு, பஞ் சமர் அடிமை

இந்த அடிப்படையை எப்போதும் விட்டு விடக் கூடாது. இதன்படி

* சமண, பௌத்த எதிர்ப்பு மற்றும் அழிப்பு .
* பார்ப்பன சமஸ்கிருத ஆதிக்கம்.
* வருணப் பாகுபாடு.
* சாதிய ஏற்றத்தாழ்வு, தீண்டாமை.
* மூடநம்பிக்கை, பிற்போக்கு.
* வகுப்பு வெறி...
* அறிவியல் அணுகுமுறை இல்லை.
* சமத்துவ பண்புகள் கிடையாது.
* ஜனநாயகப் பண்புகள் துளியும் இருக்காது.
* அன்பு, அறம் உதட்டளவில் பேசப்படும்.

இத்தகைய அடிப்படைகள் கொண்ட இந்த மூன்று மதங்களும் தமிழர்களின் மதமாக எப்படி இருக்க முடியும்?

சைவம், வைணவம், வைதீகம் இந்த மூன்று மதங்களும் தமிழ் மரபில் புகுந்து தமிழ் மரபைச் சீரழித்திருக்கின்றன.

தமிழர் மரபு தடுக்கப்பட்டு முடக்கப்பட்டிருக் கின்றன. இதன் சூத்திரதாரி பார்ப்பனர்களும், ஆளும் வர்க்கமும்தான்.

* இன்று சத்திரியர் என்ற வருணம் இல்லை.
* சங் பரிவார், ஆட்சியில் கோலோச்சு கின்றனர்.
* கார்ப்பரேட் நலனுக்காக தங்களை அர்ப் பணித்துக் கொள்கின்றனர்.
* நெருக்கடியை திசை திருப்ப வகுப்பு வெறியை அறங்கேற்றுகின்றனர்.

இந்தக் கோரப்பிடியிலிருந்து தமிழகத்தை, தமிழர்களின் சமத்துவ பண்பாட்டு மரபை மீட் டெடுப்பது ஒன்றுதான் மரபு சார்ந்த கடமை.

வாய்ப் பேச்சு வீரரர்களின் வாய் அடைப் போம்!

தொடர்புக்கு: **8220468816**

உடமை வர்க்கம் மற்றும் சுரண்டப்படும் உழைக் கும் வர்க்கம் இரு பிரிவுகளாகப் பிரிந்தன.

சங்க காலத்திலேயே ஆசீவகம், சமணம், பௌத்தம், வைதீகம் போன்ற மதங்கள் வடநாட்டிலிருந்து தமிழகத்திற்கு வந்தன.

பொது மக்களை ஈர்த்து அதன் மூலம் தாக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் அரசின்

## யலும், இரட்டை வேடமும்- இன்று கங்கனா



அரசமைப்புச் சட்டத்தைக் குடியாட்சி முறைமையை, நீதி நிர்வாகத்தை இழிவுபடுத்தும் துணிவு இந்த நடிகைக்கு எப்படி வந்தது?

2014 ஆம் ஆண்டிற்குப் பிறகு சனாதன சங்கிகள் ஆடும் ஆட்டம் குறைவா என்ன?

இரட்டை வேடம், பொய், பித்தலாட்டம், வெறுப்பை வளர்த்து நாட்டை, சமூக நல்லுறவைச் சீர்குலைக்கும் செயல்கள் தொடர்கிறதே! இந்த சனாதன சங்கிகள் ஆடும் ஆட்டத்தின் சில காட்சிகள் நமக்குச் சாட்சியங்களாகக் கண் முன் நிற்கின்றனவே!

சீனத் தலைவர் ஜீபிங்கை 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் குஜராத்தில் உள்ள காந்தியின் சபர்மதி ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்றவர் பிரதமர் மோடி. அது மட்டுமா?

குஜராத் கலாச்சாரத்தின் பெருமைகளையும் எடுத்துக் கூறினார் பிரதமர் மோடி.

காந்தி இராட்டை சுழற்சி செய்து காட்டப்பட்டது.

ஆகா! ஆகா !! என ஊடகங்கள் மோடியின் காந்தி பற்றினைக் கண்டு மனம் உருகின.

2019 ஆம் ஆண்டு ஜனவரி 30 அன்று அலிகார் நகரில் காந்தியின் புகைப்படத்தைப் பெண் சாமியார் சாத்வி, துப்பாக்கியால் சுட, 30 இந்து மகா சபை உறுப்பினர்கள் கை தட்டி ஆரவாரம் செய்து கோட்சேவுக்கு வீரவணக்கம் செய்தனர். என்ன தண்டனையை இந்தப் பெண் சாமியாருக்கு அரசும் நீதிமன்றமும் வழங்கின?


காந்தி படத்தைச் சுட்ட பெண் சாமியாருக்கு 2019 நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அளித்துக் களித்தனர் மோடி அமீத் ஷா பாஜக சங்கிகள். எனவே தான் கங்கனாவின் குரலுக்குப் பின்னாள் சங்கிகள் இருக்கிறார்கள் என்ற ஐயம் எழுகிறது. நடவடிக்கை எடுப்பார்களா? பத்ம விருது போதாது

வரும் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை கங்கனாவுக்கு அளித்து விடுதலை விழா 75 ஆம் ஆண்டின் சிறப்பை சிறுமைப்படுத்துவார்களா?

ஏற்கனவே இடைத்தேர்தலில் மக்கள் விழித்துக் கொண்டு உள்ளனர் என்பதை அடையாளம் காட்டிவிட்டதே!

இட்லர்கள் வெற்றி பெற்றதே இல்லை என்பதுதானே வரலாறு சுட்டும் பாடம்!

> மதங்கள் தோன்றியதற்கான சூழ்நிலைகளை ஆராய்ந்து அதற்கேற்ப அதை முறியடிக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாமல் மத நம்பிக்கையோடு மோதினால் அது மத நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும். இது வர்க்கப் போராட்டத்தை திசை திருப்பி முதலாளித்துவத்தை ஆதரிக்கும் **- ஜீவா**





ந.சேகரன்

## பிரபல விஞ்ஞானி, கம்யூ பொதுச்செயலாளரானார்

# தோழர் ஜி.அதிகாரி

**உலகப்புகழ் விஞ்ஞானியாக இருக்க வேண்டியவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக ஆனவர்தான் தோழர் கங்காதர மொரேஸ்வர அதிகாரி என்ற ஜி.அதிகாரி.**

1898 டிசம்பர் 8 இல் நிலப்பிரத்துவ பின்னணி கொண்ட குடும்பசூழலில் பம்பாய் பான்வெல் என்ற இடத்தில் பிறந்தவர் அதிகாரி. ஆரம்ப பள்ளி படிப்பை மும்பை தாதரிலும் கல்லூரிபடிப்பை 1916 வில்சன் கல்லூரியிலும் படித்தார்.

1918 இல் பாலகங்காதார திலகரின் எழுச்சிமிக்க உரையால் ஈர்க்கப்பட்டார். எஸ்.ஏ.டாங்கே நிறுவிய மராத்தி இலக்கியக் கழகச் சொற்பொழிவுகளை கேட்க நேரிட்டது அதிகாரிக்கு. குதிராம் போஸ் மற்றும் ஆர்.ஜி.பாண்டார்கர் புகழ்பெற்ற விஞ் ஞானி ஜெ.சி.போஸ் ஆகியோரது ஆளுமைகளால் கவரப்பட்டார் அதிகாரி.

### விஞ்ஞான பாடத்தில் நாட்டம்

பெங்களூரிலுள்ள இண்டியன் இன்ஸ்டியூட் ஆப் சயின்ஸ் கல்விக் கூடத்தில் அறிவியல் ஆராய்ச்சியாளராக சேர்ந்தார். அறிவியலில் ஜெர்மன் கண்டுபிடிப்புக்களால் ஈர்க்கப்பட்டவர். அதை முழுமையாக புரிந்துகொள்ள ஏதுவாக ஜெர்மன் மொழியைக் கற்று தேர்ந்தார். அதுபோழ்து, பேரியம் சல்பேட்டியிலிருந்து உப்புக்களைப்பிரித்தெடுப்பது குறித்து எம்எஸ்சி ஆய்வுக்கட்டுரை எழுதினார். இதன்காரணமாக நேர்முக தேர்வுக்கு ஆஜராகாமல் எம்எஸ்சி படிப்பில் வெற்றி கண்டார்.

விஞ்ஞானத்தில் மேலும் ஞானம் பெற ஜெர்மனியிலுள்ள பிரடெரிக்வில்ஹெம் பல்கலைக்கழகத்தில் அறிவியல் வேதியல் படிப்பில் சேர்ந்தார். ஆறு வருடங்களில் படித்து பெற வேண்டிய டாக்டரேட் பட்டத்தை மூன்றே ஆண்டுகளில் பெற்று வியத்தகு சாதனை புரிந்தார். அந்த பல்கலைக்கழகத்தில் உலக புகழ்பெற்ற விஞ்ஞானிகள் லியோ ஸில்லாட், யுஜெனே விக்ஞர் ஆகியோரை சந்தித்தார். பிரபல விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டின் இந்த பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்தபோதுதான் நமது இளம் விஞ் ஞானியான தோழர் அதிகாரியைப் பார்க்க நேரிட்டது. பின்னாளில் இந்தியாவின் **Council of Scientific Industrial Research** மேலாண்மை இயக்குநராக பணியாற்றிய டாக்டர் ஜாகீர் உசேன் என்பவர் அதிகாரியால் பயிற்றுவிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.


### அரசியல் பிரவேசம்

பெர்லினில் வீரேந்திரநாத் சட்டோபாத்ய என்ற புரட்சிரகமான கம்யூனிஸ்டை அதிகாரி சந்திக்க நேரிடுகிறது. முன்னவர் நிறுவிய இந்தியன் கூட்டமைப்பு எனற அமைப்பின் சார்பிலான கூட்டங்களுக்கு அதிகாரி செல்லும்போது ஜாகீர் உசேன், அபித் உசேன், முஜீப் போன்ற அரசியல்வாதிகளைச் சந்திக்கிறார்.

இறுதியாக இங்கிலாந்து கம்யூ.தலைவர் ரஜினிபாமினி தத் எழுதிய '' ''இன்றைய இந்தியா'' என்ற நூல்தான் அதிகாரியை கம்யூனிஸ்ட் ஆக மாற்றுகிறது. இதன்பின்னர் ஜெர்மன் கம்யூ. கடசி மத்திய அலுவலகத்திற்கு அடிக்கடிசெல்ல ஆரம்பிக்கிறார் அதிகாரி. விரைவில் இந்தியர் கூட்டமைப்பின் தலைவராகவும் ஆகிறார். அங்கு வருகை தந்த மோதிலால் நேரு முகம்மது அலி, சீனிவாச அய்யங்கார் ஆகியோருடன் உரையாடுகிறார்.

1919 இல் கொடுஞ்சம்பவமான ஜாலியன்வாலா பாக் படுகொலை குறித்து ஜெர்மன் மொழியிலே எழுச்சி உரையாற்றுகிறார் அதிகாரி. சரோஜினி நாயுடு, வீரேந்தரநாத் சகோதரி சுகாசினி சட்டோபாத்யாய ,ஜெய்சூர்ய நாயுடு ஆகிய இந்தியத் தலைவர்களையும் அதிகாரி சந்தித்து உரையாடுகிறார்.

1928 இல் அதிகாரி, ஜெர்மன் கம்யூ. கட்சியில் சேர்கிறார். எம்.என்.ராய், மற்றும் கிளமென்ஸ் தத் ஆகியோரையும் சந்திக்கிறார். இதற்கிடையே மராத்தி மொழியில் வெளிவரும் கிராந்தி என்ற இதழுக்கு அவ்வப்போது கட்டுரை எழுதுகிறார். பிரடெரிக்



எங்கெல்ஸ்ஸின் '' கம்யூனிசம் பற்றிய கேள்விகளும்பதில்களும் என்ற புத்தகத்தை ஜெர்மனியிலிருந்து மராத்திக்கு மொழிபெயர்க்கிறார்.

முன் எப்போதும் இல்லாத வகையில் தேர்தலில் 12.6 சதம் வாக்குகள் பெற்று மக்களிடையே செல்வாக்கு பெற்ற ஜெர்மன் கம்யூ.கட்சி பொதுச் செயலாளர் என்னஸட் தால்மான் உரையாற்றும் கூட்டங்களுக்கெல்லாம் தவறாது பங்கேற்கிறார் அதிகாரி. பணியாற்றும்இடங்களில் ஜெர்மன் பத்திரிக்கையான செங்கொடி இதழ்களை வினியோகம் செய்வதோடு விளக்கஉரையும் ஆற்றுவதை வழக்கமாகக்கொண்டிருந்தார் அதிகாரி.

### தாயகம் திரும்பல்

பிரபல விஞ்ஞானிகள் சத்யன்போஸ், சர் சி.வி.ராமன் மேக்நாத் சஹா ஆகியோரின் உதவியுடன் இந்தியாவுக்கு திரும்பும் அதிகாரியை, துறைமுக சிஐடி அலுவலர்கள் அதிகாரியிடமிருந்த மார்க்சிய நூல்களை கைப்பற்றுகின்றனர் இந்த நூல்களைக் கொண்டுதான் பின் நாளில் அதிகாரியை 1929 மீரட் சதி வழக்கில் சிக்க வைக்கின்றனர்.

1928 ல் அதிகாரி, இநதியகம்யூ. கட்சியின் மத்திய கமிட்டிக்கு சேர்க்கப்படுகிறார். அதிகாரி பம்பாய் கிர்னிகாம்கர் யூனியன் தொழிலாளர்களுக்கு மார்க்சிய கல்வி போதிக்கிறார். 1929 மார் 30 இல் மீரட் சதி வழக்குஎன்று ஆங்கிலேயரால் புனையப்பட்ட வழக்கில் பொய் குற்றச்சாட்டுக்குள்ளான 31 பேர்களில் அதிகாரியும் ஒருவர். மீரட் சிறைச்சாலை நாட்களை மார்க்சீய பல்கலைக் கழக கல்வி நாட்களாக மாற்றி அமைத்த பெருமைக்குரிய தோழர்களில் அதிகாரி முக்கியமானவர். உலகப் புகழ் பெற்ற ஆல்பர்ட் ஐன்ஸ்டின் அதிகாரிக்கு மிகவும் பரிச்சயமானவர். இதனால் மீரட் சதி வழக்கிலிருந்து விஞ்ஞானியான அதிகாரியை விடுதலை செய்ய வலியுறுத்தி அப்போதைய பிரிட்டிஷ் பிரதமர் ராம்ஷெய் மக்னால்டு என்பவருக்கு பகிரங்க கடிதம் எழுதியோடு. அதிகாரியின் விடுதலை கோரி அறிக்கை ஒன்றை பொதுவெளியில் பகிரங்கமாக ஐன்ஸ்டின் வெளியிட்டார் என்பதிலிருந்து அதிகாரியின் மேல் ஐன்ஸ்டின் வைத்திருந்த மதிப்பை கணிக்கலாம்.

1933 இல் அதிகாரி மீரட் வழக்கிலிருந்து விடுதலையானர். சிறையிலிருந்து வெளிவந்தஅதிகாரி, மிகவும் பலகீனமான நிலை யில்இருந்த கம்யூ கடசியை புனரமைக்கும் பணியில் ஈடுபட்டு தோழர்களை ஒருங்கிணைக்கும் பணியில் அயராது பாடுபட்டார்.

தொழிலாளர்களது பல்வேறு வேலைநிறுத்தப் போராட்டங்களில் முன்னணியில் நின்றுவழிநடத்தினார். 1934 ல் மீண்டும் கைதுசெய்யப்பட்டு பைகுல்லா சிறைக்கும் பின் பீஜப்பூர் சிறைக்கும் மாற்றப்பட்டார். தோழர் அஜாய் கோஷ் உதவியுடன் லாவகமாக பீஜப்பூர் சிறையிலிருந்து தப்பி கல்கத்தா சென்றார். கல்கத்தாவில் கம்யூ கட்சியின் அறிக்கையை தயாரித்தார் அதற்கு ''உருவாகும் புயல்'' எனத் தலைப்பிட்டு கட்சி மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. .இந்த தருணத்தில்தான் பி.சி.ஷோசி கட்சியின்பொதுச் செயலாளரானார்.

கட்சியின் அதிகார பூர்வ பததிரிக்கையான தேசீய முன்னணி என்ற இதழை உருவாக்குவதில் முன்னணியாய் திகழ்ந்தார். ஆந்திரா மாண்டேனவாரிபாளம் என்ற இடத்தில் கட்சியின் கோடைகால பயிற்சி வகுப்புக்கள் நடத்திய போதுதான் சி. ராஜேஸ்வர ராவை முதன்முதலாக அதிகாரி சந்திக்கிறார்.

இரண்டாம் உலகப் போர்(1939–45) காலத்தில் தலைமறைவு வாழ்க்கையில் டி.ஜி.டெண்டுல்கர் என்பவரது அடுக்குமமாடி குடியிருப்பில் தஞ்சம் கொள்கிறார் அதிகாரி. டெண்டுல்கர்தான் மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாற்று நூலாசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது.1941 இல் சோவியத் யூனியனுக்குத் தப்பிச் செல்ல வேண்டும் என்று நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் விரும்பிய பஞ்சாப் கம்யூனிஸ்ட் பகத் ராம் தால்வார் நேதாஜியுடன் காபூல் வரைபயணம் செய்ய தேவையான உதவிகளைச் செய்தவர் அதிகாரி.

1933 முதல் 1935வரை இந்திய கம்யூ.கட்சியின் அகில இந்தியப் பொதுச் செயலாளராக பணியாற்றினார். 1943 இல் பம்பாயில் நடைபெற்ற இந்திய கம்யூ. மாநாட்டில் மத்திய செயற்குழு மற்றும்பொலிட்பீரோவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். **"Peoples War"** மற்றும் **"People's Age"** ஆகிய கட்சி பத்திரிக்கைகளின் ஆசிரியராக செயல்பட்டார்.

1943 இல் தோழியர் விமல் சமார்த்யை கம்யூன் வாழ்க்கையின் போது திருமணம் செய்து கொண்டு கம்யூன் வாழ்க்கையைத் தொடர்ந்தார்கள்.(அவர்களது ஒரே மகன் விஜய் 1963 இல் ஜீ'ஹீ கடலில் நீந்திய போது கடலால் அடித்துச் செல்லப்பட்டு மரணமடைந்தான. இதனால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து மீளமுடியாமல் இறுதி வரை மனநலம் பாதிக்கப்பட்டவராக அதிகாரியின் மனைவி காலம்எய்தினார் என்பது மிகவும் சோகமானது.)

1948 கல்கத்தா இந்திய கம்யூ.மாநாட்டின்போது பி.டி. ரணதிவே, பவானிசென், சோம்நாத் லாகிரி ஆகியோருடன் அதிகாரியும் மத்திய செயற்குழு மற்றும் பொலிட்பீரோவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்திய கம்யூ. கட்சியின் திட்டம் மற்றும் கட்சியின் அமைப்பு விதிகளை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றினார். மத்திய கட்சிக்கல்வி இலாகா பொறுப்பு வகித்தார். பின்கட்சியின் கட்டுப்பாட்டு இலாகாவின் தலைவராகப் பணியாற்றினார். கட்சியின் வரலாற்றினை ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காக, கட்சியின் உயரிய பொறுப்புக்களிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டார்.

தனது இறுதி மூச்சு வரையிலும் இந்தியக் கம்யூ கட்சி வரலாற்றை 10 தொகுதிகளில் ஆவணப்படுத்தும் பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டார்..

மக்களுக்காக, இந்திய நாட்டுக்காக, இந்திய கம்யூ.கட்சிக்காக தன்வாழ்நாள்முழுமையும் தியாக வரலாறாகத் திகழ்ந்த ஜி.அதிகாரி தனது 82 ஆவது வயதில் 1981 நவம்பர் 21 நாள் இயற்கை எய்தினார். அந்த மாபெரும் தியாக தலைவரைப் போற்றி அவர்தம் வழியில் தொடர்ந்து பணியாற்ற உறுதி ஏற்போமாக.

தொடர்புக்கு: **9443120051**

# மழை பாதிப்பு பகுதிகளில் வை.சிவபுண்ணியம், க.மாரிமுத்து, அ.பாஸ்கர் ஆய்வு

கொட்டும் மழையில் திருத்துறைப் பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, ஒன்றியக்குழு தலைவர் அ. பாஸ்கர் ஆகியோர் தொடர் மழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை ஆய்வு செய்தனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர்,முன்னாள் சட்டமன்ற வை.சிவபுண்ணியம், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் கே. உலகநாதன், வட்டார வளர்ச்சி அலுவலர் சிவக்குமார், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் எல். தமயந்தி, கே சுஜாதா, விவசாய தொழிலாளர் சங்க ஒன்றிய செயலாளர் எம்.மகாலிங்கம்,கட்சியின் ஒன்றிய நிர்வாக குழு உறுப்பினர் தோழர் அ. குமரேசன் ஆகியோர் கொட்டும் மழையிலும் மக்களை சந்தித்தனர். திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் எழிலூர் ஊராட்சியில் எழிலூர் கீழத்தெருவில் 30 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் இடியும் நிலையில் உள்ளதை பார்வையிட்டனர்.

நேமம் வடக்குத்தெரு, தெற்கு தெருஆகிய கிராமங்களில் நீரால் சூழ்ந்த வீடுகளையும், பயிர்களையும் பார்வையிட்டனர்.

ஊராட்சி தலைவர் இளமதி சிவக்குமார், ஒன்றியக் குழு உறுப்பினர் பத்மா மதியழகன் முன்னாள் ஊராட்சி தலைவர் எஸ்.கருப்பையன் ஆகியோர் உடனிருந்தனர்.

நுணாக்காடு ஊராட்சியில் ஆட்டூர், தென்பாதி,தென்காசி, விஸ்வநாதபுரம் ஆகிய கிராமங்களில் வீடுகள், வயல்களில் நீர் சூழ்ந்த வற்றையும், பொண்ணு கொண்டான் ஆற்றையும் பார்வை யிட்டனர். ஊராட்சி தலைவர் அ.சின்னையன். ஒன்றியக்குழு உறுப்பினர் பத்மா மதியழகன், ஊராட்சி உறுப்பினர் பொன். இளைய குமார் மற்றும் வி.ரமேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

இராயநல்லூர் ஊராட்சியில் அய்யங்கட்டி, கோட்டகம், கிராமங்களில் நடைபெற்ற ஆய்வில் ஊராட்சி தலைவர் எம்.சுப்பிரமணியன், ஒன்றியக் குழு உறுப்பினர் பிரேமா குணசேகரன், கிளை செயலாளர் ராகவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.பூசலாங்குடி ஊராட்சியில் சிதம்பரம் கோட்டம், தூத்தரி முலை, பூசிலாங்குடி ஆகிய ஊராட்சிகளில் ஆய்வு செய்தனர் ஊராட்சி தலைவர் ஆர்.சுபிதா ஆய்வில் பங்கேற்றார்.

### மாணவி பொன்தரணி தற்கொலைக்கு

# நீதி கேட்டு ஆர்ப்பாட்டம்





கோவை சின்மயா பள்ளியில் பாலியல் தொல்லை காரணமாக மாணவி பொன்தரணி தற்கொலைக்கு நீதி கேட்டு மாதர் சம்மேளனம், மாணவர் பெருமன்றம், இளைஞர் பெருமன்றம் சார்பில் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாதர் சம்மேளனம் மாவட்ட செயலாளர் ஏ.கொரி தலைமை தாங்கினார். இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் சிபிஐ மாவட்ட செயலாளர் கே.பெருமாள், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் இரா.தமிழ் பெருமாள், த.ஒ.வா.இ. மாவட்ட செயலாளர் ப.செல்லன், மாவட்ட துணைத்தலைவர் த.வீரையா, மாதர் சம்மேளனம், மாணவர், இளைஞர் அமைப்புகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

முகவை பூபேஷ்

# மாநிலங்களில்...

## சட்ட விரோதமாக கட்டப்பட்ட பாஜக தலைவரது பங்களா வீடு

### இடித்துத் தரைமட்டம் ஆக்க ஆணை


ஜம்மு-காஷ்மீர்

ஜம்மு காஷ்மீர் பாஜக கட்சியின் தலைவர் நிர்மல் சிங் என்பவர் முன்னாள் காஷ்மீர் அமைச்சரவையில் துணை முதலமைச்சராக பதவி வகித்தவர் . இவர் தனது பதவிக் காலத்தில் 2017 அக்டோபர் மாதத்தில் ஜம்மு காஷ்மீர் மாநிலம் ஜம்மு வட்டாரம் பான் என்ற கிராமத்தில் உரிய அனுமதி ஏதும் பெறாமல் 2000 சதுர மீட்டர் பரப்பரளவில் அரண்மனை போன்ற பங்களா கட்டிடத்தை கட்டஆரம்பித்தார்

இந்த பங்களா கட்டப்படும் பகுதிக்கு அருகில் நாகொராடா என்ற இடத்தில் ராணுவ ஆயுதக் கிடங்கு அமைந்துள்ளது. இந்த கிடங்கிலிருந்து 1000 அடிகள் சுற்றளவில் பொதுமக்கள் யாரும் குடியிருப்புக்கட்டடிடம் உள்படஎந்தக் கட்டிடம் கட்டக்கூடாது என்பது ராணுவப் பணிகள் சட்டம் 1903 (**Works of Defence Act 1903**) கூறுகிறது. ராணுவ அதிகாரிகள் மற்றும் ஜம்மு மண்டல வளர்ச்சி ஆணைய அதிகாரிகளின் கடிதங்கள், நோட்டீசுகள் அனுப்பப்பட்டுள்ளது. 2018 ஏப்ரலில் துணை முதலைமைச்சரது பதவிலிருந்து இவர் ராஜினாமா செய்ய நேரிட்டதைத் தொடர்ந்து இவர் மீது மே 2018 உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்தஆண்டு ஜீலை மாதத்தில் 2000 சதுர மீட்டர் பரப்பில் நவீன சொகுசு வசதிகள் உடன் கட்டப்பட்ட அரண்மனை போன்ற தனது பங்களாவில் தனது குடும்பத்தினருடன் குடியேறினார்.

இறுதியாக ஜம்மு காஷ்மீர்கட்டடிடங்கள் ஒழுங்காற்று சட்டம்1988 பிரிவு 7(1) இன் இவருக்கு இந்த ஆண்டுசெப்டம்பர் 26 எச்சரிக்கை நோட்டீஸ்அனுப்பப்பட்டது. அதில்'' நோட்டீஸ்பெற்ற 5 தினங்களுக்குள் தனது பங்களா வீட்டை இடிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் அரண்மனை பங்களா இடித்துத் தள்ளப்படும்'' என ஜம்மு மண்டல வளர்ச்சி ஆணையம் ஆணையிட்டுள்ளது.

உத்தரபிரதேசம்

# "விவசாயிகளின் போராட்டம் நியாயமானது"

### சொல்வது உபி பாஜக அமைச்சர்

உத்தரபபிரதேசம் சகாரான்பூர் மாவட்டம் நாக்கூர் தொகுதி பாஜக எம்எல்ஏ தரம் சிங் சைனி என்பவர். இவர் உ.பி யோகி ஆதித்யநாத் அமைச்சரவையில் அமைச்சராகவும் உள்ளார். கடந்த நவம்பர் 9 செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த பாஜக அமைச்சர் தரம் சிங் சைனி, "டெல்லியில் கடந்த 11 மாதங்களாகப் போராடி வரும் விவசாயிகள் கோரிக்கைகள் நியாயமானது. போராட்டத்திற்கு தீர்வு காண ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் குறிப்பாக உத்தரபிரதேசத்தில் சட்ட பேரவைத் தேர்தல் விரைவில் நடக்க உள்ளதால் அதைக் கருத்திற் கொண்டாவது விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகளை ஒன்றிய அரசு ஏற்றுக் கொள்வதுதான் சரி என்றும் பாஜக அமைச்சர் கூறியுள்ளார்.

மேலும் விவசாயிகள் சங்கங்களை ஒருங்கிணைத்து வெற்றிகரமாக ஒற்றுமையாக போராட்டத்தை நடத்தி வரும் "விவசாய சங்கங்களின்கூட்டமைப்பின் தலைவர் ராகேஷ் திகையத், விவசாயிகளின் இன்பத்திலும் துன்பத்திலும் உடன் நிற்கும் சிறந்த தலைவர்'' என்றும் பாஜக அமைச்சர் விவசாயச் சங்கத் தலைவர் ராகேஷ் திகையத்தைப் பாராட்டிப் பேசியுள்ளார்.

இது பாஜக வட்டாரத்தில் கலக்கத்தையும் அதிர்ச்சியையும் அளித்துள்ளது.


பஞ்சாப்

## நாசாட்டார் சிங் தாலிவால் நினைவஞ்சலி

பஞ்சாப் போக்குவரத்துத் தொழிலாளர் ஏஐடியுசி சங்கதைச் சேர்ந்தவர் நாசாட்டார் சிங் தாலிவால். பஞ்சாப் போக்குவரத்துத் தொழிலாளர்களது கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தம் செய்ய பஞ்சாப் ஏஐடியுசி அழைப்பு விடுத்திருந்தது.

அதை ஏற்று பஞ்சாப் மாநிலமெங்கும் போக்குவரத்துத் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தனர். அதன் ஒரு பகுதியாக, மோகா நகர போக்குவரத்து பணிமனை முன் வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்கள் பணிமனை வாயில் முன் மறியல் செய்தனர். அப்போது போராட்டத்தை சீர்குலைக்க நிர்வாகத்தினர் தூண்டுதல் பேரில் கருங்காலிகள் சிலர் பேருந்தை ஒட்டச் செய்தனர். நாசாட்டார் சிங் தாலிவால் கருங்காலிகளது பஸ் ஸை மறித்த போது அவர் மீது பேருந்தை ஏற்றி கொலை செய்தனர்.

இந்த கொடுஞ்சம்பவத்தினால் வீரமரணம் எய்திய அக்டோபர் 21 ந் தேதி தியாகி நாசாட்டார் சிங் தாலிவாலின் நினைவு நாள் பஞ்சாபில் கடைப்பிடிக்கப்பட்டது. அகில இந்திய ஏஐடியுசி பொதுச் செயலாளர் அமர்ஜித் கௌர், பஞ்சாப் ஏஐடியுசி தலைவர் பந்தசிங் பிரார், பொதுச் செயலா ளர் நிர்மல்சிங் தாலிவால், மாநில இந்திய கம்யூ செயலாளர் ஜெக்ரூப் சிங், முன்னாள் போக்குவரத்துத் தொழிலாளர் சங்கத் தலைவர் குர்தீப்மோட்டி, உள்பட பலர் தியாகி நாசாட்டார் சிங் கின் வீரத்தையும் தியாகத்தையையும் நினைவு கூர்ந்து உரையாற்றி அஞ்சலி செலுத்தினர்.

ஆந்திரா

## விலை ஏற்றம் பற்றிய மக்கள் கருத்துக் கணிப்பு: வாக்கெடுப்பு இயக்கம்

ஆந்திரா மாநில இந்திய மாதர் தேசீய சம்மேளனம் சார்பில் தற்போதைய பாஜக ஒன்றிய அரசாட்சியில் கடுமையாக ஏறியுள்ள விலை ஏற்றம், குறித்த மக்கள் கருத்துக்களை அறியும்'' கருத்துக் கணிப்பு வாக்குப் பெட்டி இயக்கம் ஆந்திரா முக்கிய நகரங்களில் நடத்தப்பட்டன.

எரிவாயு சிலிண்டர்களுக்கு வழங்கப்பட்ட மான்யம் ரத்து, பெட்ரோல் டீசல் விலைகள் உச்சத்தில் ஏற்றம் இதன் பக்க விளைவாக அத்யாவசிய உணவுப் பொருட்களின் கடுமையான விலை ஏற்றம் உள்பட பாமர, ஏழை எளிய நடுத்தர குடும்பங்கள் படும் அவதிகளை வெளிப்படுத்தும் வகையில் இந்த மக்கள் வாக்கெடுப்பு இயக்கம் நடைபெற்றன.

ஆந்திர மாநிலத்தில் விஜயவாடா, கர்நூல், சித்தூர், விசாகப்பட்டினம், அனந்தப்பூர் உள்ளிட்ட பல நகரங்களில் நடைபெற்ற இந்த வாக்கெடுப்பு இயக்கத்தில் பெருந்திரளான மக்கள் குறிப்பாக தாய்மார்கள் தங்கள் கருத்துக்களை பதிவு செய்து வாக்குப் பெட்டியில் இடுவதில் அதிக ஆர்வமும் உற்சாகமும் காட்டியது குறிப்பிடத்தக்கது.

வாக்கெடுப்பு இயக்கம் தொடர்பான பரப்புரைக் கூட்டங்களில் ஆந்திர மாநில இந்திய மாதர் தேசீய சம்மேளன மாநில செயலாளர் பி.துர்கா பவானி, பொருளாளர் பஞ்சர்லா துர்கம்பா ஒருசு பாரதி ஆகிய மாதர் சங்க நிர்வாகிகள் பங்கேற்று உரையாற்றினர்.

## எஸ்.சி - எஸ்.டி உரிமைகள் குழுவின் முதல் மாநில மாநாடு


கர்நாடகா

கர்நாடாக மாநில எஸ்.சி எஸ்.டி உரிமைகள் குழுவின் முதல் மாநில மாநாடு பெங்களுரூ இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில அலுவலகம் கீதா பவனில் கடந்த அக்டோபர் 21 நடைபெற்றது. மாநாட்டை இந்திய கம்யூ.கட்சி மாநிலச் செயலாளர் ஷாதி சுந்தரேஸ் தொடங்கிவைத்தார். மூத்த கம்யூ தலைவர் சித்தண்ணகவுடா பட்டீல் ஏஐடியூசி மாநில தலைவர் ஹெச்.வி. அனந்தசுப்பாராவ், கல்புர்கி சமுதாயக் கல்லூரி முதல்வர் மகேஷ்குமார் ரதோட், அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற கர்நாடாக மாநில தலைவர் ஹரிஸ் பாலா, மாநில செயலாளர் எச். எம்.சந்தோஷ் உள்பட பலர் உரையாற்றினர். தாழ்த்தப்பட்ட மக்கள் பழங்குடியினர் உரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு மாநில அளவில் போராட்டம் நடத்துவது என்றும், அமைப்பையும் உரிமைகளை பாதுகாக்கவும் 18 அம்ச செயல்திட்டம் வகுக்கப்பட்டு அமுல்படுத்துவது எனவும் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.


ஹைதராபாத்

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேரள உணவு அமைச்சர் அனிலுக்கு பாராட்டு

பிரஜாபக்ஷம் என்ற நாளேட்டின் 3 ஆவது ஆண்டு நிறைவு விழா, ஹைதராபாத் புறநகரில் அமைந்துள்ள பங்களகுடாவில் கிரிபிரசாத் பவனில் நடைபெற்றது. அவ்வமயம் ''பொது வினியோகத் திட்டம் ஸ்ரீ கேரளா முன்மாதிரி'' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்ட கேரளா உணவுத்துறை அமைச்சர் ஜி.ஆர். அனிலுக்கு சிறப்பான பாராட்டு நல்கப்பட்டது. இந்தியாவுக்கு முன்மாதிரியாக விளங்கும் வகையில் கேரளா உணவுத்துறை செயல்பட்டுள்ளது என கருத்தரங்கில் பங்கேற்பாளர்கள் வெகுவாக அமைச்சரைப் பாராட்டினார்கள்.

உணவு அமைச்சர் அனில் கூறியதாவது,

"கொரோனா தொற்றுக்காலத்தில் பசி பட்டினியால் யாரும் சாகக்கூடாது என்ற தராக நோக்கோடு கேரள அரசு போர்க்கால அடிப்படையில் பணியாற்றியது. மக்களுக்கு தேவையான 18 வகை அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய ''உணவுப் பொட்டலங்கள்'' இலவசமாக வழங்கப்பட்டன.

கேரளா அரசு நிர்வகிக்கும் 1 கி.மீக்கு 1 கூட்.டுறவு அங்காடிஎன்ற வகையில் அமையப் பெற்றுள்ள கூட்டுறவு அங்காடிகள் வாயிலாக இவை மக்களுக்கு இலவசமாக வினியோகம் செய்யப்பட்டன. இந்த வகையில 6000 கோடி ரூபாய்களை கேரள அரசு செலவிட்டுள்ளது என்ற தகவலையும் வெளியிட்டார். நிகழ்ச்சியில் தெலுங்கானா இந்திய கம்யூ மாநில செயலாளர் சி. வெங்கட ரெட்டி, பல்ல வெங்கட ரெடடி உள்பட பல தலைவர்கள் உரையாற்றினர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 47. முள்ளை எடுக்கும் முள்

**இன்னாசெய் தாஅர்க் கினியசெய்தும் என்னாஅச்சு**
**இந்நாள் வரையில் எமக்கு.**

நமக்குத் துன்பம் செய்தவர்களுக்கு நல்லதே இதுநாள்வரை செய்தோம். அதனால் ஏற்பட்ட பயன் என்ன? (நமக்குத் துன்பம் செய்தவர் மேலும் துன்பமே செய்கிறார்கள்)

**இன்னாமைக் கின்னாமை யாற்றல் இனிதாகும்**
**முள்ளை எடுக்குஉம் முள்.**

முள்ளை முள்ளால் எடுப்பதுபோல நமக்குத் துன்பம் செய்தவர்களுக்குத் துன்பம் செய்தே பாடம் புகட்டி, அவர்களைத் திருத்த வேண்டும்.

## வாசகர் டுவிட்

**ஆசிரியர் ஜனசக்தி,**

ஒவ்வொரு பக்கமும், ஒவ்வொரு செய்தியை சொல்ல வேண்டும். நமது தமிழ் மண்ணின் மனம் வீச வேண்டும். நமது தமிழ் மரபையும், கலாச்சாரத்தையும் முன்னெடுக்க வேண்டும். தவிர்க்க முடியாததைத் தவிர மற்றக் கட்டுரைகள் அரைப் பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**வீ.வெள்ளியங்கிரி**, மேட்டுப்பாளையம்

**ஆசிரியர் ஜனசக்தி,**

சி.மகேந்திரன் எழுதிய டாக்டர் வே.துரைமாணிக்கம் பற்றிய கட்டுரை வே.துரைமாணிக்கத்தின் கட்சி வாழ்வும், அவரின் தனிப் பண்புகளையும் விளக்குகிறது. நா.பெரியசாமியின் நாட்டுப்புற வேலை வாய்ப்பு திட்டம் கட்டுரை நூறு நாள் வேலை வாய்ப்புத் திட்டம் அல்ல என்பதை தெளிவுபடுத்துகிறது. சங்கே முழங்கு பகுதியில் கபாலீஸ்வரர் மூலப்பத்திரத்தை தேடுவது அருமை.

**சுப்பிரமணியம்**, சென்னை

**ஆசிரியர் ஜனசக்தி,**

கட்சிக்கு வெளியே உள்ள இடதுசாரிகளின் கட்டுரைகள் ஜனசக்தியில் வெளிவர வேண்டும். பெண்கள், இளைஞர் மாணவர் ஆகியோருக்கு தனிப் பகுதி ஒதுக்க வேண்டும். பெண் எழுத்தாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண் டும். தலைப்புகளில் ஈர்ப்பும், ஆக்ரோஷமும் வேண்டும்.

**புவனா**, குறிஞ்சிப்பாடி

**ஆசிரியர் ஜனசக்தி,**

அகில இந்தியப் பொதுச் செயலாளர் டி.ராஜா எழுதிய உத்வேக மூட்டும் ரஷ்யப் புரட்சி உத்வேக மூட்டுகிறது. மு.நாகராஜன் எழுதிய மோடி வீக்கம் என்ற பொருளாதார கட்டுரை நறுக்கென்று உள்ளது. வி.பி.குணசேகரனின் ஜெய்பீம் திரைப்பட விமர்சனம் நன்றாக இருந்தாலும் அதில் உள்ள விமர்சனங்கள் குறித்தும் எழுதியிருக்கலாம்.

**கயல்விழி**, மன்னார்குடி.




## நவம்பர் புரட்சி தின விழா

**சேலம்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்ட குழு சார்பில் நவம்பர் புரட்சி தினவிழா கூட்டம், பாரதியார் சிலை எதிரில் மாவட்ட செயலாளர் ஏ.மோகன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில நிர்வாக குழு உறுப்பினர் த.லெனின் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். இளைஞர் பெருமன்ற மாநில செயலாளர் க.பாரதி, மாநில குழு உறுப்பினர் பி.பரமசிவன் மாவட்ட பொருளாளர் எம்.ராமன் மற்றும் மாவட்ட நிர்வாகக் குழு, இடைக் குழு செயலாளர்கள், கட்சி உறுப்பினர்கள் என 120க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**உறையூர்:** நவம்பர் புரட்சி தினம் திருச்சி மாநகர் உறையூரில் 58வது வார்டில் மேற்குப் பகுதி பொருளாளர் ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாநகர் மாவட்ட முன்னாள் செயலாளர் க. சுரேஷ் கொடி ஏற்றி உரையாற்றினார். மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சிவா, மாவட்ட குழு உறுப்பினர்கள் இபுராஹிம், ஆயிஷா பகுதி குழு உறுப்பினர்கள் முருகன், ஆனந்தன், சரண்சிங், ராமமூர்த்தி, நாகராஜன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

### புதுச்சேரி கால்நடைத்துறை

## அமைச்சருடன் கம்யூனிஸ்ட் தலைவர்கள் சந்திப்பு

புதுச்சேரி கால்நடைத்துறை அமைச்சர் தேனீ சி.ஜெயக்குமார் அவர்களை து.கீதநாதன், அ.பெருமாள் ஆகியோர் சந்தித்து பால் உற்பத்தியை புதுச்சேரி மாநிலத்தில் பெருக்க தேவையான ஆலோசனைகள் மற்றும் கால்நடை வளர்ப்போருக்கான திட்டங்கள், கால்நடை மானியத் தீவனம், பசும்புல் தீவனம், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க தேர்தல் நடத்துதல் போன்ற கோரிக்கைகளை நிறை வேற்றக்கோரி மனு அளித்தனர்.

## கெஜல்நாயக்கன்பட்டி கட்சி கிளை மாநாடு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பனமரத்துப்பட்டி ஒன்றியம் கெஜல்நாயக்கன்பட்டி கிளை மாநாடு பி.தன்ராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் ஏ.மோகன், ஒன்றிய செயலாளர் எம்.பாலன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் எம்.கந்தசாமி, கே.பி.வி.பூபேஷ், ஒன்றிய குழு உறுப்பினர் ஜி.வெற்றி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். கிளை செயலாளர் கிருஷ்ணன் வேலை அறிக்கை வரவுசெலவு அறிக்கை ஆகியவற்றை முன்வைத்தார். புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

## திருவாரூர் நகர கட்சி கிளை மாநாடு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருவாரூர் நகர 20வது வார்டு கிளை மாநாடு கிளைச்செயலர் த.காரல்மார்க்ஸ் தலைமையில் நடைபெற்றது. கிளை துணைச்செயலர் வசந்தி அனைவரையும் வரவேற்று பேசினார். நகர செயற்குழு உறுப்பினர் வீ.தர்மதாஸ் அரசியல் விளக்க உரையாற்றினார். மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பி.எஸ்.மாசிலாமணி, மாவட்டக்குழு உறுப்பினர்கள் இ.செல்லமணி, எஸ்.செல்வம், நகரத்துணைச்செயலர் பி.சின்னதம்பி ஆகியோர் பேசினர். லெட்சுமி கிளைச்செயலாளராகவும், சங்கீதா கிளையின் துணைச் செயலராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.



## பெட்ரோல் டீசல் விலை உயர்வைக் கண்டித்து சைக்கிள் பேரணி

புதுக்கோட்டை திலகர் திடலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பெட்ரோல் டீசல் விலை உயர்வை கண்டித்து சைக்கிள் பேரணி நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் மாதவன் துவக்கி வைத்தார். நகரச் செயலாளர் சிற்பி உலகநாதன், சாலையோர வியாபாரிகள் சங்க செயலாளர் ராமச்சந்திரன் உள்ளிட்ட 20க்கு மேற்பட்டோர் சைக்கிள் பேரணியில் ஊர்வலமாக சென்றனர்.

## தோழர் சுசிலா படத்திற்கு மலரஞ்சலி

தோழர் சுசிலா படத்திற்கு திருச்சி மாவட்ட அலுவலகத்தில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது, அஞ்சலி நிகழ்ச்சியில் மாநில நிர்வாக குழு உறுப்பினர் த.இந்திரஜித், மாநகர் மாவட்டச் செயலாளர் திராவிடமணி, முன்னாள் மாவட்டச் செயலாளர் எம்.செல்வராஜ், ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் க.சுரேஷ், எஸ்.சிவா, அன்பழகன், முருகன், முன்னாள் மாநகர் மன்ற உறுப்பினர் வை.புஷ்பம், இந்திய மாதர் சம்மேளன மாநகர் மாவட்டத்தலைவர் சொ.பார்வதி, செயலாளர் க.ஆயிஷா, புறநகர் மாவட்டத்தலைவர் இ.கவிதா, ஈஸ்வரி, சாந்தா உள்ளிட்டோர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

# முதலமைச்சர் நிவாரண அறிவிப்பு ஆறுதல் அளிக்கிறது

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

வடகிழக்கு பருவமழை அதி தீவிர மாகி, கனமழை தொடர்ந்து பெய்து வருவதாலும், வழக்கமான இயல்பு மழையைக் காட்டிலும் பல மடங்கு அதிக மழை பெய்ததாலும் தமிழ் நாட்டின் பெரும்பகுதி மாவட்டங் களில் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

வடகிழக்கு பருவமழை காலத்தில் ஏற்படும் இயற்கை பேரிடர்களை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு முதல மைச்சரும், அரசும் மேற்கொண்ட நடவடிக்கைகள் உயிரிழப்புகளை தடுத்து குறைத்துள்ளன. அதே சமயம் சென்னை பெருநகரிலும், அதன் சுற்றுவட்டாரங்களிலும் வீடுகள் மற்றும் சாலைகளில் மழை வெள்ளம் பாதிக்கப்பட்டதால் மக்கள் வாழ்க்கை நெருக்கடி அதிகரித்துள்ளது.

காவிரி பாசன மாவட்டங்களிலும், கடலோர மாவட்டங்களிலும் கூடுத லாக பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது.

வெள்ளம் பாதித்த பகுதிகளுக்கு மூத்த அமைச்சர்களோடு முதலமைச் சரும், உயர் அதிகாரிகளும் களமிறங்கி நிவாரண நடவடிக்கைகளை செய்து வருவது வாழ்வை மீட்புக்கு நம்பிக் கையளிக்கும் செய்தியாகும்.

காவிரி பாசன மாவட்டங்களில் ஏற்பட் டுள்ள பாதிப்புகளை பார்வை யிட்டு, நிவாரணம் வழங்க பரிந்துரை களைப் பெற்று, போர்க்கால வேகத் தில் உதவிகள் வழங்குவது வரவேற் கத்தக்கது.

அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி தலைமையிலான குழுவின் அறிக் கையை நவ. 16 அன்று பெற்றுக் கொண்ட முதலமைச்சர் உடனடியாக நிவாரணங்கள் அறிவித்துள்ளார். அறுவடைக்கு தயாராக இருந்து வெள்ளத்தால் சேதமடைந்த நெற்பயிர் விவசாயிகளுக்கு ஹெக்டருக்கு ரூ.20,000ம் வழங்கப்படும். (ஏக்கருக்கு ரூ.8163 மட்டும்) இத்துடன் நடவு செய்து 15 நாட்களை தாண்டாத நிலையில் ஏற்பட்ட வெள்ளத் தாக்குதலில் அனைத்தையும் இழந்து நிற்கும் விவசாயிகளுக்கு ஹெக்டருக்கு ரூ.6083 மதிப்புள்ள (ஏக்கருக்கு ரூ 2483/) இடுபொருள் வழங்கப்படும், சாலைகள், பாலங்களில் ஏற்பட்டுள்ள சேதங்களை சீரமைக்க 300 கோடி நிதியொதுக்கம் செய்யப்படும் என முதலமைச்சர் நிவாரணம் அறி வித்திருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்பதுடன், அறிவிக்கப்பட்ட நிவாரணத் தொகுப்பில் நிவாரணம் கிடைக்கும் என நம்பிக்கையோடு, எதிர்பார்த்து காத்திருக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் ஏதும் அறிவிக்கவில்லை என்பது ஏமாற்றம் அளிக்கிறது. தாளடி பயிர் நடவு முடிந்த நிலையில், வேர்பிடிப்புக்கு முன்னர் மழை வெள்ளத்தில் பயிர்கள் மூழ்கியதால் அதன் வேர்கள் அழுகி, அதன் முளைப்புத்திறன் இறந்து விட்டது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். இப்படி பாதிக்கப்பட்ட விவ சாயிகளுக்கு இடுபொருள் வழங் குவது மட்டும் போதாது என்பதை சுட்டிக்காட்டுகிறது. மேலும் அரசால் கட்டிக் கொடுக்கப்பட்ட பழைய தொகுப்பு வீடுகள் பல இடங்களில் வசிக்க முடியாத நிலைக்கு இடிந்து விழுந்து சேதம் அடைந்துவிட்டன. இந்த வீடுகளை புதுப்பித்துக் கட்டித்தர வேண்டும் என்ற கோரிக்கை நிவாரண அறிவிப்பில் இடம் பெறவில்லை என் பதை முதலமைச்சர் கவனத்துக்கு கொண்டு வருகிறது. வறுமையின் பிடியில் வாழ்ந்து வரும் அடித்தட்டு மக்களின் கோரிக்கை குறித்து பரி சீலிக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு முதலமைச்சரையும், அரசையும் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கை யில் கூறியுள்ளார்.

### கனமழை காரணமாக பாதிப்படைந்த பயிர்களுக்கு

# ஏக்கருக்கு ரூ.30,000 நிவாரணம் வழங்கிடுக!

### வை.சிவபுண்ணியம் கோரிக்கை

தமிழக முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காவிரிப் பாசனப் பகுதிகளில் வெள்ளச் சேதப் பகுதிகளை பார்வையிட்டபோது, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவாரூர் மாவட்டச் செயலாளர் வை.சிவபுண்ணியம் முன்.எம்.எல்.ஏ., அவர்கள், முதல் அமைச்சரை சந் தித்து அளித்துள்ள மனுவில் கூறி யுள்ளதாவது:

வடகிழக்கு பருவமழை தீவிர மடைந்து வழக்கத்தை விட கூடு தல் மழை பெய்து, வெள்ள பாதிப்பு ஏற்பட்டதால், திருவாரூர் மாவட் டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் குறுவை, சம்பா, தாளடி பயிர்களும் மிகப்பெருமளவில் பாதிக்கப்பட்டு, பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது. இதை அறிந்த தாங்கள் திருவாரூர் மாவட்டத்திற்கு மாண்புமிகு அமைச் சர் பெருமக்களையும், மாநில மாவட்ட உயர் அதிகாரிகளையும் பலமுறை நேரில் பாதிப்புகளை பார்வையிடச் செய்துள்ளதுடன், தாங்களே 13.11. 2021 அன்று திருவாரூர் மாவட் டத்திற்கு வருகைதந்து பாதிப்பு களை நேரில் பார்வையிடுவதும் விவ சாயிகளுக்கும், விவசாய தொழி லாளர்களுக்கும் மாவட்ட மக்க ளுக்கும் மிகப்பெரும் நம்பிக்கையும், மகிழ்ச்சியையும் அளிக்கிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி திருவாரூர் மாவட்டக்குழு முழு மனதுடன் வரவேற்று ஆதரவு தெரிவிப்பதுடன், கீழ்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு பணிவன்புடன் வேண்டி கேட்டுக் கொள்கிறேன். பருவமழை தீவிரமடைந்து கடந்த 10 தினங்களாக பெய்துவரும் கனமழை காரணமாக அறுவடை செய்ய முடியாத, பாதிப் படைந்த குறுவை பயிர்களுக்கு நிவாரணம் வழங்கிட வேண்டும்.

மிகப்பெருமளவில் சம்பா, தாளடி பயிர்கள் நீரில்மூழ்கி சேதமடைந்து அழுகியுள்ளது, பாதிப்படைந்துள்ள விவசாயிகளுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ.30,000/வீதம் நிவாரணம் வழங்கிட வேண்டும். விவசாயத்திற்கான பயிர் இன்சூரன்ஸ் செய்வதற்கான காலக்கெடுவை மேலும் ஒரு மாதம் நீடித்து தரவேண்டும். மழை, வெள்ளத்தால் வேலையின்றி பாதித்துள்ள விவசாய தொழிலாளர் களுக்கு, விவசாய தொழிலாளர் குடும்பங்களுக்கு தலா ரூ. 10,000/ வீதம் நிவாரணம் வழங்கிட வேண்டும்.

சாதாரண ஏழை, எளிய பட்டியல் இன மக்கள் குடியிருந்து வரும் தொகுப்பு வீடுகள் மாவட்டம் முழுவதும் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகவும், 30 ஆண்டுகளை கடந்து கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளாக உள்ளதால் குடியிருக்க முடியாத நிலை ஏற்பட்டு இடிந்து விழும் நிலையில் உள்ளது. இவற்றை அகற்றி அனைவருக்கும் புதிய தொகுப்பு வீடுகள் கட்டித்தர வேண்டும். மாவட்டம் முழுவதிலும் உள்ள தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட நெடுஞ் சாலைகள் மிகவும் பழுத டைந்து போக்குவரத்து பாதிக்கப் பட்டுள்ளதுடன், அனைத்து கிராமச் சாலைகள் மிகப்பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. இவற்றை போர்க்கால அடிப்படையில் சீர் செய்திட சிறப்பு நிதி ஒதுக்கீடு செய் திட வேண்டும். மழை, வெள்ள, புயல் காலமாக இருப்பதால் உணவுப் பொருட்களும், அத்தி யாவசியப் பண்டங்களும் தட்டுப் பாடின்றி கிடைக்கச் செய்திட வேண் டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைவேற்றித்தருவீர்கள் என்ற முழு நம்பிக்கையுள்ளது. இவ்வாறு வை.சிவபுண்ணியம் கோரிக்கை மனுவில் கூறியுள்ளார்.



## டாக்டர். எஸ்.பிரசாந்த் - டாக்டர் ஆர்.பிரியதர்ஷினி திருமணம்

தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கத்தின் (TNMSA) முன்னணி தலைவர்களில் ஒருவராய் இருந்து, மருத்துவ மாணவர்களின் பல்வேறு போராட்டங்களை திறம்பட வழி நடத்தியவரும், 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் நான்காவது மாநில மாநாடு வெற்றிகரமாக சென்னையில் நடைபெற பெரும் பங்காற்றியவருமான டாக்டர். எஸ்.பிரசாந்த் மற்றும் மகப்பேறு மருத்துவ நிபுணர் டாக்டர் ஆர்.பிரியதர்ஷினி ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி பரமத்தி வேலூரில் நடைபெற்றது. நிகழ்வில் சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர். ஜி.ஆர். இரவீந்திரநாத், செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

## தமிழ்நாடு முதல்வருக்கு திருப்பூர் மாவட்டத்தின்

# அனைத்துக் கட்சியின் மிக அவசர முறையீடு

### தோழர் கே.சுப்பராயன் எம்.பி, தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு



திருப்பூர் மாவட்டத்தில் உள்ள பா.ஜ.க, இந்து முன்னணி ஆகிய அமைப்பைச் சார்ந்தவர்களின் வகுப்புவாத, சட்டவிரோத அத்துமீறல்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோருதல்.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்தவர்களும், இந்து முன்னணி அமைப்பைச் சார்ந்தவர்களும் சிறுபான்மை மக்களுக்கு எதிராகவும், ஜனநாயக முற்போக்குவாதிகளின் கருத்துக்களுக்கு எதிராகவும், விஷமத்தமான சட்டவிரோத செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள்.

பகிரங்கமாக களத்தில் இறங்கி சட்டத்தின் ஆட்சியை நிலைகுலைக்கிறார்கள். கும்பலாகச் சேர்ந்து கொண்டு சட்டவிரோத நடவடிக்கைகளில் அச்சமின்றி ஈடுபடுகிறார்கள். இதைத் தடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டிய காவல் துறை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இது சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பளிப்பது போல் கருத இடமளிக்கிறது.

சுதந்திரமாக சிந்திப்பதற்கும், கருத்தை வெளியிடுவதற்கும், அரசியல் சாசனப்படி மதத்தை தழுவுவதற்கும், மதத்தைப் பரப்புவதற்கும், கடவுளை வழிபடுவதற்கும், கடவுளை மறுப்பதற்கும், நமது அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளை பொது மக்கள் பயன் படுத்துவதற்கும் தடையாகவும், எதிராகவும் மேற்கண்ட அமைப்பினர் விஷமத்தனமான செயல்களில் ஈடுபட்டு பகிரங்கமாக சட்ட விரோதமாக மிரட்டத் தொடங்கி விட்டனர்.

இந்திய அரசு நாடாளுமன்ற ஜனநாயக, மதசார்பற்ற அரசாங்கமாகும். பெண்விடுதலை உட்பட அரசியல் சாசன ரீதியான உரிமைகளை வலுப்படுத்துகிற புத்தகங்களை பள்ளி, கல்லூரிகளில் விநியோகிப்பது தவறானதல்ல. “பெண் ஏன் அடிமையானாள்” என்ற பெண் விடுதலைக்கான முற்போக்கு கருத்துக்கள் அடங்கிய சிறு புத்தகத்தை பெண்கள் படிக்கும் பள்ளியில் மாணவிகளுக்கு வழங்கக் கூடாது என்று அராஜக முறையில் சட்டவிரோதமாக பள் ளியை முற்றுகையிட்டு தடுத்து நிறுத்தியுள்ளனர். கல்வி அதிகாரியும் ‘இதுபோல் இனிமேல் நடக்காது’ என்று குற்றவாளிகளிடம் வருத்தம் தெரிவிக்கிறார் !வகுப்புவாதிகளைக் கண்டு அதிகாரிகள் அஞ்சுவது கவலை அளிக்கிறது.

அதேபோல் முஸ்லீம், கிறிஸ்துவர் ஆகிய சிறுபான்மை மக்கள் வழிபாட்டுத் தளங்களில் வழிபடுவதையும், புதிய வழிபாட்டு தளங்களை அமைப்பதற்கும் தடையாகவும் எதிராகவும்கொஞ்சம் கூட அச்சமின்றி செயல்பட்டு வருகிறார்கள்.

சிறுபான்மை மக்களின் சொந்த இடத்தில் கூட அவர்கள் கட் டிடம் கட்டக் கூடாது என்று நேர டியாக, கூட்டமாகச் சென்று பகிரங் கமாக மிரட்டி அச்சுறுத்துகிற நடவடிக்கையிலும் ஈடுபட்டுத் தடுத்து வருகிறார்கள். குறிப்பாக திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சர்க்கார் பெரிய பாளையத்தில் **SFNO – 46 1D** ல் அற்புதமேரி என்பவருக்கு பத்திர ரீதியாகச் சொந்தமான இடத்தில் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்ததோடு அராஜகமான முறையில் சுவர் கட்டுவதையும் பலவந்தமாகத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இவ்வாறு திருப்பூர் மாவட்டத்தில் தொடர்ந்து சிறுபான்மைமக்களுக்கும், முற்போக்கு கருத்துக்களுக்கு எதிராகவும் பாரதியஜனதா கட்சியைச் சார்ந்தவர்களும், இந்து முன்னணி அமைப்பினரும் செயல்பட்டு வருகின்றனர்.

மேலும், சட்ட ஒழுங்கை சீர்குலைத்து தமிழ்நாடு அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்தவும் உள் நோக்கத்தோடு திட்டமிட்டு செயல் பட்டு வருகின்றனர்.

எனவே, தாங்கள் இந்த விஷயங்களில் நேரிடையாகத் தலையிட்டு சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய சட்டப் பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும்

எனக் கேட்டுக் கொள்கிறோம். இதன் மூலம் சிறுபான்மையினரின் அரசியல்சட்ட ரீதியான உரிமைகளைக் காப்பாற்றுமாறு வேண்டுகிறோம்.

தன்னார்வலர்களின் சார்பாக தந்தை பெரியாரின் புத்தகங்களை மாணவிகளுக்கு இலவசமாக வழங்கவும், மேற்கண்ட அற்புதமேரி அவர்களின் இடத்தில் சுற்றுச்சுவர் கட்டவும் உரிய அனுமதி வழங்குவதோடு சட்டவிரோதமாக, பலவந்தமாக மிரட்டி வருகிறவர்கள் மீது குற்ற நடவடிக்கைக்கான சட்டப்பிரிவுகளில் வழக்குத் தொடர்ந்து தண்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

இந்தக் கூட்டத்தில் திமுக, காங்கிரஸ், மதிமுக, சிபிஐ, சிபிஎம், கொமதேக, விசிக, இயூமுலீக், தமுமுக, ஐஎம்எல்யூ, திக, தபெதிக ஆகிய கட்சிகளின் மவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## ஜனசக்தி மக்கள் இணையதளம் தொடக்க விழா



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைமை அலுவலகமான பாலன் இல்லத்தில் 17.11.2021 அன்று காலை 11.00 மணியளவில் புதிய பொலிவுடன் ‘‘ஜனசக்தி மக்கள் இணையதளம்‘‘ தொடக்க விழா நடைபெற்றது. ஜனசக்தி கன்வீனர் த.லெனின் தலைமை தாங்கினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் இணையதளத்தை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினரும், வங்கி ஊழியர் சங்க அகில இந்தியப் பொதுச் செயலாளருமான சி.எச். வெங்கடாச்சலம் வாழ்த்துரை வழங்கினார். ஜனசக்தி பொது மேலாளர் இளசை கணேசன் நன்றி கூறினார்.

ஜனசக்தி ஆசிரியர் குழு உறுப்பினர் ஜி.ஆர்.இராவீந்திர நாத், ஜனசக்தி நிர்வாகத்திலிருந்து ஜெ.முருகேசன், எஸ்.சீனிவாசராவ், என்.எஸ்.பிரதாப் சந்திரன், திருவள்ளூர் மாவட்டச் செய்தியாளர் வி.இ.இராஜீவ் காந்தி, ஜனசக்தி கட்டுரையாளர் என்.எஸ்.பெருமாள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் ப.கருணாநிதி, வங்கி மாவட்டச் செயலாளர் ஜி.முரளி, பாவை பொது மேலாளர் சிவக்குமார், தமிழ்நாடு அறிஞர் அண்ணா பத்திரிகையாளர் ஒருங்கிணைப்பு சங்க செயலாளர் ஏ.வி.கண்ணையா, பாலன் இல்ல அலுவலகச் செயலாளர் எம்.ஆர்.இரகுநாதன், இஸ்கப் செந்தில், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க லி.உதயகுமார் உள்ளிட்ட பல தோழர்கள் பங்கேற் றனர். இணையதளத்தை சிறப்பாக வடிவமைத்த அட்மென் டெக்னாலஜி பொறுப்பாளர் ஜி.கோவிந்தராஜ், மேற்பார்வையிட்ட அருண் அசோகன், ஜனசக்தி தொலைக் காட்சி பொறுப்பாளர் வெங்கடேஷ் வேம்புலி உள்ளிட்டோருக்கு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் சால்வை அணிவித்து பாராட்டு தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் 45 ஜனசக்தி, 50 நியூஏஜ் சந்தாக்களை மாநிலச் செயலாளர் இரா.முத்தரசனிடம் வழங்கினார்.



## நிச்சயதார்த்த நிகழ்ச்சியில் கட்சி வளர்ச்சி நிதி!

நவ.10 அன்று நடைபெற்ற, தென்காசி மாவட்டம், இராயகிரி நகர செயலாளர் ச.சமுத்திரம் இல்ல நிச்சயதார்த்த நிகழ்ச்சியில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கலந்துகொண்டு மணமக்கள் ச.முத்துமாரி. கு.மகேந்திரன். ஆகியோரை வாழ்த்தினார். பின்னர் மாவட்ட, மாநில கட்சி வளர்ச்சி நிதியாக 10 ஆயிரம் ரூபாயை மணமக்கள் மாநில செயலாளிடம் வழங்கினர். நிகழ்ச்சியில் மாநில நிர்வாக குழு உறுப்பினர்கள் எஸ்.காசி விஸ்வநாதன், எஸ்.அழகுமுத்து பாண்டியன், மாவட்ட செயலாளர் த.இசக்கிதுரை, ஜனசக்தி மாவட்ட பொருளாளர் இரா.சமுத்திரக்கனி மற்றும் கட்சி தோழர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.



## திருமண விழாவில் கட்சி மாநில மாநாட்டு நிதியாக ரூ.10,000

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருப்பூர் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் தோழர் காட்டே சி.ராமசாமி அவர்களின் மகன் ரா. விஜயகுமார் நிணி (சிவீஸ்வீறீ) – இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த முன்னணி தோழர் சி.குமார் அவர்களின் மகள் கு.நிவேதா நி.நீஷீனீ(சிஷி) ஆகியோரின் திருமணம் நவ. 10 அன்று திருப்பூர் சுப்பராயக்கவுண்டர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. மணமக்களின் சார்பாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டு நிதியாக, மாவட்டச் செயலாளர் எம்.ரவி அவர்களிடம் ரூ.10,000 வழங்கினர்.




## தென்காசி தாலுகா செயலாளர் இல்ல திருமண விழா!

தென்காசி தாலுகா செயலாளர் எம்.எஸ்.கிட்டப்பா மகன் Dr.சுரேஷ் ஜோதிலட்சுமி ஆகியோரின் திருமணம் நவ.10 அன்று ஆயிரப்பேரியில் நடை பெற்றது. மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார். மணமக்கள் கட்சி வளர்ச்சி நிதியாக ரூ.5000 வழங்கினர். நிகழ்ச்சியில் மாநில நிர்வாக குழு உறுப்பினர்கள் எஸ்.காசிவிஸ்வநாதன், எஸ்.அழகுமுத்து பாண்டியன், மாவட்ட செயலாளர் த.இசக்கிதுரை, மாநில குழு உறுப்பினர் வேலாயுதம், மாவட்ட குழு உறுப்பினர் இரா.சமுத்திரக்கனி மற்றும் கட்சி தோழர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

## திருமண விழாவில் ஜனசக்தி வளர்ச்சி நிதி

விருதுநகரில் , ஏஐடியுசி அரசு போக்குவரத்து கழக தொழிலாளர் சங்க மண்டல பொதுச் செயலாளர் எஸ்.பாண்டியன் மகன் எஸ்.பி.குருபிரசாத் டி.வாசுகி(எ)இளவரசி திருமணம் நடைபெற்றது. ஏஐடியுசி மாநில பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி திருமணத்தை நடத்தி வைத்தார். சிபிஐ மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, வி.அழகிரிசாமி எக்ஸ்.எம்பி, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், ஏஐடியுசி தலைவர்கள் முத்துமாரி, இரவி, சமுத்திரம் , இடைக்கமிட்டி செயலாளர்கள் சக்கணன், சாமிநாதன், ஜீவா உள்ளிட்டோர் வாழ்த்தினார்கள். அப்பொழுது மணவீட்டார் சார்பில் ரூ2000 ஜனசக்தி நிதியாக வழங்கப்பட்டது.



## திருமண விழாவில் ஜனசக்தி வளர்ச்சி நிதி

விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் , இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கலிங்கல் மேட்டுப்பட்டி கிளை செயலாளர் எஸ்.முத்துவைரம் மகன் எம்.மகேஸ் வரன் எஸ்.மஞ்சுளா திருமணம் நடைபெற்றது. மாநில நிர்வாக குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், மருத்துவர் த.அறம், வட்ட செயலாளர் சாமிநாதன், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் லி.பகத்சிங் ஆகியோர் நேரில் சென்று வாழ்த்தினார்கள். அப்பொழுது ஜனசக்தி வளர்ச்சி நிதி ரூ.1000 மணமகன் வீட்டார் சார்பில் வழங்கினர்.

# மதுரைக்கு வந்த சோதனைகள்

மனிதர்களுக்கு எவ்வாறு வாழ்க்கையில் பல சோதனைகள் ஏற்படுகிறதோ அதே போன்று தான். நகரங்களுக்கும் பல சோதனைகள் ஏற்படுகின்றன. பெரும் மழை, வெள்ளம், பூகம்பம் போன்ற இயற்கை பேரிடர்களும்,கலவரம், போர் போன்ற செயற்கை பேரிடர்களும் ஏற்படுகின்றன. மனிதர்களைப் போன்று நகரங்களும் இவற்றையெல்லாம் சந்தித்து தான் இன்றைக்கு வரை நிலைத்து நிற்கின்றன. மதுரை என்னும் மூதூர் என்று சங்க காலத்திலேயே குறிப்பிடப்படுகிறது. இம் மாநகரின் பழமைக்கு சங்க இலக்கிய நூல்களே சான்றாக இருக்கின்றன. மதுரை மாநகர் பழமையான நகரம் மட்டுமன்று இது பண்பாட்டு நகரமாகும். தமிழுக்கு சங்கம் கண்ட நகரம் மதுரை. தமிழுக்கு அளவில்லா தொண்டு செய்த நகரம் மதுரை ஆகும். மதுரையின் சிறப்புகளை எல்லாம் உலகறிய செய்த காவியம் சிலப்பதிகாரம் ஆகும். பரிபாடல், பத்துபாட்டு, எட்டுத்தொகை நூல்களும் மதுரையின் சிறப்புகளை எடுத்துக் கூறுகின்றன.




‘ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் ‘ என்பார்கள் .வைகை நதி, கிருதுமால் நதி என்னும் இரண்டு ஆறுகள் ஓடி செழித்த நகரமே மதுரை நகரம் ஆகும். மதுரை நகரமே வைகையாற்றின் கரையில் அமைந்திருக்கும்.அக்கால நகர கலையமைப்பின் படி நன்கு அற்புதமாக அமைக்கப்பட்டிருந்த நகரம் மதுரை ஆகும். மதுரை இயற்கை எழிலும் சேர்க்கை நலமும் ஒருங்கே பெற்ற சிறப்புடையதாகும் .காணும் இடமெல்லாம் கண்மாய்கள், குளங்கள், மலைகள், ஏராளமான விளைநிலங்கள் ,பலவகையான தானியங்கள் என செழித்து இருக்கும்.

இவ்வாறு செழித்திருந்த நகரத்தை அரசுகளுக்கிடையேயான போர்வெறி எவ்வாறு சின்னாபின்னப்படுத்தியுள்ளது என்பதை விரிவாகவே நூலாசிரியர் எழுதியுள்ளார். காலரா நோயும் இந் நகரத்தை ஒரு பாடு படுத்தி உள்ளது. இது போர்கள் ஏற்படுத்திய ஒரு விளைவாகும். போர்க ளால் சின்னாபின்னமான மதுரை மீண்டும் மீண்டும் அதைகாட்டிலும் பொலிவுடன் மீண்டு வந்ததையும் குறிப்பிட்டுள்ளார். பல போர்க்களங்களில் வெற்றி கண்ட பெண் அரசியான ராணி மங்கம்மாவை அவளது சொந்த பேரனே சிறைப்படுத்தி பட்டினி போட்டு சாகடித்தான் என்பது பெரும் சோகத்திற்கு உரியது .பல வரலாற்று செய்திகள் நூல் முழுவதும் விரவிக் கிடக்கின்றன.

தற்காலத்தில் கொரோனா நோயால் முடங்கிப் போய்க் கிடக்கும் மதுரையையும் நம் கண்முன்னால் கொண்டு வருகிறார். மதுரை மாநகர் பல சோதனைகளை கடந்து தான் . இன்றைக்கு மாமதுரையாக மிளிர்ந்து நிற்கிறது என்பதை நூலாசிரியர் விரிவாக எழுதியுள்ளார். மதுரையின் கடந்த காலத்தை அறிந்து கொள்ள விரும்புபவர்கள் அனைவரும் இந்நூலை வாங்கிப் படிக்க வேண்டும்.

**– இன்சுவை பாரதி**

**நூலாசிரியர் : எஸ் கணேசன்**
**வெளியீடு : சண்முகம் பதிப்பகம், 136,சத்தியமூர்த்தி மெயின் ரோடு, மீனாம்பாள்புரம், மதுரை - 625002 செல்: 9786389946**
**பக்கங்கள் : 72 விலை : ரூ.50**

## நூல் நயம்

# வாழ்வதற்காகப் போராடுவோம்

அரசுத்துறைகளில் இருக்கிற தொழிலாளர்களில் மிகவும் சுரண்டப்படுகிற தொழிலாளர்களாக உள்ளாட்சித்துறை தொழிலாளர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள். அவர்களது அவல வாழ்வை உலகுக்கு எடுத்துச் சொல்லி, அவர்களை உரிமைக்காக அணிதிரட்டுவதன் அவசியத்தை எடுத்துக் கூறுவதற்காகவே, வாழ்வதற்காக போராடுகிறோம் என்கிற இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. மருத்துவத்துறையில் ஒப்பந்தம், வெளிச்சந்தை முறைகளை அனுமதிக்கமாட்டோம் என்று சுகாதாரத்துறை அமைச்சர் அறிவித்திருக்கிறார் . அதேபோன்று சமூக நீதியை உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி தான் தமிழக அரசின் கொள்கை வழி என்று நிதித்துறை அமைச்சர் அறிவித்திருக்கிறார் . இவைதான் இன்றைய தமிழக அரசின் கொள்கை பிரகடனம் என நாம் எடுத்துக் கொள்ளலாம்.சமூக நீதி நாள் கடைபிடிக்கும் தமிழகத்தில். உள்ளாட்சித் துறையில் பணியாற்றும் உள்ளாட்சித் துறை ஊழியர்களுக்கு சமூக நீதி கிடைக்குமா என்ற கேள்வியை இந்நூல் எழுப்பியுள்ளது. நமது கோரிக்கைகள் மனு கொடுப்பதாலோ, கெஞ்சி கேட்பதாலோ நிறைவேற்றப்படுவது இல்லை. மாறாக தீர்க்கமான பல போராட்டங்களின் வழி தான் நமது கோரிக்கைகள் நிறைவேறும்.




தமது கோரிக்கைகளுக்காக 1946 ஆம் ஆண்டிலேயே சைதாப்பேட்டையில் அங்கம்மாள் போலீசாரின் குண்டாந்தடிகளுக்கு பலியானார். திண்டுக்கல்லில் சின்ன ராஜா போலீசாரின் துப்பாக்கி குண்டுக்கு பலியானார். இப்படி எண்ணற்ற தியாகிகள் இரத்தம் சிந்தி, உயிரைத் தந்து, உடமையை இழந்து உறுதியுடன் போராடியதால் தான் பணி நிரந்தரம் கிடைத்தது என்கிற வரலாற்று உண்மையை தொழிலாளர்கள் என்றும் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும் என்ற வரலாற்றை இந்நூலில் சுட்டிக்காட்டப்படுகிறது.

கொரோனா காலத்தில் உயிரையே துச்சமென மதித்து அந்த கொடிய கிருமியை எதிர்த்து போராடிய நம்மால். கோரிக்கைகளுக்காக போராடி உரிமைகளை பெற முடியாதா என்ற நியாயமான கேள்வியும் எழுப்பப்படுகிறது.

உள்ளாட்சித் துறையில் பணியாற்றும் தொழிலாளர்களில் 80 சதமானம் தொழிலாளர்கள் தூய்மைப் பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இவர்களால் தான் நமது நகரங்களும், கிராமங்களும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பராமரிக்கப்படுகிறது.ஆனால் இவர்களின் வாழ்க்கை மட்டும் இருண்டு கிடப்பது ஏன்? என்கிற நியாயமான கேள்வியை இந்நூல் எழுப்புகிறது.

உள்ளாட்சித் துறையில் பணியாற்றும் ஊழியர்களின் உரிமைகள் குறித்த பல்வேறு விவரங்கள் இந்நூலில் கொட்டிக்கிடக்கின்றன. உள்ளாட்சித் துறை ஊழியர் சங்கங்களில் பணியாற்றுவோருக்கு இது ஒரு கையேடாக விளங்கும். சிறந்த நூல் அனைவரும் வாங்கிப்படிக்க வேண்டும். **– சமரன்**

**வெளியீடு : தமிழ்நாடு உள்ளாட்சித் துறை பணியாளர் சம்மேளனம் ஏஐடியுசி, 2/1,கோவூர் வைத்தியநாதன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை சென்னை - 2, போன்: 044.28454869**
**பக்கங்கள் : 48 விலை : ரூ.15**

சுழலும் உலகம்

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

## சர்வதேச கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் அமைப்பின் [IMCWP]

# சிறப்பு இணையவழி மாநாடு அறிவிப்பு

சர்வதேச கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் அமைப்பின் செயல்பாட்டு குழு நவம்பர் 5 மற்றும் 6 ஆகிய நாட்களில் நடைபெற்றது.

கோவிட் 19 பெருந்தொற்று காரணமாக இவ்வமைப்பின் 22–வது கூட்டம் 2022 ஆம் ஆண்டிற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எனினும், கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள், அவற்றின் அனுபவப்பகிர்வு, ஆலோசனைகள், கூட்டு நடவடிக்கை ஆகியவற்றை மேலும் அதிகரிக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, ஒரு சிறப்பு இணையவழி மாநாட்டை வரும் டிசம்பர் 10, 11 மற்றும் 12 ஆகிய நாட்களில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.



1) சர்வதேச அரசியல், பொருளாதாரம் மற்றும் இராணுவ வளர்ச்சிப் போக்குகள்

2) கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகள் மற்றும் மக்கள் போராட்டங்களின் அனுபவங்கள்.

3) ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு, சூழ்ச் சித் திட்டங்கள் மற்றும் தடைகள் ஆகியவற்றை எதிர்த்துப் போராடும் கியூபா, பாலஸ்தீனம் உள் ளிட்ட அனைத்து நாடுகளுக்கும் மக்களுக்கும் ஆதரவளிப்பது.

ஆகிய தலைப்புகள் மீது இம்மாநாட்டில் விவாதங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் செயல்பாட்டு குழு கூட்டத்தில் ரஷ்ய புரட்சியின் 104 வது ஆண்டு குறித்தும் பதிவு செய்யப்பட்டது. உலகை குலுக்கிய அந்த நிகழ்வின் வரலாற்று முக்கியத்துவம் மற்றும் சமத்துவ சமுதாயத்தைக் கட்டமைக்க இருபதாம் நூற்றாண்டில் செங்கொடிப் பதாகையின் கீழ் தொழிலாளர்களும், மக்களும் புரட்சிகர நடவடிக்கைகளில் முன்னேறியதை இக்கூட்டம் வெகுவாகச் சிறப்பித்து குறிப்பிட்டுள்ளது.

தொழிலாளர்கள் ஸ்தாபித்த ‘உலகின் முதல் சோசலிச அரசான’ சோவியத் ஒன்றியம் முன்னெப்போதும் கண்டிராத முன்னேற்றத்தை மிகக் குறுகிய காலத்தில் சாதித்தது; சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னேற்றத்துக்கு தூண்டுகோலாக அமைந்தது; பாசிசத்தை முறியடிப்பதில் மகத்தான பங்களிப்பைச் செய்தது; இதர சோசலிச நாடுகளுடன் இணைந்து உலக அமைதி மற்றும் சமா தானத்தை உத்தரவாதம் செய்தது; காலனியாதிக்க நாடுகளில் எழுச்சியுற்ற தேசிய விடுதலை இயக்கங்கள் வெற்றிபெற ஆதர்சமாக விளங்கியது.

பல கட்சிகள் முன்பே மேற்கொண்ட ஆய்வுகளையும் கருத்திற்கொண்டு, சோவியத் ஒன்றியம் சிதைந்து போனதற்கு காரணமான தவறுகளிலிருந்து சரியான படிப்பினைகளைப் பெற வேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு என்பதை இந்தக் கூட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் அரங்கேறிய எதிர்ப்புரட்சி மாற்றங்களால் ரஷ்யப் புரட்சியின் வரலாற்று முக்கியத்துவத்தையும், சோவியத் ஒன்றியத்தின் மகத்தான பங்களிப்பையும் மறுதலிக்க முடியவில்லை. ஏகாதிபத்திய காட்டுமிரண்டித்தனம் மற்றும் முதலாளித்துவ சுரண்டல்களின் வேதனைகளுக்கு சோஷலிமே தீர்வாகும்.

நிகழ்காலத்திற்கும் – வருங்காலத்திற்கும் தேவை சோஷலிசமே என்று இக்கூட்டம் முழங்கியது.

## அமெரிக்காவின் உயிரியல் ஆயுத ஆய்வு கூடங்களுக்கு எதிராக

# 16 நாடுகளைச் சார்ந்த 18 கம்யூனிஸ்ட் கட்சிகள் தீர்மானம்

மக்களைக் கொன்று குவித்து, நாடுகளின் சமூக, பொருளாதார வளர்ச்சியை முடக்கக் கூடிய கொடிய நோய்கள் மற்றும் தீநுண்மிகளை அறிவியல் உலகம் உயிரியல் ஆயுதங்கள் என்று குறிப்பிடுகிறது.

உயிரியல் ஆயுதங்களின் பயன்பாடு மற்றும் பரவல் காரணமாக அதிகரித்து வரும் அச்சுறுத்தல் குறித்தும், அதன் பயன்பாடு மற்றும் ஆயுத ஆய்வுக்கூடங்கள் அழிக்கப்பட வேண் டும் என்ற நோக்கத்தை மையமாகக் கொண்டு மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. ஜார்ஜியா, கசகஸ்தான், லத்வியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நான்கு நாட்டு கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டு முயற்சியாக நவம்பர் 3ஆம் நாள் இம்மாநாடு கூட்டப்பட்டது.

அர்மீனியா, அசர்பைஜான், ஹங்கேரி, துருக்கி, கிர்கிஸ்தான், இத்தாலி, உக்ரைன் மற்றும் நார்வே உள்ளிட்ட 16 நாடுகளைச் சார்ந்த 18 கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் இம்மாநாட்டில் பங்கேற்றன.

மாநாட்டின் நிறைவாக வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது பின்வருமாறு: ஏகாதிபத்திய உள்முரண்பாடுகள் காரணமாக மூளும் போர்களில் பயன் படுத்தப்படும் உயிரியல் ஆயுதங்கள் மூலம் மக்களுக்கு மாபெரும் பாதிப்புகள் ஏற்படக்கூடும். எனவே அணு ஆயுதங்கள் மற்றும் ரசா யன ஆயுதங்கள் போல உயிரியல் ஆயுதங்களும் பேரழிவை உண்டாக்கும் ஆயுதங்கள் ஆகும் என்று இம்மாநாடு கருதுகிறது. இது போன்ற ஆயுதங்கள் உற்பத்தி மற்றும் பரவலை கட்டுப்படுத்த வேண்டிய சர்வதேச அமைப்புகள் பன்னாட்டு கார்ப்பரேட்



நிறுவனங்கள் மற்றும் ஏகாதிபத்திய சக்திகளின் கைப்பாவையாக மாறி விட்டன. இன்றும், பல நாடுகளில் உயிரியல் ஆயுதங்களின் உற்பத்தி தொடர்ந்து வருகிறது என்று இம்மாநாடு ஆழ்ந்த கவலையைப் பதிவு செய்கிறது.

அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகனின் திட்டப்படி, உலகம் முழுவதும் 1495 ஆயுத ஆய்வுக்கூடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக்கூடங்கள் எந்த நாட்டில் அமைக்கப்பட்டுள்ளதோ, அந்நாட்டிலுள்ள அரசாங்கத்திற்கு கூட இவை கட்டுப்படுவதில்லை. மேலும் இந்த ஆய்வுக்கூடங்களின் நடவடிக்கைகள் வெளிப்படைத்தன்மை கொண்டவைகளாக இல்லை. இது போன்ற ஆய்வுக்கூடங்கள் லத் தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்கா மற்றும் ஆசிய கண்டங்களில் உள்ள நாடுகளில் அதிக அளவில் இயங்கி வருகின்றன. பேரழிவை உண்டாக்கக்கூடிய உயிரியல் ஆயுதங்கள் துறைக்கு கடந்த 20 ஆண்டுகளில் 100 பில் லியன் டாலரை அமெரிக்கா செலவு செய்துள்ளதாக தகவல்கள் தெரியவந்துள்ளது. இந்த உண்மைகளை மூடி மறைத்திட, சில பிராந்தியங்களில் இயற்கையாகவே பரவிய நோய்களின் பெயரில் இந்த உயிரியல் ஆயுதங்களின் செயற்கையான தோற்றம் மறைக்கப்படுகிறது.


அமெரிக்க ஆயுத ஆய்வுக்கூடங்கள் அமைந்துள்ள நாடுகளில் குறிப்பாக ஆசிய மற்றும் சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்த நாடுகளில் வித்தியாசமான பல்வேறு நோய்கள் மக்கள் மற்றும் கால்நடைகள் மத்தியில் அடிக்கடி பரவி வருகிறது. இதன் விளைவாக அந்நாடுகளின் விவசாயத் துறை கடும் நெருக்கடிக்கு உள்ளாகி வருகிறது. சில உயிரியல் ஆயுதங்கள் உணவு பற்றாக்குறையை ஏற்படுத்தி பசிக்கொடுமையை அதிகரிக்கச் செய்யும் ஆற்றல் கொண்டவை ஆகும். எனவே, இத்தகைய அபாயகரமான ஆயுத உற்பத்தி திட்டங்கள் அனைத்தையும் நிறுத்தி விட வேண்டும் என்றும், இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி உள்ளிட்ட அனைத்து செல்வ வளங்களும் கோவிட் 19 பெருந்தொற்று உள்ளிட்ட நோய்களில் இருந்து மக்களைக் காப்பாற்ற மடைமாற்றம் செய்யப்பட வேண்டும் என்றும் இம்மாநாடு கோருகிறது.

இத்தகைய அழிவுகரமான போக்கிற்கு எதிராக வெகுமக்கள் அமைப்புகள், தொழிற்சங்கங்கள், விஞ்ஞானிகள், மருத்துவத் துறையினர், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் இணைந்து ஏகாதிபத்தியம் மற்றும் போருக்கு எதிரான மக்கள் இயக்கத்தைப் பலப்படுத்த வேண்டும் என்றும் இம்மாநாடு அறைகூவல் விடுத்துள்ளது.

# சட்டத்தின் வழியில் நீதித்துறையா? ஆளுவோருக்கு ஏற்றவாறு நீதித்துறையா?



த.லெனின்






**சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால் கோடாமை சான்றோர்க் கணி**

முன்னே தான் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர் தூக்கும் துலாக்கோல்போல் அமைந்து, ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவுநிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாகும் என்கிறது குறள்.

ஆனால், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக செயல்பட்ட சஞ்சீவ் பானர்ஜி எந்தவித உரிய காரணமும் இன்றி திடீரென 70 நீதிபதிகளுக்கு மேல் பணியாற்றும் பாரம்பரியம்மிக்க சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து நான்கு நீதிபதிகளே பணியாற்றும் மேகாலயா உயர்நீதிமன்றத்திற்கு கொலீஜியம் பரிந்துரையின்படி குடிரசுத்தலைவரால் பணியிட மாற்றம் செய்யப் பட்டுள்ளது ஏன்? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

இந்தியாவிலேயே மொழியின் பெயரைக் கொண்டுள்ள ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். திருவள்ளுவரின் மண்ணிற்கு தான் வந்திருப்பது பெருமை அளிக்கிறது. தமிழகத்தை மற்றொரு தாய்வீடாக நான் கருதுகிறேன். மிகப் பழமையான தமிழ்மொழியை இன்னும் கோடிக் கணக்கானோர் பெருமிதத்தோடு பேசி வரு கிறார்கள். பாரம்பரியம், இசை, இலக்கியம், நட னம், கலாச்சாரம் என பல தனித்தன்மைகளோடு சிறந்து விளங்கும் தமிழ்நாடு என்னுடைய மாநிலம். அப்படிப்பட்ட பாரம்பரியம் மிக்க சென்னை உயர்நீதிமன்றத்தற்கு நான் வந்திருப்பது பெருமையாக இருக் கிறது என்று தனக்கு வரவேற்பு அளிக்கப்பட்டபோது சஞ்சீவ் பானர்ஜி பேசிய பேச்சுக்களாகும்.

அவர் காலத்தில் அவர் வழங்கிய தீர்ப்புகள் மாநில மொழி உரிமை மற்றும் பன் மைத்துவத்தை பாதுகாக்கும் வகையில் அமைந்திருந்தது.

ஒன்றிய அரசு நடத்தும் கிஷோர் வைக்கியனிக் புரோத் சாகன் யோஜனா தேர்வுகள் அனைத்தும் அனைத்து மொழிகளிலும் நடைபெற வேண்டும் என்பது தொடர்பான வழக்கு தலைமை நீதிபதி சஞ்சீவ் பானர்ஜி, நீதிபதி எம்.துரைசாமி அமர்வுக்கு முன்பு விசாரணைக்கு வந்தது. அவ்வழக்கில் அறிவியல் ஆர்வம் உள்ள கிராமப்புற மாணவர்களுக்கு ஆங்கிலம் ஒரு தடையாக இருக்கக் கூடாது. அவர்கள் எந்த வகையிலும் குறைந்தவர்கள் இல்லை. இந்தி, ஆங்கிலம் தவிர பிற மொழிகளில் ஏன் தேர்வு நடத்தக் கூடாது? அனைத்து மாநில மொழிகளிலும் தேர்வு நடத்தப்பட வேண்டும். இந்தியை புற வாசல் வழியாக நுழைக்க முற்படுகிறீர்களா? என்று அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பியிருந்தனர். அத்துடன் அனைத்து மொழிகளிலும் தேர்வு நடத்துவது குறித்து ஒன்றிய அரசு விளக்கமளிக்க உத்தரவிட்டனர்.

அதுபோலவே, நீட் தேர்வு பாதிப்பு குறித்து ஆய்வு நடத்த, தமிழ்நாடு அரசு நியமித்த ஏ.கே.ராஜன் தலைமையிலான குழுவை ரத்து செய்ய வேண்டும் என்று தமிழக பா.ஜ.க. பொதுச் செயலாளர் கரு.நாகராஜன் வழக்கு ஒன்றை தொடர்ந்திருந்தார். இவ்வழக்கில் ஒன்றிய அரசு சார்பில் நீட் தேர்வு முறையாக கண்காணிக்கப்படுகிறது, தமிழக அரசு குழு நியமிக்க வேண்டிய அவசியமில்லை, இது மாநில அரசின் அதிகார வரம்பு மீறிய செயல் என்று வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் தலைமை நீதிபதி சஞ்சீவ் பானர்ஜி, நீதிபதி செந்தில்குமார், இராமமூர்த்தி அமர்வுக்கு முன்பு விசா ரணைக்கு வந்தது. அதில் அரசுப் பள்ளி மாணவர்கள், சமூக, பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதை கண்டறிய இந்தக் குழு ஏற்படுத் தப்பட்டுள்ளது. இது உச்சநீதிமன்ற உத்தரவுக்கு எதிரானது என்று சொல்ல முடியாது. மாநில அரசின் வரம்பையும் மீறியதாக இல்லை என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தேர்தல் ஆணையத்தின் சட்டப்பேரவை தேர்தல் நடவடிக்கை தான் தமிழகத்தில் கொரோனா இரண்டாவது அலை பரவ காரணமாக உள்ளது என்று இவர் குறிப்பிட்டதுடன் தேர்தல் ஆணையத்தின் மீது கொலை வழக்கு பதிவு செய்து ஏன் நடவ டிக்கை எடுக்கக் கூடாது? என்றும் கேட்டிருந்தார்.

ஸ்டெர்லைட் ஆலை வழக்கில் மக்களைக் கொன்று விட்டு, அதற்கு இழப்பீடாக பணம் வழங்கி விட்டால் அரசின் கடமை முடிந்துவிடுமா? மக்களுக்கான நீதியை பெற்றுத் தர வேண்டும் என்றும் நீலகிரியில் டி.23 புலியை உயிருடன் பிடிக்க வேண்டும் என்றும் மக்கள் நலன் சார்ந்து மாநில உரிமைகள் சார்ந்து நீதியின் வழியில் பல்வேறு தீர்ப்புகளை, உத்தரவுகளை வழங்கியிருந்தார் நீதிபதி சஞ்சீவ் பானர்ஜி. இப்படிப்பட்ட தீர்ப்பகளை வழங்கியதால்தான் அவர் மாற்றப்பட்டாரா?

இதுபோலவே கடந்த 2019ஆம் ஆண்டு சென்னை உயர்நீதி மன்ற தலைமை நீதிபதியாக இருந்த விஜயா கமலேஷ் தகில் ரமாணியை மேகாலயா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக மாற்றி உச்சநீதிமன்ற கொலீஜியம் உத்தரவிட்டது. இதனை மறு பரிசீலனை செய்ய உச்சநீதிமன்ற கொலீஜியத்திற்கு கோரிக்கை வைத்திருந்தார்.

ஆனால் அதனை ஏற்க மறுத்து விட்டது. இதனையடுத்து தனது பதவியை ராஜினாமா செய்வதாக குடியரசுத் தலைவருக்கு கடிதம் எழுதியிருந்தார். இந்த நிலையில் குடியரசுத் தலைவர் ராஜினாமா கடிதத்தை ஏற்றுக் கொண்டார். அதே போன்ற ஒரு நிலையை இப்போதும் சென்னை உயர்நீதிமன்றம் சந்தித்து வருகிறது.

வடகிழக்கு டெல்லியில்நடைபெற்ற கலவர வழக்கு டெல்லி உயர்நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு வந்தபோது சிபிஐக்கு எதிராக கருத்துச் சொன்ன நீதிபதி வினோத் யாதவ் மற்றும் 11 நீதித்துறை அலுவலர்கள் பணியிடம் மாற்றப்பட்டனர். அது போலவே டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த நீதியரசர் முரளீதர் காவல்துறையின் அத்துமீறிய தாக்குதலைக் கண்டித்ததுடன் டெல்லி கலவரம் நடந்தபோது மூன்று நாட்களாக என்ன செய்து கொண்டிருந்தது என்ற கேள்வி எழுப்பிய காரணத்தால் அவர் உடனடியாக பஞ்சாப் – ஹரியான உயர்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்ட செய்தியையும் நாடு அறிந்ததே.

**சட்டத்தின் வழியில் ஆட்சி என்பதற்கு பதிலாக ஆட்சியாளர் களுக்கு ஏற்ற நீதி சேவை என்பதாக நமது நீதி பரிபாலன முறையை மாற்றி அமைக்கும் பாசிசத்தின் கோரக் கரங்களை மக்கள் அறிந்து கொள்வது அவசியமாகும்.**

ஆனால், சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சஞ்சீவ் பானர்ஜி பணியிட மாறுதல் ஆணையை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞர்கள் 237 பேர் கொலீஜியத்திற்கு கடிதம் எழுதினர்.

1993ஆம் ஆண்டு நீதித்துறையின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் வகையில் ஒரு புதுமையான முறைமையான கொலீஜியம் உருவாக்கப்பட்டது. இது நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டதல்ல. மாறாக உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும்.

இதனை பாஜக அரசு விரும்பாது தேசிய நீதித்துறை ஆணையத்தை உருவாக்க உத்தரவிட்டிருந்தது. அதனையும் கடந்த 2015ஆம் ஆண்டு தீர்ப்பின் வழியே நீக்கிதான் இந்த கொலீஜியம் தொடர்கிறது. ஆனால் வெளிப்படைத்தன்மை என்னவானது? என்பதுதான் கேள்வி.

இதில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மூத்த நான்கு நீதிபதிகள் அடங்கிய குழுவே கொலீஜியம் ஆகும். அதுபோல உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி நான்கு மூத்த நீதிபதிகள் அடங்கியதும் கொலீஜியம்தான்.

ஆனால் உச்சீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த ஏ.போப்டே காலத்தில் ஒரு பரிந்துரை கூட கொலீஜியம் முன் வைக்கவில்லை. காரணம் ஒத்த கருத்து எட்டப்படாததே ஆகும். ஆனால், இப்போது உயர்நீதிமன்ற மூத்த நீதிபதிகள் ஏன் பந்தாடப்படுகிறார்கள்? இந்த முடிவுகள் குறித்து வெளிப்படையான விவாதங்கள் கொலீஜியத்தில் எழுந்ததா? என்பதெல்லாம் மக்களிடம் விளக்க வேண்டிய பொறுப்பு நீதித்துறைக்கு உள்ளது.

**மக்களை விட நீதித்துறை உயர்ந்தது அல்ல. நீதியே மக்களுக்கானதுதான். ஆனால் இன்று ஆளும் வர்க்கம் சார்ந்து நிலப்பிரபுத்துவ பழமைவாத கண்ணோட்டத்தோடு நீதிமன்றங்கள் செயல்படுவது நமது அரசமைப்பு சட்டத்தின் விழுமியங்களுக்கு நேர் எதிரானது.**

கொலீஜியத்தின் பணியிடை மாற்றம் குறித்த விதி முறைகளில் 25.2 வது பத்தியில் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி பணியிடமாற்றம் நடைபெறும் உயர்நீதிமன்றம் குறித்த ஞானம் கொண்ட உச்சநீதிமன்ற நீதிபதிகளின் கருத்தையும் கேட்டறிந்து செயல்பட வேண்டும் என்றும், 25.3வது பத்தியில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மூத்த நான்கு நீதிபதிகள் குழு பணியிடை மாற்றம் செய்யப்படும் நீதிபதியின் கருத்தை அறிந்தும் அவரது விருப்பமான உயர்நீதிமன்றம் குறித்து அறிந்தும், பணியிடம் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

உச்சநீதிமன்ற தலைமைநீதிபதி என்.வி.ரமணா எப்போதும், வெளிப்படைத் தன்மை பற்றியே அடிக்கடி பேசி வருகிறார். மக்கள் விரும்புவதும் அதுதான். கொலீஜியத்தில் என்ன நடந்தது? வெளிப்படையாக நாட்டு மக்களுக்கு அறிவிப்பதே நீதித்துறையின் மான்பை காக்கும் செயல். காக்குமா நீதித்துறை?

தொடர்புக்கு: **94444 81703**















JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 20.11.2021 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

## கல்வியை தனியாரிடம் விடாதே!

# சாதிய ஒடுக்குமுறையும், பாலியல் குற்றங்களும் அதிகரிப்பதை தடுத்திடுக!

### இளைஞர் பெருமன்ற மாநிலக்குழுக்கூட்டம் தீர்மானம்




**அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலக்குழுக் கூட்டம் திருச்சியில் தோழர் ப.மாணிக்கம் இல்லத்தில் நடைபெற்றது. மாநிலத்தலைவர் த.கு.வெங்கடேசன் தலைமை தாங்கினார். மாநிலக்குழு உறுப்பினர் கலை.அஸ்லினி கொடியேற்றினார்.**

மாநிலத்துணைச் செயலாளர் வே.வசந்தகுமார் அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார்.

மாநிலச் செயலாளர் க.பாரதி வேலை அறிக்கை மற்றும் அமைப்பு நிலை அறிக்கையை முன்வைத்து உரையாற்றினார். மாநிலத் துணைச் செயலாளர் இரா. தமிழ்பெருமாள், மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் சீ.தினேஷ், மாநிலத் தலைவர் மௌ.குணசேகர் உள்ளிட்ட மாநிலக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நவம்பர் 24,25,26, 27 ஆகிய தேதிகளில் மாநில அளவிலான அரசியல், தத்துவ பயிற்சி முகாமினை கோவை ஆணைமலையில் சிறப்பாக நடத்துவது, இளைஞர் பெருமன்ற தேசியக்குழு கூட்டத்தை டிசம்பர்.8,9 ஆகிய தேதிகளில் சேலத்தில் சிறப்பாக நடத்துவது இளம்பெண்கள் மாநில மாநாட்டை 2022 பிப்ரவரி முதல்வாரத்தில் திருச்சியில் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது...

நீட்தேர்வுகாரணமாக தொடர் தற்கொலைகள் நடந்து வருகிறது.

பல்வேறு அரசியல் இயக்கங்களும் மாணவர் இளைஞர் அமைப்புகளும் மாணவர்களும் பொதுமக்களும் நீட்தேர்வை ரத்து செய்யக்கோரி தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

ஆனால் இதற்கெல்லாம் செவி சாய்த்து கோரிக்கையை பரிசீலிக்காத ஒன்றிய மோடி அரசை இளைஞர் பெருமன்றம் தமிழ்நாடு வன்மையாக கண்டிப்பதோடு தமிழ்நாடு சட்டமன்றத்தில் நீட்தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு கேட்டு நிறைவேற்றப்பட்ட மசோதாவுக்கு குடியரசு தலைவர் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் தொடர்ந்து பாலியல் குற்றங்களும் பாலியல் வன்புணர்வு மற்றும் கூட்டு வன்புணர் வும் அதிகரித்து வருவது அதிர்ச்சியளிக்கிறது..

இத்தகைய பாலியல் குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு கடும் தண்டனை வழங்குவதோடு சென்னை பால சேஷாத்திரி பள்ளி மற்றும் கோவை சின்மயா பள்ளிகளில் நடைபெற்ற பாலியல் குற்றங்கள் தனியார் பள்ளிகளின் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்குகிறது.

கல்வி தனியார் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருப்பது சமூகத்தில் சாதிய ஒடுக்குமுறையையும் பாலியல் குற்றங்களையும் அதிகப்படுத்துகிறது. எனவே தனியார் பள்ளி மற்றும் கல்லூரிகளை தமிழ்நாடு அரசு தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும். பாதிக்கப்பட்ட மாணவிகளுக்கு உரிய நீதியையும், நிவாரணத்தையும் வழங்க வேண்டும். போக்சோ சட்டத்தை வலுப்படுத்துவதோடு மாநில மகளிர் ஆணையத்தை திறம்பட செயல்படுத்த வேண்டும்.

தற்போது தமிழ்நாடு முழுவதும் டிப்ளமோ படித்த மாணவர்கள் 2லட்சத்திற்கும் அதிகமானோர் எந்த வித வேலை வாய்ப்புமின்றி அவதிப்பட்டு வருகின்றனர்.

ஏற்கனவே டிப்ளமோ படித்தவர்களுக்கு இருந்த சொற்ப அரசு வேலைவாய்ப்புகளையும் பறிக்கும் விதமாக தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் செயல்படுகிறது...

ஏற்கனவே பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலை துறை பணிகளில் நீண்ட காலமாக டிப்ளமோ சிவில் மாணவர்களுக்கான இளநிலை வரை தொழில் அலுவலர் பணி நியமனங்கள் நடைபெற வில்லை.

தற்போது தான் அதற்கான காலிப் பணியிடங்கள் 537 இடங்களுக்கான தேர்வுகள் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் மூலம் நடைபெற்றுள்ளது.

ஏற்கனவே வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித்துறை தெரிவு செய்து பணியாளர்களை நியமனம் செய்தனர்.. ஆனால் டி.என்.பி.எஸ்சி தேர்வு நடத்துவது சரியானதல்ல. ஏற்கனவே இருந்த நடைமுறையை பின்பற்ற வேண்டும். மேலும் டி.என்.பி.எஸ்சி நடத்திய தேர்வில் டிப்ளமோ மாணவர்கள் மட்டுமில்லாமல் வேறு உயர் கல்வி படித்த மாணவர்களையும் தேர்வில் இணைத்திருப்பது,டிப்ளமோ மாணவர்களுக்கு என இருந்த சொற்ப வேலைவாய்ப்பையும் பறிப்பதாகும்.

ஆகவேதமிழ்நாடு அரசுபணியாளர் தேர்வாணையம் நடத்திய இளநிலை வரை தொழில் அலுவலர் பணிக்கான தேர்வினை ரத்து செய்து டிப்ளமோ படித்தவர்களின் தகுதிக்கானை வேலையை டிப்ளமோ சிவில் படித்தவர்களுக்கே வழங்கவேண்டும் என தமிழ்நாடு அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறோம். என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தோழர் நடேச. தமிழார்வன் படுகொலை: கண்டன ஆர்ப்பாட்டம்!

**மதுரை:** மதுரையில் எம்.நந்தாசிங் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன், சி.தாமஸ், பி.ராஜலட்சுமி, ஏஐடியூசி போக்குவரத்து கழக சங்கத்தின் தலைவர் உசிலை என்.ஜீவா ஆகியோர் கண்டன உரையாற்றினர். ஆர்.ஜெயராமன், ஆர்.முருகன், ஜனசக்தி என்.ஜீவா உட்பட பலர் பங்கேற்றனர்.

**நெல்லை மாவட்டம்:** நெல்லையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத் திற்கு மாவட்ட துணைச் செயலாளர் செ. லெட்சுமணன் தலைமை தாங்கினார். ஆர்.ரங்கன், எம்.எஸ்.பாலகிருஷ்ணன், என்.உலகநாதன், ஏ.முத்து கிருஷ்ணன், அப்பாதுரை, பி.சுரேஷ், எஸ்.நல்லதம்பி, பி.பரமசிவன், இ.துர்கைமுத்து, முத்துகிருஷ்ணன், தஞ்சை கண்ணன், அம்பை தாவிஃப், டவுன் கிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**தூத்துக்குடி மாவட்டம்:** தூத்துக்குடி போல்டன்புரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கட்சியின் மாவட்டக்குழு உறுப்பினர் பி.எம். முனியசாமி தலைமை தாங்கினார். ஓட்டப்பிடாரம் ஒன்றிய செயலாளர் அழகு, மாநகர செயலாளர் எஸ்.பி. ஞானசேகர், நகர வங்கி ஊழியர்கள் சங்க நிர்வாகி ஆர்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தில் சேகர், சுப்ரமணியன், சகாயராஜ், காளி, அசோக் மேத்தா, எட்வர்ட், பிரபாகரன், தாமரை செல்வன், மால்ராஜ், முத்து கிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**விழுப்புரம் மாவட்டம்:** விழுப்புரம் ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர்.

**மயிலாடுதுறை மாவட்டம்:** சீர்காழி ஒன்றியத்தில் புதிய பேருந்து நிலையம் அருகில் ஒன்றியச் செயலாளர் மு. செல்லப்பன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் அ. சீனிவாசன் கண்டன உரையாற்றினார். வி.ச.மாவட்ட செயலாளர் பெ.வீரராஜ், ஏஐடியூசி மாவட்ட செயலாளர் கே.ராமன், ஒன்றிய துணை செயலாளர் வே.நீதிசோழன், ஒன்றிய நிர்வாக குழு அ.பாஸ்கரன், எஸ். ராமச்சந்திரன், ப.ஜெயகுமார், மா. பிரபாகரன் மற்றும் தோழர்கள் கலந்துகொண்டனர்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் மயிலாடுதுறை, செம்பனார் கோவில், குத்தாலம், கொள்ளிடம் ஆகிய நான்கு ஒன்றியங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**தருமபுரி மாவட்டம்:** தருமபுரி தொலைபேசி நிலையம் அருகில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் எஸ். தேவராசன் தலைமை வகித்தார். மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வரன், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கமலாமூர்த்தி, கே.மணி, எம்.பெருமாள் மற்றும் ஆர்.சுதர்சனன், என். மனோகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**வேலூர் மாவட்டம்:** வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட அரியூர் திருமலைக்கோடி பகுதியில் எம்.சரோஜா தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் வேலூர் மாநகர செயலாளர் ஏழுமலை, மாணிக்கம், சங்கர், ஜி.செந்தில்நாதன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**தென்காசி மாவட்டம் :** இராயகிரியில் நகர செயலாளர் எஸ். சமுத்திரம் தலைமையில் ஏஐடியூசி மாவட்ட செயலாளர் ஜி.சுப்பையா, மாவட்ட குழு உறுப்பினர் இரா.சமுத்திரக்கனி, மாதர் சங்கம் மாவட்ட செயலாளர் பி.கந்தம்மாள்,

சிவகிரியில் நகர பொருளாளர் வி.ராஜேந்திரன் தலைமையில் மாவட்ட செயலாளர் டி.இசக்கித்துரை நகர செயலாளர் பி.பாலசுப்பிரமணியன், விச தலைவர் கருப்பையா,

புளியங்குடியில் ஒன்றிய செயலாளர் ப.வேலு தலைமையில் ஏஐடியூசி மாவட்ட செயலாளர் டி.சுப்பையா ஒன்றிய துணை செயலாளர் முருகன்,

திருவெங்கடத்தில் விச தலை வர் இருதய செல்வராஜ் தலைமையில் ஒன்றிய செயலாளர் ஜே.அந்தோணிராஜ், மாவட்ட குழு கணேசன்,

சங்கரன்கோவிலில் ஒன்றிய செயலாளர் குருசாமி தலைமையில் ஒன்றிய துணை செயலாளர் கனகராஜ், மாவட்ட குழு உறுப்பினர் மனுவேல்ராஜ் விச




தலைவர் வேலாயுதம், தென்காசியில் நகர செயலாளர் ம.கணேசன் தலைமையில் கிருஷ்ணன்,

செங்கோட்டையில் ஏஐடியூசி ஏ.சாமி தலைமையில் தாலுகா செயலாளர் மாரியப்பன், தாலுகா துணை செயலாளர்கள் பழனிச்சாமி, சுந்தர், நகர செயலாளர் சுப்பிரமணியன்,

கடையத்தில் விச தலைவர் கே. சட்டநாதன் தலைமையில் மாநில குழு உறுப்பினர் எஸ்.வேலாயுதம், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பரமசிவம், ஆர்.ஈஸ்வரன் மற்றும் மாவட்டம் முழுவதும் தோழர்கள் திரளாக கலந்து கொண்டு படுகொலைக்கு எதிராக முழக்கமிட்டனர்.

**திருச்சி புறநகர்:** மணப்பாறை பேருந்து நிலையம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் தங்கராசு தலைமை வகித்தார் நகர செயலாளர் ஜனசக்தி உசேன் முன்னிலை வகித்தார். திருச்சி புறநகர் மாவட்ட செயலாளர் த.இந்திரஜித் கண்டன உரை நிகழ்தினார்.

திருச்சி புறநகர் மாவட்ட துணை செயலாளர் பழனிசாமி, வையம்பட்டி ஒன்றிய செயலாளர் சண்முகானந்தம், மாவட்ட குழு உறுப்பினர்கள் உட்பட நகர ஒன்றிய நிர்வாகிகள் கிளை செயலாளர்கள் கலந்து கொண்டு கண்டன முழக்கமிட்டனர்.

**இராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடியில் நகர் செயலாளர் என்.எஸ். பெருமாள் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏஐடியூசி மாவட்ட பொதுச்செயலாளர் என். கே.ராஜன், சிபிஐ மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.பி.ராதா, வி.ச. மாவட்ட தலைவர் கடலாடி கருணாநிதி, மன்னார்குடி ஒன்றிய துணைச் செயலாளர் தனிக்கொடி, தமிழர் தேசிய விடுதலை இயக்கத்தின் பொறுப்பாளர் வழக்கறிஞர் பசுமலை உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர்.

**திருவள்ளூர் மாவட்டம்:** கும்மிடிப்பூண்டியில் ஒன்றியச் செயலாளர் ஜெ.அருள் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. என்.செங்கல்வராயன், இ.செல்வம், எம்.சிவா, இ.ஈஸ்வர், சுரேஷ், பி.மணிகண்டன், ஏ.ஏழுமலை ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஏஐடியூசி மாநில து.தலைவர் ஏ.எஸ். கண்ணன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் கே.கஜேந்திரன், வி.இ. ராஜீவ் காந்தி ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.